HOLY JESUS
PRAYER MINISTRIES

ஜெப பாரம்

உன்னத
தகப்பனின் பாரம்
அறிந்து ஜெபிக்க!

தேவஊழியன்
அகஸ்டின் S. சசிகுமார்

ஜெப பாரம்

Prayer Burden

தேவனே! என் பாரத்தை உம்மிடத்தில்
கொண்டு வந்ததுபோதும்.
உம் பாரத்தைச் சுமக்க என்னை
அர்ப்பணிக்கிறேன்.

தேவஊழியன்
அகஸ்டின் S. சசிக்குமார்

“இந்த வார்த்தைகளைக் கேட்டபோது
நான் உட்கார்ந்து அழுது,
சில நாளாய்த் துக்கித்து,
உபவாசித்து,
மன்றாடி,
பரலோகத்தின் தேவனை நோக்கி...”
(நெகேமியா 1:4)

Copy Rights :
Pr. Augustin S. Sasikumar
Holy Jesus Church
ESI Ring Road, Mookandapalli,
Hosur - 635 109.
Krishnagiri Dist.,
Tamil Nadu, S. India
Land line: +91 4344 610973; Mobile: 99940 65545
Email: holyjesusprayerministry@gmail.com

முதல் பதிப்பு: ஜனவரி 2024
First Edition: January 2024

Printed at:

Shenbagam Prints & Publishers, Sivakasi

என்னுரை

இந்த புத்தகம் உங்களின் சாதாரணமான ஜெப வாழ்க்கையைத் தூக்கியெறியும் என்பதில் சந்தேகமில்லை. பாரமற்ற ஜெபங்களை அறவே அகற்றி பாரமுள்ள ஜெபத்திற்கு நேராக இது உங்களை நடத்தும் என்பது உறுதி!

எழுப்புதலைக் கண்ட தேசங்களின் சரித்திரத்தை நாம் புரட்டிப் பார்த்தால் சிலுவையின் இரத்தத்தோடு இணைந்து சில மன்றாட்டு ஜெபவீரர்களின் கண்ணீர் நிறைந்த பாரமுள்ள ஜெபங்களும் அதில் கலந்திருப்பதைக் காணமுடியும். பரந்து விரிந்த நம்முடைய பாரத தேசத்தின் இரட்சிப்பிற்காக... எத்தனையோ பரிசுத்தவான்களின் தியாகம் நிறைந்த வாழ்க்கை மற்றும் தங்களையே ஊற்றிக்கொடுத்த பாரமுள்ள ஜெபங்கள் தான் நம்முடைய தேசத்தின் மகிமையான எழுப்புதலுக்கு வித்திட்டது.

கர்த்தர் தம் தீர்க்கதரிசிகளின் மூலமாக தம்முடைய பாரத்தை வெளிப்படுத்துவதை வேதத்தின் பல தீர்க்கதரிசனப் புஸ்தகங்களில் காணமுடியும். குறிப்பாக, ஏசாயா தீர்க்கதரிசி பாபிலோன்மேல் வரக்கண்ட பாரம், ஆகாஸ் ராஜா மரணமடைந்த வருஷத்திலே உண்டான பாரம், மோவாபின் பாரம், தமஸ்குவின் பாரம், எகிப்தின் பாரம், கடல் வனாந்தரத்தின் பாரம், தூமாவின் பாரம், அரபியாவின் பாரம், தரிசனப் பள்ளத்தாக்கின் பாரம், தீருவின் பாரம் என்று ஏசாயாவின் பல அதிகாரங்களிலும், மேலும் எசேக்கியேல் (12:10), எரேமியா (23:33), மல்கியா (1:1), சகரியா (12:1), ஆபகூக் (1:1) மற்றும் நாகூம் (1:1) ஆகிய தீர்க்கதரிசனப் புஸ்தகங்களிலும் அவருடைய பாரம் அவருடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகள் மூலம் வெளிப்படுவதை கண்ணாரக் காண முடிகிறது.

இவ்விதம் தேவனால் அந்தத் தீர்க்கதரிகளுக்கு தரிசனத்திலே, சொப்பனத்திலே காண்பிக்கப்பட்டு அவர்களுடைய இருதயத்தில் வைக்கப்பட்ட பாரத்தைப் பார்க்கும்போது... தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளுக்கு தேசங்களின்மேல் வரவிருக்கும் அழிவை எவ்வண்ணமாக எடுத்துரைத்து அதற்காகப் பாரப்பட வைத்திருக்கிறார் என்பதையும், தம் ஜனங்கள்மேல் தாம் கொண்டிருந்த அவருடைய நிச்சயமான நித்திய அன்பையும் அறிந்துகொள்ள முடிகிறது. இப்படி அவர் பல சமயங்களில் தம் ஜனங்களுக்காகப் புலம்புவதையும், அங்கலாய்ப்பதையும் பார்க்கும் போது அவரது உள்ளம் எவ்வளவாய் உடைந்திருக்கிறது என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. அந்த பாரத்தைத் தான் அவர் நமக்குள் ஜெபபாரமாக வைக்கிறார். அந்த பாரத்தைப் பெற்றவர்களால் மாத்திரம்தான் பல மணிநேரங்கள் அவருடைய சமுகத்தில் கண்ணீரோடு மன்றாட முடியும். அந்த காரியத்தைக் குறித்து எழுதும் படியான விருப்பத்தை அவர் எனக்குள் ஏற்படுத்தினார். அதினால் பிறந்ததுதான் ஜெபபாரம் எனும் இந்த புத்தகம்.

தேவன் தமது உள்ளத்தின் வலியையும், பாரத்தையும் சுமக்கவே தமது மன்றாட்டு வீரர்களைத் தேடிக்கொண்டிருக்கிறார் (எசே.22:30). அவருடைய எதிர்ப்பார்ப்பானது பாலைவனத்தில் தோன்றி மறையும் கானல்நீரைப்போல் ஆகாதபடிக்கும், அவரது எதிர்ப்பார்ப்பில் ஏமாற்றம் வராதபடிக்கும், அவருடைய பாரத்தில் பங்கெடுத்து இரவும், பகலும் அவரை நோக்கிக் கூப்பிடவே நாம் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம். அவருடைய உள்ளத்தை உடைக்கும் காரியங்களால் நம்முடைய உள்ளங்களும் உடைக்கப்பட அர்ப்பணிப்பதுதான் மன்றாட்டு ஜெபவீரர்களுக்குக் கொடுக்கப்பட்ட மகிமையான கிருபையாகும். எப்படியாகிலும் இந்த புத்தகத்தை வாசிக்கிற நீங்களும் அவருடைய பாரத்தில் பங்கடைய வேண்டும் என்கிற தரிசனத்தோடும், ஏக்கத்தோடுமே இந்தப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

மோசேயின் ஜெபம் (யாத்.32:32) :

தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்

ஜான் நாக்ஸ்ஸின் ஜெபம் :

ஸ்காட்லாந்தை எனக்குத் தாரும் அல்லது நான் சாகிறேன்

ஜார்ஜ் ஒயிட்பீல்ட்டின் ஜெபம் :

ஆத்துமாக்களைத் தாரும் அல்லது என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்

தேசத்தின் மறுரூபத்தையும், எழுப்புதலையும் வாஞ்சித்து கதறிக்கொண்டிருக்கும் மன்றாட்டு வீரர்களின் கைகளில் இப்புத்தகம் சென்றடைய வேண்டுமென்கிற பாரத்தோடு தேவனை நோக்கிக் கதறுகிறேன். என் தேவன் எனக்கும், என் தேசத்திற்கும் இரக்கம் செய்வாராக!

ஒவ்வொருநாளும் கண்ணீரோடும், மன்றாட்டோடும் அவர் சமுகம் செல்லுவோம்! தேசம் நம் கையில்!! அது வெகு தொலைவில் இல்லை!!!

கண்ணீரின் எழுத்தாளன்

அகஸ்டின் S. சசிக்குமார்

உள்ளே

1. ஜெப பாரம் ... 11
2. பாரம் ... 25
3. ஜெப பாரம் ஜெப ஆவியை அனல்மூட்டுகிறது ... 37
4. இயேசுவின் ஜெப பாரம் ... 45
5. ஜெப பாரத்தின் தாக்கங்கள் ... 57
6. பரிசுத்தவான்களின் ஜெப பாரம் ... 71
7. ஜெப பாரத்தைச் சுமக்க வேண்டிய விதம் ... 83
8. ஜெப பாரத்தின் நேரங்கள் ... 97
9. தகுந்த ஆயுதத்தைப் பயன்படுத்துங்கள் ... 107
10. ஜெப பாரத்திற்கு வேண்டிய தகுதிகள் ... 113
11. ஜெப பாரமும், ஆவியானவரும் ... 125
12. தேவனின் பாரம் ... 135
13. அவசரமான ஜெப பாரம் ... 143
14. ஜெப பாரத்தைப் பெற்றுக்கொள்ளுவது எப்படி? ... 151
15. ஜெப பாரமின்மை ... 161
16. ஜெப பாரத்தைக் காத்துக்கொள்ளுவது எப்படி ... 165
17. ஜெப பாரத்தோடு தேசத்திற்காகத் திறப்பிலே ... 171

அர்ப்பணம்

அவருடைய இருதயத்தை அறியவும்

அவருடைய பாரத்தைச் சுமக்கவும்

திறப்பிலே நின்று மன்றாடவும்

ஜனங்களுக்காகப் பரிதபிக்கவும்

எவ்வளவேனும் தகுதியில்லா எனக்காகத்

தன்னையே தந்த என் அன்பு தகப்பன்

இயேசுவுக்கே

இப்புத்தகத்தை அர்ப்பணிக்கிறேன்!

அவருக்கே துதியும், கனமும், மகிமையும் உண்டாகட்டும்!

தேவனுடைய உள்ளத்தை
உடைக்கும் காரியங்களால் என்னுடைய
உள்ளம் உடைக்கப்படட்டும்

– டாக்டர். பாப் பியர்ஸ்



ஜெப பாரம்

"இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான்
உட்கார்ந்து அழுது,
சில நாளாய்த் துக்கித்து,
உபவாசித்து,
மன்றாடி,
பரலோகத்தின் தேவனை நோக்கி..."
(நெகே.1:4)

ஜெபபாரம் என்பது சாதாரண ஜெபநிலையிலிருந்து உயர்ந்த நிலை ஜெபத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது. மேலோட்டமான ஜெபநிலையைப் புறம்பே தள்ளி, ஆழமான ஜெபநிலைக்கு நம்மை வழி நடத்துகிறது. இதுவே ஜெபத்திற்கு உயிர்மூச்சாகவும், ஜெபத்தின் அடித்தளமாகவும் அமைகிறது.

இந்த ஜெபபாரமானது ஒரு மன்றாட்டு ஜெபவீரனுக்கு தேவனால் அருளப்படுகிற விலையேறப்பெற்ற சொத்தாகும். அது பாரம் குறையாத உள்ளமும், கண்ணீர் வற்றாத கண்களும், பெலன் குன்றாத முழங்கால்களுமே. தேவனுடைய இருதயத்திலுள்ள ஏக்கத்தையும், விருப்பத்தையும் ஜெபிக்கிற ஒரு மனிதனுக்குள் ஜெபபாரமாக வைக்கப்படுகிறது. இதனை எல்லா மனிதருக்கும் தேவன் தருவதில்லை.

"ஆகையால், அவர்களை நாசம்பண்ணுவேன் என்றார், அப்பொழுது அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும்பொருட்டு, அவருக்கு முன்பாகத் திறப்பின் வாயிலே நின்றான் (சங்.106:23)". தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட உண்மையான மன்றாட்டு வீரனுக்கு அதனை வெளிப்படுத்துகிறார் தேவன். அதாவது, திறப்பிலே நின்று உத்தரவாதத்தோடு ஜெபிக்கிறவனுக்கு அவர் அந்த ஜெபபாரத்தைத் தருகிறார். கரிசனையில்லாமல் பாரமின்றி ஜெபிக்கும் ஜெபமானது அவருடைய பார்வையில் உகந்ததாகவும், விலையேறப்பெற்றதாகவும் இருக்காது.

ஜெபபாரம் என்பது பிதாவினிடத்தில் எப்பொழுதும் நமக்காகப் பரிந்துபேசிக்கொண்டிருக்கிற இயேசுகிறிஸ்து ஒருவரால் மாத்திரமே அருளப்படுகிற ஒன்றாகும். நாமாகவே ஜெபபாரத்தை நமக்குள் ஏற்படுத்திக்கொள்ள முடியாது. இதில் நம்முடைய சுய விருப்பங்களுக்கோ, தேவைகளுக்கோ இடம் இல்லை. தேவனுடைய எதிர்ப்பார்ப்பும், விருப்பமுமே நமக்குள் ஜெபபாரமாக தரப்படுகிறது. தேவன் சில காரியங்களுக்காகக் கிரியைச் செய்யவேண்டுமென விரும்பும்பொழுது, அதற்குத் தேவையான அளவிற்கு ஜெபத்தை நம்மிடம் எதிர்ப்பார்க்கிறார்.

உதாரணமாக, ஒரு தேசமானது தொடர்ந்து தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்யும்பொழுது அவருடைய நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாக அந்த தேசம் வைக்கப்படுகிறது. அப்பொழுது அவர் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நின்று

ஜெபிக்கிற ஒரு மனிதனைத் தேடுகிறார் (எசே.22:30). தேவன் கண்டுபிடிக்கிற அந்த மனிதனுக்குள் தேசம் அழிக்கப்படாதபடிக்கு உத்தரவாதத்தோடு மன்றாடி ஜெபிக்கிற பாரத்தை அருளுகிறார். அத்தகைய பாரத்தைப் பெற்ற மன்றாட்டு வீரன் கரிசனையோடும், கண்ணீரோடும் ஜெபிக்கும்பொழுது தேவன் தேசத்தை அழிக்காதபடிக்கு அதின்மேல் பரிதாபங்கொள்ளுகிறார். அத்தகைய தேவனின் விருப்பத்தை நிறைவேற்ற தெரிந்துகொள்ளப்பட்ட மனிதர் களுக்குள் வைக்கப்படும் பாரமே ஜெபபாரம் எனப்படுகிறது.

தேவன் தந்த ஜெபபாரம் நம்மில் அதிகரிக்கும்பொழுதுதான் மண்டபத்திற்கும், பலிபீடத்திற்கும் இடையே இடுப்பெலும்பு நொறுங்கும் அளவிற்கு அது நம்மை மன்றாடத் தூண்டுகிறது. ஒருவரும் தாமாகவே மன்றாட்டு ஜெபத்தில் ஈடுபட முடியாது.

இந்த பாரம் ஜெபத்தின் நிலையை தீவிரமடையச் செய்து, பரலோகத்தைப் பலவந்தம்பண்ண வைக்கிறது. தண்ணீரற்ற நிலத்தில் வேரூன்றப்படாத, பிரயோஜனமற்ற மரத்தைப் போலத்தான் பாரமற்ற ஜெபம் இருக்கிறது. ஜெபிக்கும்பொழுது ஒருவனுடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளைவிட, உள்ளத்திலிருந்து எழும்பி வருகிற உண்மையான உணர்வுமிக்க வார்த்தைகளே தேவனுக்கு முன்பாக விலையேறப்பெற்றது. இதுவே, தேவனுடைய பார்வையில் அருமையான விண்ணப்பமாகும். மற்றவர்களின் பாரத்தைச் சுமப்பது என்பது சாதாரணமான ஒரு காரியமல்ல. ஜனங்களின்மேல் வரும் அழிவுகள், தனக்கே நேரிடுவதாக இருந்தால் எப்படி பாரத்தோடும், தவிப்போடும் கதறுவோமோ அப்படிப்பட்ட மனநிலையோடு ஜெபிப்பதற்கு ஜெபபாரமானது நம்மைத் தூண்டி விடுகிறது.

"நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப்

புலம்பி, ஒருவன்தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" (சக.12:10) என்று வேதத்தில் எழுதியிருக்கிறபடி பலவித பாடுகளினால் மனம் உடைந்து போயிருக்கிற மக்களைப்போலவே நம்மையும் மன்றாட வைக்கிறது. இப்படி ஜெபிப்பதுதான் மன்றாட்டு வீரனுக்கு பரத்திலிருந்து அருளப்படும் மகத்தான ஒரு வரமாகும்.

ஜெபபாரம் பரலோகத்தின் தேவன் நம்மிடம் எதிர்ப்பார்க்கும் அளவிற்கு நம்மை மன்றாட வைப்பதால், நம்முடைய ஜெபத்திற்கு மகிமையான பதிலையும், தேசத்தில் நாம் எதிர்நோக்கும் மாபெரும் அசைவையும், மாற்றத்தையும் கொண்டு வருகிறது. அதன் மூலம் உலர்ந்து கிடக்கிற எலும்புகள் உயிர்பெற்றும், தேவசேனையாய் எழும்பியும், பாதாளத்தின் அஸ்திபாரங்கள் அசைந்தும், பரலோகத்தின் ராஜ்யம் வல்லமையாய் ஸ்தாபிக்கப்பட்டும், தேசத்தில் பெரிய உயிர்மீட்சியும் உண்டாகிறது. அப்படிப்பட்ட வல்லமை மிக்க ஜெபமாக ஜெபபாரம் பெற்றவர்களுடைய ஜெபம் காணப்படுகிறது.

அழிவுக்கு நேராகச் செல்லுகின்ற தேசத்திற்காகத் தேவனைப் பலவந்தம்பண்ணி விடாப்பிடியாகவும், உறுதியாகவும், கரிசனையோடும், கண்ணீரோடும் ஜெபிக்கத் தூண்டுவதே இந்த ஜெபபாரம்தான். அப்படி தேவன் தொடர்ந்து நமக்குள் வைக்கிற ஜெபபாரமானது நாம் ஜெபிக்க மட்டுமல்ல, அதுவே நாளடைவில் நம்முடைய ஜெபஅழைப்பாகவும் மாறவும் வாய்ப்பிருக்கிறது. நெகேமியாவின் ஜெபபாரம் அவருடைய அழைப்பாகவும், தரிசனமாகவும் மாறியதே.

பொதுவாக, ஜெபமானது தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்படுவதற்கும், பரலோக வாசல்கள் திறக்கப்படுவதற்கும், உன்னதமான தேவனுடைய நோக்கம் நிறைவேறுவதற்கும், அதன்மூலம் பலத்த கிரியைகள் நடப்பிக்கப்படுவதற்கும் பாரம் நிறைந்த உயிருள்ள ஜெபமே மிகவும் அவசியமாகும்.

அவர் என்னை உடைத்து நொறுக்கி ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக என்னை அழச் செய்வாரானால் எத்தனை நலமாயிருக்கும் என்று டாக்டர். ஆஸ்வால்ட் ஜெ. ஸ்மித் கூறினது போல ஜெபபாரமானது ஜெபத்திலே நம்மை உடைத்து நொறுக்கி, அழிவுக்கு நேராக ஓடிக்கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்காக ஓயாமல் மன்றாட வைக்கும். எப்பொழுதும் ஜெபத்தில் மடைதிறந்த வெள்ளம்போல கண்ணீரைப் பாய்ந்தோடச் செய்யும். பரலோகம் இழந்த ஜனத்திற்காக ஆத்தும வியாகுலத்துடன் தரையில் விழுந்து கதற வைக்கும்.

பிதாவானவரின் பங்கு

"ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்" (சங்.65:2)

"இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை" (ஏசா.59:1)

"தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (ரோம.8:32)

"இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல" (மத்.18:14)

இதுபோன்ற வசனங்களைப் படிக்கும்போது, நம்முடைய தேவன் தாம் உருவாக்கிப் படைத்த தம் ஜனங்கள்மேல் எவ்வளவு நேசத்தையும், கரிசனையையும் வைத்திருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. ஆகவே, அவருடைய ஏக்கத்தை உணர்ந்தவர்களாய் நாம் ஜனங்களுக்காகப் பாரத்தோடும், கண்ணீரோடும் மன்றாடி ஜெபிக்கும்பொழுது... அந்த ஜெபத்தைத் தேவன் கேட்கிறார், அதனை அங்கீகரிக்கிறார், ஏற்றுக்கொள்ளுகிறார், தேசத்தைக்

கடாட்சிக்கிறார், தேசத்திற்குச் க்ஷேமத்தை அருளுகிறார் என்பதை வேதம் இவ்வசனங்களின் மூலம் வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது. இப்படி தேசத்தில் ஜெபபாரம் பெற்ற மன்றாட்டு வீரர்களால் ஏறெடுக்கப்படும் ஜெபத்திற்கு பதில் அளிப்பதிலும், தேசத்தில் கிரியைச் செய்வதிலும் பிதாவாகிய தேவனுடைய பங்கே பிரதான பங்காக இருப்பதை வேதத்தில் காணலாம்.

நம்முடைய ஜெபம் பிதாவின் சமுகத்தில் தூபவர்க்கமாக மாற்றப்பட்டு அவரிடத்திற்குச் செல்கிறது (வெளி.5:3; 8:5). அதனைச் சுகந்த வாசனையான நறுமணமாய் முகருகிற தேவன் அந்த ஜெபத்தை அங்கீகரித்து தேசத்திற்காக வைராக்கியம்கொண்டு, தேசத்திற்குச் க்ஷேமத்தை அருளிச் செய்கிறார். நாம் ஏறெடுக்கிற எல்லா ஜெபத்தையும் கேட்டு தம்முடைய கரங்களை நீட்டி அவரே கிரியைச் செய்கிறார்.

ஜெபத்தைக் கேட்கும் பிதாவானவர்...

+ ஜெபத்தைக் கேட்கிறார்... (ஏசா.59:1; சங்.65:2)
+ ஜனத்திற்காகப் பரிதாபங்கொள்ளுகிறார்... (யாத்.32:14; யோனா.4:11)
+ தேசத்திற்காக மனஸ்தாபப்படுகிறார்... (யோவே.2:13)
+ தேசத்தின் பாவங்களை மன்னிக்கிறார்... (யாத்.32:32)
+ தேசத்தின்மேல் சாபம்கூறாதிருக்கிறார்... (ஆதி.8:21)
+ ஜனத்தின்மேல் கோபம் கொள்ளாதிருக்கிறார்... (சங்.106:23)
+ ஜனங்களைச் சங்கரியாமல் விட்டுவிடுகிறார்... (ஆதி.8:21)
+ தீங்கு செய்யாதிருக்கிறார்... (யோனா.3:10)
+ வாதையை நிறுத்துகிறார்... (எண்.16:50)

+ தேசத்தை அழிக்காமல் விட்டுவிடுகிறார்... (ஆதி.18:28; உபா.10:10)

+ ஜனத்தை நினைத்தருளுகிறார்... (2இரா.13:23)

+ ஜனத்திற்கு இரக்கம் செய்கிறார்... (யாத்.32:14)

+ தேசத்தை இரட்சிக்கிறார்... (செப்.3:17)

+ ஜனத்தைக் கடாட்சிக்கிறார்... (யோவே.2:17-18)

+ தேசத்திற்காக வைராக்கியங்கொள்ளுகிறார்... (2இராஜா.19:31)

+ தேசத்தில் கிரியைச் செய்கிறார்... (ஏசா.59:1)

+ தேசத்திற்குச் க்ஷேமத்தை அருளுகிறார்... (2நாளா.7:14)

+ தேசத்தில் பெரிய காரியங்களைச் செய்கிறார்... (யோவே.2:21)

+ தேசத்திற்கு அநுக்கிரகம்பண்ணுகிறார்... (ஆதி.20:18)

+ தேசத்திற்கு ஆதரவாய் இருக்கிறார்... (2இரா.20:6)

+ தேசத்தின்மேல் கிருபையாய் இருக்கிறார்... (நெகே.13:22)

+ தேசத்திற்காகச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்கிறார்... (யோனா.3:10)

தேவஆவியானவரின் பங்கு

"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்" (ரோம.8:26,27)

ஜெபபாரம் பெறாத ஒருவர் நீண்ட நேரம் ஜெபிக்க முடியாது. மாத்திரமல்ல, கருத்தாகவும், கரிசனையாகவும் ஜெபிப்பதுகூட கடினமே. ஆகவே, அப்.பவுல் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில்... இப்படியிருக்க செய்ய வேண்டியதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம்பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன் (1கொரி.14:15) என்று சொல்கிறார். எனவே, நாம் ஆவியோடும், கருத்தோடும் ஜெபிப்பதற்கு ஆவியானவருடைய உதவி நமக்கு மிகவும் அவசியமாயிருக்கிறது.

சக.12:10-ல், நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள் என்று எழுதியிருக்கிறபடி, நம்மில் ஊற்றப்பட்ட ஆவியானவரே விண்ணப்பங்களின் ஆவியாக பல மணி நேரம் தொடர்ந்து விண்ணப்பம்பண்ணவும், ஜெபபாரமும், உற்சாகமும் குறையாமல் விடாப்பிடியாக மன்றாடி ஜெபிக்கவும், வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்யவும் நம்மை நடத்துகிறார்.

விண்ணப்பங்களின் ஆவியானவர் ஒருவரை மன்றாட வைக்க வில்லையென்றால் எவ்வளவு பெரிய தேவஊழியராக இருந்தாலும் அவரால் மன்றாட முடியாது. ஆவியானவர் நம்மை ஆட்கொண்டு பலப்படுத்தும்போது பிதாவின் சித்தத்தின்படியே ஜெபிக்க உதவி செய்கிறார் (1கொரி.2:9-11). ஆவியானவருடைய உதவி இல்லாமல் ஜெபிக்கும் எந்த ஜெபமும் தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது அல்ல. தெளிவான ஜெபமாக இருக்கவும் வாய்ப்பில்லை. 1கொரி.2:10-ன்படி பிதாவாகிய தேவனுடைய ஆழத்தையும், நீளத்தையும், அகலத்தையும், உயரத்தையும் இன்னதென்று அறிந்தவர் ஆவியானவரே. ஆகவே, அவருடைய துணையோடு நாம் ஜெபிக்க ஆரம்பிக்கும்பொழுது தேவனுடைய இருதயத்திற்கு அருகில் சென்று ஜெபிக்க நமக்குக் கிருபை கிடைக்கிறது.

எபே.6:12-ன்படி நம்முடைய யுத்தம் ஆவிக்குரிய யுத்தமாக இருக்கிறது. மாம்சக் கண்களுக்குப் புலப்படாத ஆவிக்குரிய உலகத்தோடு நாம் யுத்தம்பண்ணத்துவங்கும்போது அதாவது போராடி ஜெபிக்க ஆரம்பிக்கும்பொழுது பரிசுத்தஆவியானவர் மாத்திரம் நம்முடைய கண்களைத் திறந்துவிடாவிட்டால், ஆவிக்குரிய யுத்தத்தில் நம்முடைய எதிரி யார்? நம்முடைய யுத்தக்களம் எது? நாம் யாருடன் யுத்தம் செய்து கொண்டிருக்கிறோம்? யுத்தத்தில் நம்முடைய நிலைப்பாடு என்ன? என்பதை நம்மால் கிரகிக்க முடியாமல் போய்விடும். அச்சமயம் நாம் கண்கள் திறக்கப்படாத ஆவிக்குரிய குருடராகவும், ஆகாசத்தில் சிலம்பம்பண்ணுகிறவர்களாகவும், வழிதப்பித்திரிகிறவர்களாகவுமே இருப்போம்.

ஆனால், நாம் ஆவிக்குள்ளாகும்போது, தேசத்தில் காணப்படும் அலங்கோலத்தையும், அருவருப்பையும் கர்த்தருடைய ஆவியானவர் நம் ஆவிக்குரிய கண்களையோ, மனதையோ திறந்து காண்பிக்கிறார். எசே.8-ம் அதிகாரத்தில் கர்த்தருடைய ஆவியானவர் எசேக்கியேல் தீர்க்கதரிசியை ஆவிக்குள்ளாக்கி தேவதரிசனத்திலே தேவஆலயத்திற்குள் காணப்பட்ட அருவருப்பையும், தேசத்தில் காணப்பட்ட அருவருப்பையும், தேவஜனங்களுக்குள் காணப்பட்ட அருவருப்பையும் காண்பிப்பதைப் பார்க்க முடிகிறது. ஆவியானவர் ஒருவரைப் பலப்படுத்தாத அல்லது வழி நடத்தாத பட்சத்தில் ஜெபிக்கப்படுகிற ஜெபங்கள் எல்லாம் தெளிவற்ற ஜெபங்களாகவே இருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

பாதாளத்தின் வல்லமைகள் தீட்டும் சதித்திட்டங்களையும், பரலோக தேவன் செயல்படுத்தவிருக்கும் உன்னதத் திட்டங்களையும் ஆவியானவர் தெளிவாய் வெளிப்படுத்தி, அதற்கேற்றாற்போல ஜெபிக்க நம்மை வழி நடத்துகிறார். சில சமயங்களில் நம்முடைய கண்களைத் திறந்தும், சில சமயங்களில் நம்முடைய செவிகளைத் திறந்தும் காரியங்களை வெளிப்படுத்துகிறார்.

பரிசுத்த ஆவியானவர் ஒரு மன்றாட்டு வீரனுக்குள் ஏற்படுத்தும் ஜெப தாக்கமானது அவனுடைய ஜெபவாழ்வில் கிரகிக்க முடியாத அளவிற்கு பெரிய மாற்றங்களைக் கொண்டு வருகிறது. பல மணி நேரங்கள் ஜெபித்தாலும் சில நிமிடங்களே ஜெபித்தது போன்ற உணர்வு அவனுக்குள் உண்டாகிறது. இன்னும் அதிக நேரம் தேவனுடைய பாதத்தில் வீழ்ந்து தேசத்திற்காக மன்றாட வேண்டும் என்கிற பாரத்தையும், தாகத்தையும் அது ஏற்படுத்துகிறது.

இன்றைய கிறிஸ்தவ உலகில் அநேகர் ஜெபத்தில் சோர்ந்து போய், தொடர்ந்து ஜெபிக்க இயலாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சிலர் சில நிமிடங்கள் ஜெபிப்பதையே கடினமாக எண்ணுகின்றனர். ஆனால், ஆவியானவர் ஒருவனுக்குள் வைக்கும் ஜெபபாரமானது அவன் பல மணிநேரங்கள் தொடர்ந்து கருத்தோடும், பாரத்தோடும், கண்ணீரோடும் மன்றாடி ஜெபிப்பதோடு அல்லாமல், எப்பொழுதும் ஜெபிக்க வேண்டும் என்கிற பாரத்தினாலும், தாகத்தினாலும் நிறையப்பட்டவனாக உண்மையாகவும், மனப்பூர்வமாகவும் ஜெபிக்கிற உன்னத அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளுகிறான் என்பது உண்மையே.

தேவன் எதிர்ப்பார்க்கிறபடி ஜெபிப்பது இன்னதென்று நாம் அறியாதிருக்கிறபடியால் பரிசுத்த ஆவியானவர்தாமே நம்மை அவருக்கேற்றபடி ஜெபிக்க பெலத்தையும், வழிநடத்துதலையும் அருளுகிறார். நம்மூலமாய் அவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்கிறார். இதனால் பிதாவாகிய தேவனை நோக்கி வல்லமையாக ஜெபத்தை ஏறெடுக்க நம்மால் முடிகிறது. நமக்குள் வைக்கப்பட்ட பாரம் பரிசுத்த ஆவியானவரின் அக்கினியோடு இணையும்பொழுது அது அதிக வல்லமையுள்ள மன்றாட்டாக மாறிவிடுகிறது. இதனைப்பற்றி இன்னும் சற்று விரிவாக ஆவியானவரும், ஜெபபாரமும் என்கிற தலைப்பின் கீழ் பார்க்க இருக்கிறோம்.

ஜெபநேரத்தில் ஆவியானவர்...

- நமக்காக வேண்டுதல் செய்கிறார்... (ரோம.8:26)
- ஏற்றபடி வேண்டுதல் செய்கிறார்... (ரோம.8:26)
- பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்கிறார்... (ரோம.8:26)
- பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறார்... (ரோம.8:27)
- தேவனுடைய சித்தப்படி வேண்டுதல் செய்கிறார்... (ரோம.8:27)
- இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறார்... (ரோம.8:27)
- ஆவியின் சிந்தை இன்னதென்று அறிகிறார்... (ரோம.8:27)
- நமது பலவீனங்களில் உதவி செய்கிறார்... (ரோம.8:26)
- ஆவியோடு விண்ணப்பம்பண்ண உதவுகிறார்... (1கொரி.14:15)
- கருத்தோடு விண்ணப்பம்பண்ண உதவுகிறார்... (1கொரி.14:15)
- ஆவியோடு ஸ்தோத்திரம்பண்ண உதவுகிறார்... (1கொரி.14:16)
- ஆவிக்குரிய கண்களைத் திறக்கிறார்... (எசே.8:5; எண்.24:3)
- இரகசியங்களை வெளிப்படுத்துகிறார்... (அப்.20:23; எபே.3:6)
- வழிநடத்துதலைத் தருகிறார்... (மத்.4:1)
- ஜெபத்திலே நம்மோடு பேசுகிறார்... (வெளி.2:7)
- ஜெபத்திற்கு நம்மை உற்சாகப்படுத்துகிறார்... (யாத் 35:21)
- நம் மூலமாகப் பேசுகிறார்... (2சாமு.23:2)
- தேவவசனத்தை நம் நாவில் வைக்கிறார்... (2சாமு.23:2)
- தேவனிடத்தில் பேச வைக்கிறார்... (1கொரி.14:2)
- இரகசியங்களைப் பேச வைக்கிறார்... (1கொரி.14:2)
- பாவத்தையும், நீதியையும், நியாயத்தீர்ப்பையும் குறித்து கண்டித்து உணர்த்துகிறார்... (யோவா.14:8)

இயேசுவின் பங்கு

"அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே" (ரோம.8:34)

"என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" (1யோவா.2:1)

ஆண்டவராகிய இயேசு நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் என்பதைப் பார்க்கும்பொழுது நமக்கு எத்தனை ஆறுதலும், சந்தோஷமுமாக இருக்கிறது. மனுக்குலத்தின் இரட்சிப்பிற்காக தன் ஜீவனை மரணத்தில் ஊற்றிக்கொடுத்தவர் அவரே. நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே. தேசத்திற்காகவும், மற்ற எல்லாருக்காகவும் ஜெபிக்க வேண்டும் என்கிற பாரத்தை நமக்குள் வைக்கிறவரும் அவரே. பிதாவினிடத்தில் நமக்காகப் பரிந்துபேசுவதில் அதிக பங்கினைப் பெற்றிருப்பவரும் அவரே. இதனைப்பற்றி இன்னும் சற்று இயேசுவின் ஜெபபாரம் என்கிற தலைப்பில் பார்ப்போம்.

ஜெபத்திற்கு மாதிரி இயேசுவே...

+ தம் கண்களை வானத்துக்கு ஏறெடுத்தார்... (யோவா.17:1)
+ இருட்டோடே எழுந்து ஜெபம்பண்ணினார்... (மாற்.1:35)
+ சாயங்காலமானபோது ஜெபம்பண்ணினார்... (மத்.14:23)
+ இராமுழுவதும் ஜெபம்பண்ணினார்... (லூக்.6:12)
+ தனித்து ஜெபம்பண்ணினார்... (மத்.14:23)
+ மலையின்மேல் ஏறி ஜெபம்பண்ணினார்... (மத்.14:23)
+ முழங்கால்படியிட்டு ஜெபம்பண்ணினார்... (லூக்.22:41,42)
+ முகங்குப்புற விழுந்து ஜெபம்பண்ணினார்... (மத்.26:39)

+ தரையில் விழுந்து ஜெபம்பண்ணினார்... (மாற்.14:35)
+ மிகவும் வியாகுலப்பட்டு ஜெபம்பண்ணினார்... (லூக்.22:44)
+ அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்... (லூக்.22:44)
+ வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையிலே விழும்படி ஜெபம்பண்ணினார்... (லூக்.22:44)
+ எதிரிடையான சூழ்நிலையின்போது ஜெபித்தார்... (லூக்.6:11)
+ உபவாசமாயிருந்து ஜெபம்பண்ணினார்... (மத்.4:2)
+ கண்ணீர்விட்டழுது ஜெபம்பண்ணினார்... (லூக்.19:41-44)
+ பலத்த சத்தத்தோடு விண்ணப்பம்பண்ணினார்... (எபி.5:7)
+ கண்ணீரோடு வேண்டுதல் செய்தார்... (எபி.5:7)
+ ஆத்துமாவை மரணத்திலூற்றி ஜெபித்தார்... (ஏசா.53:12)
+ மரணதருவாயிலும் ஜெபம்பண்ணினார்... (லூக்.23:34)
+ அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டார்... (ஏசா.53:12)
+ சீஷரோடே தனித்து ஜெபம்பண்ணினார்... (லூக்.9:18)
+ சீஷர்களுக்காக வேண்டுதல் செய்தார்... (யோவா.17:9)
+ சீஷர்களின் ஒருமனத்திற்காக ஜெபித்தார்... (யோவா.17:9)
+ தீமையினின்று காக்கப்படும்படி ஜெபித்தார்... (யோவா.17:15)
+ சீஷர்களைப் பரிசுத்தமாக்கும்படி ஜெபித்தார்... (யோவா.17:17)
+ நீண்டநேரம் ஜெபம்பண்ணினார்... (யோவா.17)
+ மறுபடியும் மறுபடியும் ஜெபித்தார்... (மத்.26:39-44)
+ நமக்காகப் பரிந்துபேசுகிறார்... (1யோவா.2:1)
+ ஜெபம்பண்ண வேண்டிய விதத்தை கற்றுத்தந்தார்... (லூக்.11:1-4)
+ ஒருமணி நேரமாவது விழித்திருக்கக்கூடாதா என்றார்... (மத்.26:40)
+ விழித்திருந்து ஜெபம்பண்ண கட்டளையிட்டார்... (மத்.26:41)
+ என் நாமத்தினாலே கேளுங்கள் என்றார்... (யோவா.14:13)
+ கேட்பதைச் செய்வேன் என்றார்... (யோவா.14:13)

பாரம் நிறைந்த ஜெபமும்;

வலியுள்ள கண்ணீரும் எழுப்புதலின்

இரு கண்கள் போன்றது!

– புத்தக ஆசிரியர்



பாரம்

"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக:
மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்து
கவலைப்பட்டுக் கலங்குகிறாய்.
தேவையானது ஒன்றே,
மரியாள் தன்னை விட்டெடுபடாத
நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்
என்றார்" (லூக்.10:41,42)

பொதுவாக மன பாரம் எனப்படுவது ஒருவனை பெரும் மன அழுத்தத்திற்கு உள்ளாக்குவதாக இருக்கிறது. மட்டுமல்ல, நாளாக நாளாக அந்த மன அழுத்தமானது அதிகரித்து அவனை ஒன்றும் செய்ய இயலாதவனாக, பித்து பிடித்தவனாக, சொஸ்தபுத்தி இல்லாதவனாக மாற்றி ஒரு நடைப்பிணமாக மாற்றிவிடுகிறது.

இன்று அநேகர் பல காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு கலங்கித் தவித்து தங்களைத் தாங்களே உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். தங்களுக்கு ஏற்பட்ட அவமானங்கள், ஏமாற்றங்கள், கண்ணீர்கள், வியாதிகள் மற்றும் விபத்துக்களால் சமாதானமின்றி தவிக்கிறார்கள். எல்லாராலும் கைவிடப்பட்டு, நம்பியவர்களால் ஏமாற்றப்பட்டு, கஷ்ட நேரங்களில் உதவ ஆளில்லாத நிலை ஏற்படுவதால் அநேகருடைய உள்ளம் பாரமடைந்துள்ளது. பலர் சிற்றின்ப ஆசை இச்சை யினாலும், மோகத்தினாலும், உலகமே அண்ணாந்து பார்த்து வியக்கும் உயரத்தை விரைவில் அடைந்துவிட வேண்டும் என்கிற பேராசையினாலும் பாரமடைந்து தவிக்கிறார்கள். இப்படி அநேகர் பல்வேறு பின்னணியில் தங்களுக்குள் உண்டாகிற பாரங்களால் பீடிக்கப்பட்டு வெகுவாக மோசம்போவதை அறியாதிருக்கிறார்கள்.

ஆகவே, ஆண்டவர்... வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றும் (மத்.11:28-30); தம்முடைய சீஷர்களைப் பார்த்து: உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையா யிருங்கள் என்றும் சொன்னார் (லூக்.21:34). ஆகவே, மனிதர்கள் யாவரும் என்ன செய்ய வேண்டும்? தம்மிடத்தில் வருகிற யாவருக்கும் இளைப்பாறுதலை அருளுகிறவரும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிற அவரிடத்தில் வந்து தங்கள் கவலைகளை யெல்லாம் அவர்மேல் வைத்துவிட்டு, அவர் அருளும் மென்மையான நுகத்தையும், இலகுவான சுமையையும் தங்கள்மேல் ஏற்றுக்கொள்ள வேண்டியது. இதுவே சாலச்சிறந்தது. மேன்மையானதும் கூட.

இப்படித் தேவனால் ஒருவனுக்கு அருளப்படுகிற பாரமானது அவனைத் தேவனண்டைக் கிட்டிச் சேர வைக்கிறது. தேவனுடைய சமுகத்தில் பல மணி நேரங்கள் வீழ்ந்து கிடக்கச் செய்கிறது. மரியாளைப் போல நல்ல பங்கைப் பெற்றுக் கொள்ள வைக்கிறது. தேசத்திற்காகவும், தேவஜனங்களுக்காகவும், ஊழியர்களுக்காகவும் மன்றாட வைக்கிறது. ஏசாயா தீர்க்கதரிசி தேவனிடத்திலிருந்து தம்மேல் வந்திறங்கின பாரத்தைப் பற்றி சொல்லுவதைப் பாருங்கள்.

ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா பாபிலோன்மேல் வரக்கண்ட பாரம் என்று ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் அதிகாரம் 13-ல் தொடங்குவதிலிருந்து... ஆகாஸ் ராஜா மரணமடைந்த வருஷத்திலே உண்டான பாரம், மோவாபின் பாரம், தமஸ்குவின் பாரம், எகிப்தின் பாரம், கடல் வனாந்திரத்தின் பாரம், தூமாவின் பாரம், அரபியாவின் பாரம், தரிசனப் பள்ளத்தாக்கின் பாரம், தீருவின் பாரம் என அவருக்கு தேவனால் தரிசனத்திலே காண்பிக்கப்பட்டு அவருடைய இருதயத்தில் வைக்கப்பட்ட பாரத்தைப் பார்க்கும்போது தம்முடைய தீர்க்கதரிசிக்கு தேவன் எவ்வண்ணமாக தேசங்களின் மேல் வரவிருக்கும் அழிவை எடுத்துரைத்து அதற்காகப் பாரப்பட வைத்திருக்கிறார் என்பதையும், தம் ஜனத்தின்மேல் கொண்டிருந்த அவருடைய நிச்சயமான அன்பையும் அறிய முடிகிறது. இப்படி தேவன் பல இடங்களில் தம் ஜனங்களுக்காகப் புலம்புவதையும், அங்காலாய்ப்பதையும் வேதாகமம் தெளிவுபடுத்துகிறது. அந்த வலியையும், பாரத்தையும் சுமக்கவே தேவன் மன்றாட்டு வீரர்களைத் தேடிக்கொண்டிருக்கிறார் (எசே.22:30). ஆகவே, தேவனின் எதிர்ப்பார்ப்பானது பாலைவன கானல்நீரைப்போல ஆகாதபடிக்கு, அவருடைய எதிர்ப்பார்ப்பில் ஏமாற்றம் வராதபடிக்கு, அவருடைய பாரத்தில் பங்கெடுத்து இரவும், பகலும் அவரை நோக்கிக் கூப்பிடவே நாம் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம். அவருடைய பாரத்தில் பங்கெடுத்து, அவரால் பயன்படுத்தப்படுகிற பாத்திரமாக மாறுவதற்கு வேதம் காட்டும் பலவித பாரங்களைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

ஆத்தும பாரம்

"உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை அனுப்பினார்" (யோவா.3:17)

"தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார்" (1தெச.5:9)

"இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" (லூக்.19:10)

"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1தீமோ.2:4)

வேதாகமத்தில் ஆதியாகமம் தொடங்கி வெளிப்படுத்தின விஷேசம் வரைக்கும் இதுபோன்ற பல அருமையான வசனங்களை நாம் பார்க்கலாம். தேவன் தாம் உருவாக்கிப் படைத்த தம்முடைய ஜனங்கள்மீது கொண்டுள்ள அவருடைய அளவற்ற, நிகரற்ற, விலையேறப்பெற்ற அன்பையும், எப்படியாகிலும் அவர்களை மீட்டுவிட வேண்டும் என்பதில் அவருக்குள் இருக்கும் தவிப்பையும், அங்கலாய்ப்பையும் அவ்வசனங்கள் தெளிவுப்படுத்தி காண்பிக்கிறது.

பூவுலகிலுள்ள எல்லா மனிதரும் பாவஞ்செய்து தேவமகிமை யற்றவர்களாகி (ரோம.3:23) தேவசாயலை இழந்திருக்கும்போது, தம்முடைய சொந்தக்குமாரனென்றும் (இயேசுவை) பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்ததினாலே மனிதர் பால் அவர் கொண்டுள்ள அன்பு வெளிப்பட்டது (ரோம.8:32). ஒருவனாகிலும் கெட்டுப்போகாமல் எப்படியாவது மீட்கப்பட்டு விடவேண்டும் என்கிற அவருடைய இருதயத்தின் அங்கலாய்ப்பு கிறிஸ்து தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி சிலுவையில் செலுத்தின விலைக்கிரயத்தில் வெளிப்பட்டது. இவ்விதம் மனிதர்மேல் அவர் கொண்டுள்ள அன்பே கரிசனையுள்ள ஆத்துமபாரமாகவும்,

திறப்பிலே நின்று ஜெபிக்க வேண்டிய ஜெபபாரமாகவும் நமக்குள் வைக்கப்படுகிறது. இவைகளே ஜெபிக்கிற ஒருவனுக்குக் கிடைக்கும் விலையேறப்பெற்ற உன்னத ஆசீர்வாதமாகும். தேவனுடைய பாரத்தைச் சுமந்து திறப்பிலே நிற்பதுதான் அவனுடைய வாழ்வில் கிடைக்கப்பெற்ற மாபெரும் பாக்கியம் என்பதில் மிகையில்லை.

உலக பாரம்

"உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீகக் கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்தநாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்" (லூக்.21:34)

உலகபாரம் என்பது... உலகத்தின்மேல் ஆசை வைக்கிறதும், உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், சிற்றின்ப வேட்கையும், மற்றவைகளைப் பற்றி உண்டாகிற இச்சைகளுமே என்று வேதம் கூறுகிறது. தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து தன்னைவிட்டுப் பிரிந்துபோனதாக 2தீமோத்தேயு 4:10-ல் அப்.பவுல் சொல்கிறார். வசனத்தைக் கேட்டும், உலகக் கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போட, அதினால் பலனற்றுப் போகிறார்கள் என்று மாற்கு 4:18-ல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்லுகிறார்.

ஆகையால், உலகபாரத்தினால் ஒருவனும் இழுப்புண்டுபோய் விடாதபடிக்கு... கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? என்று மத்.6:27-லும், மிகவும் அற்பமான காரியமுதலாய் உங்களால் செய்யக்கூடாதிருக்க, மற்றவைகளுக்காக நீங்கள் கவலைப்படுகிறதென்ன என்று லூக்.12:26-லும், நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத்

தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்துஇயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் என்று பிலி.4:6,7-லும், நீங்கள் கவலையில்லாமல் கர்த்தரைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டுமென்று 1கொரி.7:35-லும், அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் என்று 1பேது.5:7-லும் கவலைப்படுவோருக்காகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதேபோல், ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள் (2தீமோ.6:9,10) என்றும், ஐசுவரியவான்களாகிய உங்களுக்கு ஐயோ; உங்கள் ஆறுதலை நீங்கள் அடைந்து தீர்ந்தது (லூக்.6:24) என்றும் கூறி தேவனுடைய வார்த்தை எச்சரித்து புத்திசொல்லுகிறது.

பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்... பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை என்று மத்.6:19,20 வசனங்களும், நீங்கள் பணஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே என்று எபி.13:5 வசனமும் சொல்லுகிறது. இப்படி வேதவசனங்கள் உரைக்கிறதை அறிந்துவர்களிலும் சிலர் வேகமாகச் சுற்றிக்கொண்டிருக்கும் பூமி உருண்டையின் வேகத்திற்கு இணையாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். காரணம்? பணம் சம்பாதிப்பதற்கே. தேவைக்காகப் பணம்

சம்பாதிப்பதில் தவறு இல்லை. ஆனால், பணமே கதி என்று கிடப்பதும், பணத்திற்காகவே அலைவதுமே பெரும் தவறு. அப்படிப்பட்டவர்களுக்குச் சொத்து வரும், சுகமும் வரும்; வசதி வரும், வாய்ப்பும் வரும்; செல்வாக்கு வரும், செழிப்பும் வரும். கூடவே மன அழுத்தமும், கலலையும், வேதனையும் வந்து சேர்ந்துவிடும். உலகக்கவலைகள் சுமக்கக்கூடாத பாரமாக அவர்களை அழுத்தும். உறவுகளிடையே மனமுறிவும், சண்டையும் உருவாகும். அதனால் சோர்வுக்கு நேராக தள்ளப்பட்டு, உலகம் போகிற போக்கில் இழுக்கப்பட்டு, தங்கள் ஆத்துமாவையே இழக்கும் அபாயத்தில் அவர்கள் தள்ளப்படுவார்கள்.

உலகக் கவலையானது ஒரு மனிதனை நிரப்பும் பொழுது அது அவனுக்குள் சஞ்சலத்தையும், வேதனையையும் ஏற்படுத்துகிறது. அவன் கடந்துபோகவேண்டிய தூரத்தையும், தன் வாழ்நாளில் எட்டிப்பிடிக்க வேண்டிய உயரத்தையும் அது இழக்கச் செய்கிறது. அவன் தன்னால் ஒன்றும் செய்ய இயலாத அளவிற்கு அது அவனைக் கட்டிப்போட்டு விடுகிறது. அவன் மனம் எதிலும் நாட்டம் கொள்ளாத அளவிற்கு அது அவனை மேற்கொண்டு விடுகிறது. இதினிமித்தம் வாழ்வில் வரும் பள்ளங்களையும், மேடுகளையும் சமாளிக்க முடியாமல் திக்கித்திணறி வாழ்க்கையையே பாதியில் முடித்துக் கொள்ளும் அவல நிலையும் அநேகருக்கு ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, எல்லா மனிதரும் உலக ஆசைக்கு தங்களை விலக்கிக் காத்துக்கொள்வதே அவர்களுக்கு நன்மை பயக்கும் வாய்ப்பு என்பது எவ்வித சந்தேகத்திற்கிடமுமின்றி நிரூபணமாகிறது.

உலக பாரத்தைச் சுமக்கிற ஒருவனால் உன்னதரின் பாரத்தைச் சுமக்க முடியாது. பரத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்படுகிற பாரமானது சுத்தமுள்ளதாகவும், மெதுவான நுகம் உள்ளதாயும், இலகுவான சுமை உள்ளதாயும், தேவனுடைய விருப்பத்தாலும், ஏக்கத்தாலும் நிறைந்ததாயும், தேவனை நெருங்கிச் சேர வைப்பதாயும், ஜனங்களுக்காக மன்றாடவும், ஆத்தும இரட்சிப்பிற்காகச் செயல்பட வைப்பதாயும் இருக்கிறது.

ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் (எபி.12:1).

உதாரணத்திற்காக ஒரு கதையைப் பார்ப்போம். நடுக்கடலில் பயணித்துக்கொண்டிருந்த மிகப்பெரிய கப்பல் ஒன்று திடீரென்று தண்ணீருக்குள் மூழ்கத் தொடங்கியது. அது தங்கக்கட்டிகளை ஏற்றிச்சென்ற கப்பல். அதில் பயணம் செய்த ஒவ்வொருவரும் உயிர் தப்புவதற்காக அமிழ்ந்துகொண்டிருந்த அந்தக் கப்பலிலிருந்து வெளியே குதித்து, நீந்தத் தொடங்கினர். அவர்களில் ஒருவனுக்கு மாத்திரம் அக்கப்பலிலுள்ள தங்கக் கட்டிகளின்மேல் ஒரே கண். அவன் ஒரு நல்ல நீச்சல் வீரன். எல்லோரும் குதித்தபிறகு, அவன் தங்கக் கட்டிகளில் சிலதை எடுத்து, தன் இடுப்பில் கட்டிக்கெண்டான். எப்படியாவது கஷ்டப்பட்டு கரைசேர்ந்துவிட்டால் போதும், அவற்றை விற்றே தன் வாழ்க்கை முழுவதையும் பெரிய செல்வந்தனாய் வாழ்ந்து விடலாம் என்ற கற்பனை அவனில் ஓடிக்கொண்டிருந்தது.

இடுப்பை சுற்றியுள்ள தங்கக்கட்டிகளோடு கடலில் குதித்து நீந்த முயன்றான், முடியவில்லை. தங்கக்கட்டிகளின் கனம் அவனைக் கீழே இழுத்தது. அவனைத் தண்ணீரின் ஆழத்திற்குள் இழுத்தது. ஒரு நொடியில் சுதாரித்துக்கொண்டவனாய் இடுப்பிலுள்ள ஒவ்வொரு கட்டியாகத் தூக்கி எறிய ஆரம்பித்தான். இறுதியில் தன் உயிருக்கே ஆபத்தைக் கொண்டு வரும் தங்கக்கட்டிகளில் ஒன்றுகூட தன்னிடம் இல்லாதவாறு அனைத்தையும் எறிந்தான். பாரம் நீங்கி இலகுவாக நீந்தி கரை சேர்ந்தான். அதுபோல, பாரமான யாவற்றையும் நம்மைவிட்டு உதறித் தள்ளிவிடும்போது தான் நாம் நம் ஓட்டத்தில் வெற்றியாக ஓட முடியும். பாரத்திலெல்லாம் பெரிய பாரம் பாவ பாரம். பாவபாரத்தோடு சேர்ந்து ஆவிக்குரிய ஓட்டத்தில் ஓட ஒருவனாலும் கூடாது. ஆகவே, உலக பாரத்தை உதறிவிட்டு உன்னதரின் பாரத்தை பெற உயர்ந்தவர் சமுகத்தில் நம்மை சமூலமாய் ஒப்படைப்போம்.

உலக பாரம் என்பது...

+ வருத்தத்தை உண்டாக்குகிறது... (மத்.11:28)
+ இருதயத்தை ஒடுக்குகிறது... (நீதி.12:25)
+ உலகத்திற்காகக் கவலை கொள்ள வைக்கிறது... (மத்.6:25)
+ நாளைய தினத்திற்காகக் கவலைப்பட வைக்கிறது... (மத்.6:34)
+ கலங்க வைக்கிறது... (லூக்.10:41)
+ ஜீவனைக் கசப்பாக்குகிறது... (யாத்.1:14)
+ ஐசுவரியத்தின்மேல் மயக்கத்தை உண்டாக்குகிறது... (மாற்.4:18)
+ சிற்றின்ப வேட்கையை உண்டாக்குகிறது... (மாற்.4:18)
+ வசனத்தை நெருக்கிப் போடுகிறது... (மாற்.4:18)
+ பலனற்றுப் போகச் செய்கிறது... (மாற்.4:18)
+ உலக ஆசையை உண்டுபண்ணுகிறது... (2தீமோ.4:10)
+ சோதனையில் அகப்பட வைக்கிறது... (2தீமோ.6:9)
+ கண்ணியில் சிக்க வைக்கிறது... (2தீமோ.6:9)
+ கேட்டிலும், அழிவிலும் தள்ளுகிறது... (2தீமோ.6:9)
+ மதிகேட்டிலும், பலவித இச்சைகளிலும் அமிழ்த்துகிறது... (2தீமோ.6:9)
+ எல்லாவித தீமையையும் வருவிக்கிறது... (2தீமோ.6:10)
+ விசுவாசத்தைவிட்டு வழுவிப் போகச்செய்கிறது... (2தீமோ.6:10)
+ அநேக வேதனைகளாலே உருவக்குத்துகிறது... (2தீமோ.6:10)
+ ஐயோ! எனக்கூறுமளவிற்கு ஆத்துமாவை நஷ்டப்படுத்துகிறது (லூக்.6:24)

தேவையான பாரம்

"தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானானால் மன்னித்தருளும்: இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்" (யாத்.32:32)

தேவையான பாரம் என்பது கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு தேவப்பிள்ளையும் பெற்றிருக்க வேண்டிய தேவனுடைய பாரமாக இருக்கிறது. கர்த்தருடைய வார்த்தையாகிய பாரம், கர்த்தர் இஸ்ரவேலுக்குச் சொன்ன வார்த்தையின் பாரம் என்று ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், நாகூம், ஆபகூக், சகரியா, மல்கியா ஆகியோரது புஸ்தகங்களில் வாசிக்கிறதுபோல தேவன் அருளுகிற பாரமே எல்லாவற்றைப் பார்க்கிலும் ஊழியர்களும், தேவப்பிள்ளைகளும் பெற்றிருக்க வேண்டிய முக்கிய பாரமாக இருக்கிறது.

ஆத்துமபாரமின்றி உலகபாரத்தினால் நிரப்பப்பட்டிருக்கிற எந்த ஊழியரும் ஊழியரல்ல; எந்தத் தேவப்பிள்ளையும் தேவப்பிள்ளையல்ல. அவர்கள் தாங்கள் ஊழியரென்றும், தேவப்பிள்ளைகளென்றும் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளுகிறார்கள். இரட்சிக்கப்பட்டிருக்கிறேன், கர்த்தருக்கு ஊழியம் செய்கிறேன் என்று சொல்லும் அநேகர் சிறிதளவேனும் சுபாவ அன்பு இல்லாதிருக்கிறது எப்படி? பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார். தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? தேவனிடத்தில் அன்பு

கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம் என்று 1யோவா. 4:7,8,16,20,21 வசனங்கள் ஆணித்தரமாகச் சொல்லுவதுபோல தேவனுடைய பாரம் பெறாத ஊழியன் ஊழியனல்ல, தேவப்பிள்ளை தேவப்பிள்ளையல்ல என்று சொல்லலாமோ என எண்ணுகிறேன். தேவனுடைய பாரத்தைப் பெற்று அதின்படி செயல்படும் எவனும் தேவனால் நிச்சயமாகவே உயர்த்தப்படுவான் என்பது காலங் காலமாக கிறிஸ்தவ உலகில் நாம் கண்டும், கேட்டும், அறிந்தும் இருக்கிற உண்மையான நிகழ்வாகும்.

தேவையான பாரம் என்பது...

+ ஊழிய பாரம்... (ஏசா.6:8)
+ சபை குறித்த பாரம்... (2கொரி.11:28)
+ மிஷனெரி பாரம்... (ரோம.10:14)
+ ஆத்தும பாரம்... (ஏசா.53:12)
+ ஜெப பாரம்... (1சாமு.16:1)
+ தேசத்தைக் குறித்த பாரம்... (எசே.22:30)
+ தேவனை அறியாத ஜனங்களைக் குறித்த பாரம்... (யோனா4:11)
+ அழிவை நோக்கிச் செல்வோரைக் குறித்த பாரம் (யாத்.32:9,10)
+ கட்டப்பட்ட மக்களைக் குறித்த பாரம்... (மத்.14:14)
+ மரணத்திற்கு குறிக்கப்பட்டவர்களைக் குறித்த பாரம் (நீதி.24:11)
+ சிறுமைப்பட்ட ஜனத்தைக் குறித்த பாரம்... (சங்.41:1)
+ பின்மாற்றமடைந்தோர் திரும்பவேண்டுமெனும் பாரம் (சங்.85:6)
+ தேசத்தில் தேவமகிமை வாசமாயிருக்க வேண்டுமெனும் பாரம்... (1சாமு.4:22)
+ தேசத்தில் நீதி வாசமாயிருக்க வேண்டுமெனும் பாரம் (2கொரி.9:10)
+ தேவசபையில் தேவன் எழுந்தருள வேண்டும் என்கிற பாரம்... (சங் 82:1)

மற்றவர்களை திருப்திப்படுத்தும் ஜெபமல்ல, தேவனே! உம் பாரத்தையே சுமக்கும் ஜெபங்களாக என் ஜெபங்கள் எப்போதும் இருக்கட்டும்.

– புத்தக ஆசிரியர்

ஜெப பாரம்

ஜெப ஆவியை அனல்மூட்டுகிறது

என் இருதயம் எனக்குள்ளே அனல்கொண்டது,
நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது,
அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம்செய்தேன் (சங்.39:3)

அக்கினி ஒருபோதும் பனிக்கட்டியை உருவாக்க முடியாது; பிசாசு ஒருபோதும் பரிசுத்தவானை உருவாக்க முடியாது; அதுபோல, ஜெபிக்காத போதகர்களும் ஒருபோதும் மன்றாட்டு வீரர்களை எழுப்ப முடியாது என முழங்கினார் லியோனார்டு ரேவன் ஹில் எனும் தேவஊழியர்.

ஆத்துமபாரத்தினால் பற்றியெரிகிறவன் தான் தேவனுக்காகப் பற்றியெரிகிற ஜெபவீரனை உருவாக்க முடியும். தேவனை அறியாத மக்களின் இரட்சிப்பிற்காக மன்றாட வேண்டுமே என்கிற பாரத்தினால் பற்றியெரிகிற இதயம் நம் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டும். நமக்குள் ஜெபபாரத்தினால் பற்றியெறிகிற ஜெபஆவி இல்லையென்றால் நாம் மங்கியெரிவோம் (அ) புகைந்துகொண்டிருப்போம். நாம் எப்பொழுதும் ஜெபபாரத்தினால் பற்றியெரிகிற ஜெபஆவியைப் பெற்றவர்களாக, அனுதினமும் ஜெபத்தில் எரிந்து எரிந்து கரைந்து போகிறவர்களாகவும், ஜெபத்தில் வார்க்கப்பட்டவர்களாகவும் மாற வேண்டும். ஜெபபாரத்தினால் அக்கினியாய்ப் பற்றியெரிந்த டேவிட் பிரெய்னார்ட் தேவசமுகத்தில் ஜெபத்திலேயே எரிந்து கரைந்துபோனவர்.

ஜெபபாரமானது நம்மை எப்பொழுதும் ஜெபத்திலே தரித்திருக்கவும், இடைவிடாமல் ஜெபிக்கவும் வைக்கிறது. நம்மில் ஜெபஆவியை அனல்மூட்டி எழுப்பி விடுகிறது. குளிர்ந்த நிலையிலிருந்து அனலுள்ள நிலைக்குத் தள்ளும் உந்துசக்தியாக அது இருக்கிறது. தேங்கியிருந்து புழுபுழுத்துப்போய் நாற்றமெடுக்கும் தண்ணீரைப்போல இராமல் எப்பொழுதும் பாய்ந்தோடும் காட்டாறாக நம்மில் ஜெபஆவியைப் பரவிப் பாய்ந்தோடச்செய்கிறது. புகைந்து எரியும் நிலையிலிருந்தும், மங்கியெரியும் நிலையிலிருந்தும் தூக்கியெடுத்து ஆத்தும வாஞ்சையினால் பற்றியெரிகிற காட்டுத்தீயாக நம்மை மாற்றுகிறது.

ஜெபபாரமே ஒரு மனிதனை சிறந்த ஜெபமனிதனாக்குகிறது. எலியாவைப்போல தேவனுக்கு முன்பாக சிறந்த முறையில் விண்ணப்பத்தைக் கருத்தாக ஏறெடுக்க, தடையாக இருக்கும் எல்லாவற்றையும் தூக்கியெரியும் சூறாவளியைப் போல நம்மை மாற்றி ஒரு ஜெபப்புயலாக ஆக்கிவிடுகிறது.

குத்துவிளக்கு எரிய வேண்டும் என்றால் அதில் எண்ணெயும், திரியும் இருக்க வேண்டும். எண்ணெயாகிய ஜெபஆவியும், திரியாகிய ஜெபபாரமும் இணைந்து எரியும்பொழுதுதான் மகிமையான பிரகாசம்

உண்டாகும். எல்லாருக்கும் வெளிச்சத்தையும் தரும். அக்கினி மிகவும் பிரகாசமாய் எரிவதற்குப் பயன்படும் பொருளான திரியைப் போலத் தான் ஜெபபாரம் உள்ளது. பரத்திலிருந்து தேவனால் ஜெப பாரம் பெற்றிராத ஒருவனுடைய ஜெபவாழ்வு மிக சாதாரணமாகவே இருக்கும். ஆனால், ஜெபபாரம் பெற்ற ஒருவனுடைய ஜெபமோ மிக வல்லமையுள்ளதாகவும், தேவனுடைய சிங்காசனத்தை அசைக்கக் கூடியதாகவும் இருக்கும். அப்படிப்பட்டவர்கள் ஆவியில் நிறைந்து விடும் பெருமூச்சைக்கூட தேவன் கேட்டு அவர்களுக்குப் பதில் தருகிறவராக இருக்கிறார்.

ஜெபபாரம் பெற்றவர்களின் ஜெபமானது ஒருபோதும் நோக்கமற்றதாக இராது. அது கரிசனையினாலும், மனதுருக்கத் தினாலும் நிறைந்ததாயும், கிருபை பொருந்தினதாயும் இருக்கும். ஜெபபாரமானது ஒருவனை எரிந்து கரைந்துபோகின்ற மெழுகுவர்த்தி போல தேவசமுகத்தில் தன் ஜீவனையே ஊற்றி ஜெபிக்க வைக்கும். ஆண்டவராகிய இயேசுவும் தமது ஆத்துமாவை மரணத்திலூற்றி ஜெபித்தாரே (ஏசா.53:12). ஜான் நாக்ஸ், இவான் ராபர்ட்ஸ், ஹைடி போன்றோர் பெற்றிருந்த ஜெபபாரம்தான் அவர்களை மணிக்கணக்காய், நாட்கணக்காய், மாதக்கணக்காய் தேவனுடைய பிரசன்னத்தில் வீழ்ந்து தேசத்திற்காக மன்றாட வைத்தது. ஜெபத்திலே தங்களை முழுமையாக ஊற்றிவிட வைத்தது. அழிவை நோக்கிச் செல்வோருக்காகக் கண்ணீர் விட்டு கதற வைத்தது. பெருமூச்சு விட வைத்தது. ஜெபபாரம்தான் ஒருவனை தேவனுக்கு முன்பாக நிறுத்தி அவருடைய கோபத்தையும், நியாயத்தீர்ப்பையும் தடுத்து நிறுத்தும் தேவனுடைய மாபெரும் கிருபையின் ஏதுவாக இருக்கிறது. என் கோபம் இவர்கள்மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப் போடவும் நீ என்னை விட்டுவிடு, உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்று கூறி சமஸ்த இஸ்ரவேலையும் அழிக்கத் தீவிரித்த தேவனுடைய மகாபெரிய கோபத்திற்கு முன்பாக மோசேயை நிற்க வைத்து, ஜனங்கள் அழிக்கப்படாதபடி தப்புவிக்கப்பட கெஞ்ச வைத்ததும், தேவனிடம் துணிந்து பேச வைத்ததும் ஜெபபாரமே.

ஜெபஅக்கினியினால் நிறைந்து மன்றாடும் ஒருவனுடைய ஜெபமே அக்கினிமயமான கற்களைக் கடந்து அக்கினிமயமான தேவனுடைய செவிக்கு எட்டுகிறது. ஜெபபாரமும், ஜெபஅக்கினியும் இணையும்பொழுது உண்டாகும் வல்லமையானது எப்பேர்ப்பட்ட இருளின் வல்லமையையும் கிழித்தெறிந்து உன்னதத்திலிருந்து அக்கினியை இறங்கிவரப்பண்ணுகிறது. ஆசாரிப்புக்கூடாரத்தில் தூபவர்க்கத்தை தூபபீடத்திலுள்ள அக்கினியில் போடும்பொழுது தேவனுக்கு முன்பாக எழும்புகிற நறுமணத்தைப்போலவே ஜெப தூபத்தை பாரம் எனும் அக்கினியோடு இணைத்து ஏறெடுக்கும் பொழுது அது தேவனுக்கு முன்பாக பரிசுத்த தூபமாக எழும்புகிறது. அது தேவனால் நினைவுகூறப்பட்டு தேவனிடத்திலிருந்து மகத்தான பதில்களைக் கொண்டு வருகிறது (வெளி.5:3; 8:5).

பரத்திலிருந்து போடப்பட்ட ஜெபஅக்கினியினால் நிரப்பப்பட்ட ஒருவனால்தான் மற்றவர்களையும் ஜெபத்தில் பற்றியெரிய வைக்க முடியும் (லூக்.12:19). பற்றியெரிகின்ற ஜெபஆவியைக் கொண்ட ஒருவனுடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகூட அக்கினியாக இருக்கும். ஜெபபாரத்தினால் உண்டான அனலை எப்பொழுதும் அனல்மூட்டிக் கொண்டே இருக்க வேண்டும் (2தீமோ.1:6).

வில்லியம்கேரி தேவனுடைய பாரத்தைச் சுமந்தவராக நம்முடைய தேசத்திற்கு மிஷனெரியாக வந்த தேவமனிதர். அவர் செருப்பு தைக்கும் வேலை செய்து கொண்டிருக்கும்போதே தனக்கு முன்பாக சுவரில் மாட்டியிருக்கும் இந்திய வரைப்படத்தை பார்த்து, இந்தியாவுக்காக கதறிக்கதறி அழுது ஜெபிப்பாராம். வலது கைக்கும், இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத கோடிக்கணக்கான மக்கள் அங்கே உண்டே. மூடப்பழக்க வழக்கங்கள் நிரம்பியிருக்கும் இந்தியாவை சந்திக்கமாட்டீரா? அடிமைத்தனத்தின் நுகத்தை முறித்து தேசத்தை விடுவிக்கமாட்டீரா? ஜனத்தை உம்முடைய இரத்தத்தினால் சுத்திகரிக்கமாட்டீரா? என்று புலம்பி தேவனுடைய பாதத்தில் மன்றாடுவாராம். அவருக்குள் ஜெபபாரம் அதிகரிக்கும்பொழுது, சுவரில் மாட்டப்பட்டிருந்த இந்திய வரைப்படத்தை தரையிலே விரித்து,

அதின்மேல் விழுந்து, புரண்டு அழுது இந்தியாவை இரட்சியும் என்று கண்ணீரோடு மன்றாடுவாராம். அந்த தேவமனிதர் தேவன் தனக்குள் வைத்த ஜெபஆவியை எப்பொழுதும் அனலுள்ளதாக காத்துக் கொண்டார். அதுவே அவரை தேவனுக்காக மாபெரும் காரியங்களைச் சாதிக்க வைத்தது.

ரிச்சர்ட் உம்பிராண்ட் காலைதோறும் சவுக்குகளால் சிறைக் காவலனால் அடிக்கப்பட்டவர். ஆனாலும் ஜெபிப்பதை நிறுத்தமாட்டார். ஒரு நாள் வேதனை தாங்க முடியாமல் தன்னை அடித்தவரைப் பார்த்து: ஐயா, நானும் உம்மைப்போல் ஒரு மனிதன்தானே, உங்களுக்கு இருக்கும் உணர்ச்சி போன்று எனக்கும் இருக்காதா? என்னை இப்படி அடிக்க எப்படி உங்களுக்கு மனம் வருகிறது என்று வேதனையுடன் கேட்டார். லெனின் தத்துவத்தைக் கூறினான் காவலன். மரத்திற்கு வேதனையாயிருக்கும் என்று எண்ணினால் அழகிய மேஜை, நாற்காலி போன்றவற்றைச் செய்ய முடியாது. கிறிஸ்தவர்கள் துன்பப்படுகிறார்கள் என்று நினைத்தால் எங்கள் தேசம் ஒருபோதும் முன்னேற முடியாது. உங்களை வேரோடு பிடுங்கிப்போடுவோம் என்றான். மாலை நேரமாகும் போதெல்லாம் அவன் அவரை நூற்றுக்கணக்கான சவுக்கடிகளுடன் ஒரு சிறிய அறைக்குள்ளே பட்டினியோடு பூட்டி விடுவான். தரையெல்லாம் ஈரம், அதில் தான் சிறுநீர், மலஜலம் கழிக்க வேண்டும். இரவில் பட்டினி போடப்பட்ட எலிகளை அந்த சிறிய அறைக்குள் குழாய்களின் மூலம் அனுப்பிவிடுவான். எலிகள் அவர் காயப்பட்ட இடத்தை கடித்துக்குதற முயற்சிக்கும். இராமுழுவதும் அந்த எலிகளோடு போராடிப்போராடி களைத்துப்போனாலும் தூங்க முடியாது. இதினால் அவருடைய சரீரம் நாளுக்குநாள் மிகவும் பெலவீனப்பட்டுபோனது. ஒருமுறை அவர்: நான் பலவிதமான சித்திரவதைக்குள் கடந்துபோயிருந்தாலும், அத்தனைப் பயங்கரமான வேதனையின் மத்தியிலும் இந்தியாவின் மீதுள்ள பாரம் அதிகரிக்கும்போது உடல் வலியைவிட ஜனங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமே என்கிற ஜெபபாரம் என்னை அதிகமாய் அழுத்தும். அப்பொழுதெல்லாம் நான் அதற்காகத் தொடர்ந்து ஜெபிப்பேன் என்றார்.

டேவிட் பிரெய்னார்டு செவ்விந்தியர் மத்தியில், தேவனுக்கென உழைத்து வல்லமையான எழுப்புதலைக் கண்ட தேவ மனிதர். அதிகாலையில் மிகக்குளிர்ச்சியான வேளையிலும் பாரத்தோடு ஜெபிக்கும்பொழுது வேர்வையினால் அவருடைய சரீரம் அப்படியே நனைந்துவிடுமாம். அதுதான் பாரமான ஊக்கமான ஜெபம். ஆண்டவராகிய இயேசு கெத்சமனே தோட்டத்தில் ஜெபித்தபொழுது வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் வெளிப்பட்டது என்று பார்க்கிறோமே. கருத்தில்லாமல், ஊக்கமில்லாமல், பாரமில்லாமல் பலமணி நேரம் ஜெபிப்பதைப்பார்க்கிலும் உண்மையான பாரத்தோடு ஜெபிக்கும் சில நிமிட ஜெபமே நம்முடைய ஜெபஆவியை அனலுள்ளதாக மாற்றும்.

இன்றைய கிறிஸ்தவ உலகில் மற்ற உபதேசங்களைப் பார்க்கிலும் ஜெபத்தைப் பற்றி அதிகமாகப் பேசப்பட்டிருந்தாலும், மிகக்குறைந்த அளவிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இன்று ஜெபபாரம் எனப்படுவது பெரும்பாலும் பயன்படுத்தப்படாத மூலதனமாகவும், தோண்டியெடுக்கப்படாத புதையலாகவும், கண்டு பிடிக்கப்படாத கண்டமாகவும் காணப்படுகிறது. ஜெபவீரனுக்கோ அது தேவனால் அருளப்பட்ட மிகப்பெரிய பொக்கிஷமாக இருக்கிறது. தேவனுக்கும் ஜெபவீரனுக்குமிடையே காணப்படும் மிக நெருக்கமான தனித்துவம் வாய்ந்த சிறந்த உறவே ஜெப பாரமாகும்.

சி.எச்.ஸ்பர்ஜன் ஜெபத்தைக்குறித்து, "ஜெபத்தின் இருதயம் என்பது நம் இதயத்திலிருந்து ஏறெடுக்கப்படுகிற ஜெபமேயாகும்" என்று குறிப்பிடுகிறார். ஜெபிப்பவரின் இருதயத்தைத் தேவனுடைய இதயத்தோடு நேரடியாக சுமப்பதே ஜெபபாரத்தின் நோக்கமாகும் என்று வேதாகமம் கூறுகிறது. ஜெபபாரத்துடன் தேவனிடத்தில் ஒரு வார்த்தை கூட கூறாமல், எதையும் கேட்காமல் ஜெபிக்கும் ஜெப மானது மிகப்பெரிய ஜெபங்களில் ஒன்றாகும். நம்முடைய பாரமுள்ள ஜெபங்கள் சிறகையடித்து வானாதி வானங்களைக் கடந்து சென்று, சர்வ வல்லவரையே கிரியைச் செய்ய வைத்து விடுகிறது.

அனலற்ற ஜெபம் என்பது ஜெபதூபத்தில் வராத பொருளாகத் தான் இருக்கக்கூடும். அது பிதாவிற்கு முன்பாக நறுமணமாக எழும்ப வாய்ப்பே இல்லை. அனல் இல்லாமல் ஜெபிப்பதைவிட கொஞ்சமாவது அனலோடு ஜெபிப்பது தான் தேவனுடைய சிங்காசனத்தை அசைக்கும். அந்த அனலுள்ள ஜெபம்தான் தேசத்தில் மிகப்பெரிய சுத்திகரிப்பை உண்டாக்கி எழுப்புதலுக்கு ஆயத்தப்படுத்தும்.

மேலும், பாதாளத்தின் வல்லமைகளை நடுங்கச் செய்வதும் அனலுள்ள ஜெபம் மாத்திரமே. இன்றைக்கு மலிந்துபோய்க் கிடக்கின்ற அனலற்ற ஜெபங்கள், மனிதர்களுக்குப் பிரியமாயிருக்கிற வாய்ச்சால ஜெபங்கள் எல்லாம் முனை மழுங்கிப்போன ஆயுதங்களே தவிர வேறல்ல.

தேவனுடைய ஆலய பலிபீடத்தின்மேல் எரிந்துகொண்டிருக்கும் நெருப்பு ஒருக்காலும் அவிந்துபோகாதபடிக்கு ஆசாரியர்கள் மிகவும் கவனமாகப் பார்த்துக்கொள்ளுவதுபோலவே நம்மீது வைக்கப்பட்ட ஜெபஆவியின் அனலைக் குறையாமல் காத்துக் கொள்ள வேண்டியது அவசியம். அதைக் கொண்டு தான் பிதாவின் சமுகத்திற்கு ஜெபதூபத்தை ஏறெடுக்க முடியும். வெதுவெதுப்பான ஜெபங்களைப் பரலோகம் ஏற்றுக்கொள்வதில்லை. அவைகள் தேவனுடைய சமுகத்திலிருந்து வாந்திப்பண்ணப்படும்.

தேவனே! உம்மைப் போலவே பாரத்தினால் நிறைந்து கரிசனையோடு ஜெபிக்க கிருபை தாரும்.

– புத்தக ஆசிரியர்

இயேசுவின் ஜெப பாரம்

பின்பு, இயேசு சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள்
நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி:
நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?
நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு
விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்;
ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்
(மத்.26:40,41)

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஜெபத்திற்கு நல்ல முன்மாதிரியாக இருக்கிறார். அவர் ஜெபத்தை உருவாக்க வரவில்லை. மாறாக அதற்கு உயிர் கொடுக்க வந்தார். அவர் ஜெபித்தார், ஜெபிக்கக் கற்றும் கொடுத்தார். அவரைப்போல ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தவர்கள் இதுவரை பூமியில் ஒருவரும் இருந்ததில்லை. இரவும் பகலும் அவரை நோக்கிக் கூப்பிட அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜெபவீரர்களான அத்துணைப்பேருடைய ஜெபங்களும், அனுபவங்களும், அதினால் விளைந்த நன்மைகளும், ஆசீர்வாதங்களும், எழுப்புதல்களும் மிகவும் அருமையானவை. ஆயினும், இயேசுகிறிஸ்துவின் ஜெபத்திற்கும், அவருடைய அனுபவத்திற்கும் அது ஈடாகாது. அவருடைய வாழ்வே ஜெபமாக இருந்தது. அவர் எப்பொழுதும் ஜெபிக்கிறவராகவே இருந்தார்.

அவரைக் கவனித்துப் பார்த்தால், அவர் பல விதங்களில் ஜெபித்திருக்கிறார். அவர் அற்புதம் செய்யும்போது ஜெபித்தார் (யோவா.11:41,42). பிறர் அவர்மேல் மூர்க்கவெறி கொண்டிருக்கும் போது ஜெபித்தார் (மாற்.15:32). இரவெல்லாம் ஜெபித்தார், அதிகாலையிலும் ஜெபித்தார் (மாற்.1:35). பகல்வேளையில் ஜெபித்தார், மாலையிலும் ஜெபித்தார் (மாற்.1:35). பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணினார் (எபி.5:7). சில சமயங்களில் சுருக்கமாக ஜெபித்தார் (யோவா.12:28). சில வேளைகளில் மணிக்கணக்காக ஜெபித்தார். தம்முடைய நேரத்தை யெல்லாம் ஜெபத்திலேயே செலவிட்டார். ஊழியங்கள் எவ்வளவு அதிகரித்ததோ அவ்வளவுக்கதிகமாய் ஜெபித்தார். ஊழியத்திற்கு செல்லுமுன்பும் ஜெபித்தார், ஊழியத்தை முடித்தபின்பும் ஜெபித்தார். பல சந்தர்ப்பங்களில் அந்தரங்கமாக ஜெபித்தார் (லூக்.5:16).

ஜெபத்திற்காக நாம் கவனித்துப் பார்க்க வேண்டிய ஒரு நபர் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே (எபி.3:1). ஜெபத்திற்காக நாம் கற்றுக்கொள்ள வேண்டியவரும் அவரே (மத் 11:29). ஜெபத்திற்காக நாம் பின்பற்ற வேண்டியவரும் அவரே (1பேது.2:21).

இயேசுகிறிஸ்து செய்த அத்தனை ஜெபங்களும் பாரம் நிறைந்த இதயத்திலிருந்து புறப்பட்ட உயிரோட்டமுள்ள ஜெபங்களாகவே இருந்தன. அவர் உள்ளத்தில் ஆழமான பாரத்தைக் கொண்டவராக இருந்தார். அந்தபாரம் அவரை ஜெபிக்கும் மனிதனாக வெளிப்படுத்தவில்லை. மாறாக அவரை ஜெபமனிதராகவே வெளிப்படுத்தியது. அவர் ஏறெடுத்த ஒவ்வொரு ஜெபத்திற்கும் பின்னணி என்னவென்று பார்த்தால் அது அவருக்குள் இருந்த ஜெபபாரமே என்பது தெளிவாகிறது. அந்த ஜெப பாரமே அவருடைய ஜெபத்திற்கு உயிர்மூச்சாக அமைந்திருந்தது.

சீஷர்களைத் தெரிந்தெடுப்பதில் இயேசுவின் பாரம்

"அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்துக்கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்" (லூக்.6:12,13)

மேற்கண்ட வசனம் ஆண்டவராகிய இயேசுவுக்குள் இருந்த பாரத்தை நன்கு புரிந்துகொள்ளச் செய்கிறது. அவர் தமக்குப் பின்பு, தாம் விட்டுச்செல்லும் மகிமையான ஊழியத்தை நிறைவேற்றி முடிக்கவும், நரகத்தின் அகோரப்பிடியில் இருந்து மீட்கப்பட வேண்டிய ஆத்துமாக்களைப் பரலோக இராஜ்ஜியத்திற்குள் சேர்க்கவும், உலகமெங்கும் போய் சகல ஜனங்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் வேண்டிய மகிமையான கிருபா பாத்திரங்களைத் தெரிந்தெடுக்க வேண்டும் என்பதினால் இராமுழுவதும் பிதாவாகிய தேவனை நோக்கி, அவருடைய சித்தத்தை அறிந்துகொண்டு அதின்படி செயல்படுவதற்காகப் பாரத்தோடு, ஊக்கமாக ஜெபித்தார். அவருக்குள் இருந்த அந்த ஜெபபாரமே சர்வவல்லமையுள்ளவராகிய தேவனை நோக்கி நீண்ட இரவை ஜெபத்திலே கழிக்க வைத்தது.

கிறிஸ்துஇயேசுவுக்குள் உண்மையான அந்த ஜெபபாரம் இல்லாமல் அவர் நீண்ட இரவு ஜெபித்திருப்பார் என்று கூறுவது சாத்தியமற்ற ஒன்றாகும். நம் உள்ளத்தில் ஏற்படும் பாரமே நம்மை நீண்ட இரவுகளைக் கடந்து இழுத்துச் செல்லக்கூடிய மாபெரும் உந்து சக்தியாக இருக்கிறது. நமக்குள்ளும் தேவனுடைய பாரம் கிரியைச் செய்யுமானால் நாமும் பல மணி நேரங்களை, பல இரவுகளைக் கடந்து அவருடைய பாதத்தில் காத்திருந்து மன்றாடி ஜெபிக்க நம்மாலும் கூடும்.

அனுதினமும் பிதாவின் சித்தத்தை அறிவதில் இயேசுவின் பாரம்

"அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓர் இடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்" (மாற்.1:35)

அனுதினமும் தாம் நிறைவேற்றி முடிக்க வேண்டிய ஊழியங்களையும், செய்ய வேண்டிய அற்புதங்களையும், செல்ல வேண்டிய பிரயாணங்களையும், பேச வேண்டிய வார்த்தைகளையும் பெற வேண்டுமே என்கிற பாரம்தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை ஒவ்வொரு நாளும் இருட்டோடே எழுந்து அதிகாலையிலே பிதாவாகிய தேவனை நோக்கி ஜெபிக்க வைத்தது.

என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன் என யோவா.6:38-லும், என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது என யோவா.7:16-லும், என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார். பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை என யோவா.8:29-லும் முழங்குகிறார் நம்முடைய கர்த்தர். அவர் எப்பொழுதும் பிதாவாகிய

தேவனுக்குப் பிரியமானவைகளையே செய்ய வேண்டும் என்று வாஞ்சித்தபடியினால், அந்த வாஞ்சையே அவருக்குள் ஒரு பாரமாக எழும்பி, அந்த பாரத்தைச் சுமந்ததினாலேயே அவர் அனுதினமும் அதிகாலமே ஜெபத்தில் தரித்திருந்தார் என்று நாம் கற்றுக் கொள்ளலாம்.

போராட்ட நேரத்தில் இயேசுவின் பாரம்

“அவர்களோ மூர்க்கவெறிகொண்டு, இயேசுவை என்ன செய்யலாமென்று ஒருவரோடொருவர் ஆலோசித்தார்கள். அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்” (லூக்.6:11,12)

இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தின் மத்தியில் தாம் சந்தித்த அத்தனைப் போராட்டங்களையும், பிரச்சனைகளையும் மாம்சத்தில் கையாளாமல் ஆவியிலே கையாண்டார். அவருடைய ஜீவனுக்கே சேதம் உண்டாகும்படி பரிசேயரும், வேதபாரகரும் அவர்மேல் மூர்க்கவெறி கொண்டு செயல்படுகையில் அந்த போராட்டத்தின் மத்தியில் பிதாவாகிய தேவனுடைய சித்தம் இன்னது என்பதைக் குறித்ததான பாரம்தான் அவருக்குள் இருந்து உந்துசக்தியாக பரலோகத்தின் தேவனை நோக்கி அவரை மன்றாட வைத்தது. வேதபாரகரும், பரிசேயரும் அவர்மேல் பொறாமை கொண்டு, அவருக்கு விரோதமாக எழும்பி, அவரைக் கொலை செய்யவும், அவரைக் குற்றப்படுத்தவும், அவருடைய வார்த்தைகளினால் அவரை அகப்படுத்தவும் எழும்பினபோது அவர் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்த நினையாமல், அந்த எதிர்ப்புகளை மேற்கொள்ள ஜெபத்திலே பிதாவின் உதவியை நாடினார். தாமாக எது ஒன்றையும் செய்துவிடாமல் பிதாவிடமே கேட்க வேண்டும் என்கிற பாரமே அவரை மேற்கொண்டு அவரை ஜெபிக்க வைத்தது.

சித்தத்தை நிறைவேற்றுவதில் இயேசுவின் பாரம்

"இந்த வார்த்தைகளை அவர் சொல்லி ஏறக்குறைய எட்டுநாளானபின்பு, அவர் பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும் கூட்டிக்கொண்டு, ஜெபம்பண்ணுகிறதற்கு ஒரு மலையின்மேல் ஏறினார். அவர் ஜெபம்பண்ணுகையில், அவருடைய முகரூபம் மாறிற்று, அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது" (லூக்.9:28–31)

மேற்கண்ட வசனத்தின் தொடர்ச்சியாக: அன்றியும் மோசே எலியா என்னும் இரண்டுபேரும் மகிமையோடே காணப்பட்டு, அவருடனே சம்பாஷணைபண்ணி, அவர் எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக்குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள் எனக் கூறுகிறது.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தின் நிறைவு நாட்களுக்குள்ளாக வந்தபோது, தமது மூலமாக நிறைவேற்றப்படவிருக்கும் சிலுவை மரணத்தைக் குறித்த பாரம் அவரை அழுத்தியிருந்திருக்கக் கூடும். ஆகவேதான், அவர் தம்முடைய சீஷர்களில் மிக நெருங்கிய சீஷர்களான பேதுருவையும், யோவானையும், யாக்கோபையும் மாத்திரம் கூட்டிக்கொண்டு, ஜெபம்பண்ணுகிறதற்கு ஒரு மலையின்மேல் ஏறி அங்கே ஜெபம் பண்ணினார்.

அப்பொழுது அவருடைய முகரூபம் மாறி, அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது, அவருடனே மோசே, எலியா ஆகிய இரண்டு பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும் மகிமையோடே காணப்பட்டு சிலுவை மரணத்தைக் குறித்து அவருடனே பேசினார்கள். பிதாவாகிய தேவனுடைய சித்தம் மாத்திரமே தம்முடைய மரணத்தில் நிறைவேற வேண்டும் என்கிற அவருடைய ஆத்துமாவில் ஏற்பட்ட அழுத்தமே அவரை ஜெபிக்க வைத்தது என்பது உண்மையே.

எருசலேமைக் குறித்த இயேசுவின் பாரம்

"எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று" (மத்.23:37)

கி.பி 70-ல் ரோமப் படைகள் மகாராஜாவினுடைய நகரம் என்று அழைக்கப்பட்ட எருசலேம் நகரத்தைச் சூழ்ந்து, அதற்குச் சுற்றிலும் மதில்போட்டு, அதனை வளைந்துகொண்டு, அதனை எப்பக்கத்திலும் நெருக்கி, அதின் பிள்ளைகளை தரையாக்கிப் போட்டு, தேவாலயத்து சுவரில் ஒரு கல்லின்மேல் ஒரு கல் இராதபடி அதை நிர்த்தூளியாக்கிப் போடும் நாட்கள் வரும் என்கிற வெளிப்பாட்டைப் பெற்றவுடன் ஆண்டவரை நிரப்பின பாரமே அவரை எருசலேமைப் பார்த்து கண்ணீர் சிந்தி புலம்பி அழுது ஜெபிக்க வைத்தது. அவர் தம்முடைய ஊழியத்தின் இறுதிநாளில் தாம் எருசலேம் நகரத்துக்கு அருகாக வந்தபொழுது, எருசலேம் நகரத்தார் தம்மையும், தம்முடைய வார்த்தையையும் தள்ளி விட்டிருந்த போதிலும் அவர்களுக்கு வரவிருந்த அழிவை நினைத்து கதறினார். அவ்வளவாக எருசலேமைக் குறித்த பாரம் அவரை அழுத்தியது.

இறுதிப்போராட்டத்தைக் குறித்த பாரம்

"அவர்களை விட்டுக் கல்லெறிதூரம் அப்புறம்போய், முழங்கால்படியிட்டு: பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார். அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது" (லூக்.22:41-45)

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தின் இறுதி நாட்களில் செய்த அவருடைய இறுதியான போராட்ட ஜெபம் இதுதான். இன்றும் அவர் பரலோகத்தில் நமக்காகப் பிதானிடத்தில் பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். ஆகிலும், அவர் தாம் மாம்சத்திலிருந்த நாட்களில் அதாவது மனிதனாக இப்பூவுலகில் வாழ்ந்தபொழுது தாம் இறுதியாக நிறைவேற்றி முடிக்க வேண்டிய சிலுவை மரணத்தினிமித்தம் அதிக வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். பாவமறியாத அவர் நமக்காகப் பாவமானார். பாவத்தின் வாசனையைக்கூட அறிந்திராத பரிசுத்த ரான அவர் உலகத்தின் தோற்றமுதற்கொண்டு இனி வரவிருக்கும் மனுக்குலத்தின் அத்தனைப் பாவத்தையும் சுமந்து தீர்க்கிற பாத்திரமானார்.

எப்பொழுதும் பிதாவாகிய தேவனோடு இருந்த அவர் பிதாவாகிய தேவனால் கைவிடப்படப் வேண்டிய நிலைக்கு உள்ளாக வேண்டியிருக்கிறதையும், எச்சூழ்நிலையிலும் தமக்கு மறைக்கப்படாத பிதாவின் முகம் தற்பொழுது மறைக்கப்பட இருப்பதையும் அறிந்தவராய் மிகவும் வேதனைப்பட்டு, இதினிமித்தம் பிதா எவ்வளவாய் துக்கமடைவார் என்பதை நினைத்த மாத்திரத்தில் தாங்க முடியாத பாரம் அவரை மேற்கொள்ளவே தம் ஜீவனையே பிழிந்து ஊற்றி கெத்சமெனே தோட்டத்தில் திரும்பத் திரும்பச் சென்று ஜெபித்தார் அவர்.

சற்று நேரத்தில் அந்த பாரம் அதிகரிக்கவே மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணத் துவங்குகிறார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந் துளிகளாய்த் தரையிலே விழுமளவிற்கு முழு உலகத்தின் பாவத்தையெல்லாம் தம்மேல் போட்டுக் கொண்டவராய்க் கதறிக் கதறி ஜெபிக்கிறார். அந்தளவிற்கு அந்த ஜெபமானது தாங்கொண்ணா பாரம் நிறைந்ததாக இருந்தது.

சிலுவையில் இயேசுவின் பாரம்

"பிதாவே, இவர்களுக்கு மன்னியும்"(லூக்.23:34)

சிலுவையின் மேன்மையை உணர்ந்திராத எந்த மனிதனும் பரலோகத்தின் வாசலுக்குக்கூட செல்ல முடியாது. ஏனெனில், சிலுவை மரணம் ஒன்றுதான் மாம்சத்திலிருந்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினுடைய பூமிக்குரிய வாழ்வின் இறுதிக்கட்டமும், மனிதர்களாகிய நம்முடைய வாழ்வின் துவக்கமுமாக இருக்கிறது. அந்நாட்களில் சிறிய குற்றங்களுக்குக் கூட பிரம்பினாலும், சவுக்கினாலும் அடிப்பதும்; பெரிய குற்றங்களுக்குத் தண்டனையாகக் கல்லெறிந்து கொல்லுவதுமே இஸ்ரவேலிலே நியாயப்பிரமாணமும், கட்டளையுமாக இருந்தது. ஆனால், ரோம சாம்ராஜ்யத்தில் கொடிய குற்றவாளிகளை மாத்திரமே சிலுவையில் அறைந்து கொல்வது தண்டனையாக இருந்தது.

அந்த கொடிய தண்டனையைத் தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் கொடுக்கப்பட்டது. அந்நாட்களில் சிலுவையில் அறையப்படும் தண்டனையானது சமுதாயத்தால் மிகவும் கேவலமாகவும், இழிவாகவும், அருவருப்பாகவும் பார்க்கப்பட்டது. அதை மக்கள் மிக இழிவான ஒன்றாகக் கருதியதால் மரண தண்டனை பெறும் குற்றவாளியின் அருகில்கூட அவனுடைய நெருங்கிய உறவினர்களோ, நண்பர்களோ கூட செல்லமாட்டார் களாம். அந்தளவிற்கு மிக மோசமான கொடுமையான மரணம்தான் சிலுவைமரணம் என்பது.

ஆனால், இயேசுவைப் பாருங்கள்... அவர் தம்முடைய மரண தருவாயிலும் மூன்று ஜெபத்தை ஏறெடுக்கிறார். அதனை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்...

மனுக்குலத்தை மன்னிக்கும்படி ஜெபம் (லூக்.23:34)

ஆண்டவர் சிலுவையில் அறையப்பட்டிருந்தபோதிலும், தாம் உருவாக்கிப் படைத்த தம்முடைய மக்களுக்காக ஜெபிக்க மறக்கவில்லை. தாம் சிலுவையில் அறையப்பட்டதினிமித்தம் தேவகோபம் வானத்திலிருந்து இறங்கி வந்துவிடவோ அல்லது நியாத்தீர்ப்பு வெளிப்பட்டுவிடவோ கூடாது என்பதில் அவருக்கு இருந்த பாரம்தான் தாம் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் வெகு பாடுபட்டபோதிலும் தம்மைச் சிலுவையிலே அறைந்தவர் களையும், அறையக் காரணமாயிருந்தவர்களையும் பிதாவே, இவர்களுக்கு மன்னியும் என்று ஜெபிக்க வைத்தது.

தாம் கைவிடப்படுகையில் ஜெபம் (மத்.27:45)

முழு மனுக்குலத்தையும் மீட்பதற்காகத் தம்மையே கொடுத்தாக வேண்டுமென்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியும். முழு உலகத்தின் பாவத்தையும் சுமந்தவராய் அவர் கல்வாரிச் சிலுவையில் பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கும்போது பிதாவாகிய தேவன் சிறிதுநேரம் அவரைக் கைவிடுகிறார். தேவன் தம்முடைய முகத்தை அவருக்கு மறைக்கிறார். இயேசு பிதாவாகிய தேவன்மீது அளவற்ற அன்பையும், நேசத்தையும் உடைவராக இருந்தார். அதுபோல தேவனும் இயேசுகிறிஸ்துவின்மீது அளவற்ற அன்பையும், நேசத்தையும் உடைவராக இருந்தபோதிலும் அவரைக் கைவிட வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. இயேசு தாம் சிலுவையில் அனுபவித்த எல்லாப் பாடுகளைப் பார்க்கிலும் பிதாவினுடைய முகம் தமக்கு மறைக்கப்பட்டதும், அவரால் கைவிடப்பட்டதுமான பாரமே அவரைப் பிதாவை நோக்கிக் கதற வைத்தது.

இறுதி ஜெபம் (லூக்.23:45)

ஆண்டவராகிய இயேசு தம்முடைய இவ்வுலக வாழ்க்கையை ஜெபத்திலேயே துவங்கி ஜெபத்திலேயே முடித்தார். நாமும் நம்முடைய வாழ்க்கையை ஜெபத்திலேயே துவங்கி ஜெபத்திலேயே முடிப்பது தான் ஒரு மகிமையான முடிவாகும். தமது ஊழியத்தின் பல்வேறு காரியங்களுக்காக அவருக்குள் ஏற்பட்ட அந்த பாரம்தான் அவரைப் பல சந்தர்ப்பங்களில் ஜெபத்திலே தரித்திருக்க வைத்தது. ஜெபித்திலே துவங்கி ஜெபத்திலே மகிமையாக முடிக்க வைத்தது.

அவர் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமை யுள்ள தேவன், நித்தியப்பிதா, சமாதானப் பிரபு என அழைக்கப்படுகிற சர்வ வல்லமையுள்ள கர்த்தரான போதிலும் தம்மைத்தாமே அர்ப்பணித்து தம் ஆவியை பிதாவிடம் ஒப்புவித்தார். தம்மிடத்தில் எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்த பிதாவிடம் தம்மையே முழுவதுமாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்கிற பாரமே கடைசி நிமிடம் வரைக்கும் அவரை ஜெபிக்கத் தூண்டியது. நாமும் வாஞ்சித்தால் நம்மாலும் நம் வாழ்க்கை ஜெபத்திலேயே துவங்கி ஜெபத்திலேயே முடித்து மகிமையோடே காணப்பட முடியும்.

தேவனுக்காகப் பற்றியெரியும்

இருதயத்திலிருந்து

வெளிப்படும் உணர்வுகளே

ஜெபபாரமாகும்.

தேவனே! உம்முடைய பாரம்
எனக்குள் வலியையும், வேதனையையும்
ஏற்படுத்த என்னை அர்ப்பணிக்கிறேன்.

– புத்தக ஆசிரியர்



ஜெப பாரத்தின் தாக்கங்கள்

பின்பு, இயேசு சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள் நித்திரை

பண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி:

நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?

நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்;

ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்

(மத்.26:40,41)

ஒரு மனிதனுக்குள் ஏற்படும் ஜெபபாரத்தின் தாக்கமானது அவன் தன்னையே கொடுக்குமளவிற்கு அவனைக் கொண்டு செல்கிறது.

ஜெபபாரம் தன்னை அர்ப்பணிக்க வைக்கும்

"ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான்"

(யாத்.32:32)

"தேவனுக்கு அர்ப்பணமுள்ள மனிதர்கள் தேவை". தேவனுடைய மனுஷனாகிய மோசே இஸ்ரவேல் மக்களுக்காக மன்றாடி ஜெபிக்கையில் அவனுக்குள்ளிருந்த அர்ப்பணிப்பு அற்புதமாய் வெளிப்படுவதைப் பாருங்கள். தேவஜனங்கள் தேவன் அருவருக்கிற பாவத்தைச் செய்து கர்த்தருக்குக் கோபமூட்டினபோது கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள். ஆகையால் என் கோபம் இவர்கள்மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப் போடவும் நீ என்னை விட்டுவிடு; உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்றார் என யாத்திராகமம் 32:9,10 கூறுகிறது.

ஆனால், மோசேக்குள் காணப்பட்ட ஜனங்களைக் குறித்த பாரமோ அவர்கள் அழிக்கப்படாதபடிக்கு அவர்களுக்காகத் திறப்பிலே நின்று மன்றாடி ஜெபிக்க வைத்தது. ஒரு மனிதனுக்கு தேவன் தரும் மிக மேன்மையான கிருபை என்னவென்றால் அது பரலோக பாக்கியமே. அந்த பாக்கியத்தைக்கூட தன் ஜனங்களுக்காக இழக்கத் துணியுமளவிற்கு தேவனுக்கு முன்பாக நிற்க வைத்தது அவருக்குள் இருந்த அந்த ஜெபபாரம். நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான் என்று கூறும் யாத்திராகமம் 32:32 மோசேயின் ஆழமான அர்ப்பணிப்பைச் சொல்லி நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறதல்லவா?

மேலும், தேவன் மோசேயை நோக்கி: நீ என்னை விட்டுவிடு. உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்று சொல்லியபொழுது, தேவன் தனக்கு தர இருந்த ஆசீர்வாதத்தையும், நன்மையையும், மேன்மையையும்கூட துச்சமாக நினைத்து அதற்குச் செவிகொடாமல்

தான் ஜனங்களின்மீது கொண்டுள்ள பாரம் நிறைந்த கரிசனை யினால் அவர்களுக்காகத் திறப்பின் வாயில் நிற்பதைத் தெரிந்து கொண்டார் கர்த்தருடைய தாசனாகிய மோசே.

அதற்கடுத்ததாக அற்புத பாத்திரமான எஸ்தரைப் பார்க்கும் போது, நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்து, மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலு மிருந்து, எனக்காக உபவாசம்பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம்பண்ணுவோம்; இவ்விதமாகச் சட்டத்தை மீறி, ராஜா வினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச் சொன்னாள் (எஸ்தர்4:16). தன்னையே முற்றிலுமாக அர்ப்பணித்து, தன் ஜீவனையும் பாராமல் ஜனத்திற்காகப் பரிந்துபேசவும், துணிந்து நின்று இராஜாவின் கட்டளையை மீறி அவரிடத்தில் செல்லவும் வைத்தது எஸ்தருக்குள் வைக்கப்பட்ட ஜெபபாரமே.

அதேபோல, சவுல் மரணமடையும் நாள்மட்டும் சாமுவேல் அப்புறம் அவனைக் கண்டு பேசவில்லை; இஸ்ரவேலின்மேல் சவுலை ராஜாவாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டதினி மித்தம், சாமுவேல் சவுலுக்காகத் துக்கித்துக் கொண்டிருந்தான் என்று 1சாமு.15:35-ல் சொல்கிறது. பிற்பாடு 1சாமு.16:1-ல் கர்த்தர் சாமுவேலைப் பார்த்து நீ எந்தமட்டும் துக்கித்துக்கொண்டிருப்பாய் என்று கேட்கிறதையும் பார்க்கிறோம். இஸ்ரவேலின் தீர்க்கதரிசியாகிய சாமுவேல் கர்த்தருடைய துக்கத்தை அறிந்த நாள்முதற்கொண்டு கர்த்தர் தம்மிடம் அதைப்பற்றி பேசும் வரையிலும் சவுலுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தார். அவருக்குள் இருந்த அந்த ஜெபபாரம் தொடர்ந்தேர்ச்சையாக பல நாட்கள் தேவசமுகத்தில் துக்கித்துக் கொண்டிருக்கச் செய்தது. அந்த பாரத்திற்கே சாமுவேல் தன்னை முற்றிலும் அர்ப்பணித்தார். இந்நாட்களில் தேவனுடைய பாரத்தைச் சுமக்க அர்ப்பணிக்கிற அநேகரைத் தேவன் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதைப் புரிந்துகொண்டு அவருடைய பாரத்தைச் சுமக்க நம்மை அர்ப்பணிப்போமா?

விருப்பமில்லாத ஒருவனிடத்தில் ஜெபபாரத்தை ஒருபொழுதும் தேவன் திணிப்பதில்லை. அதை வாஞ்சித்து தன்னை அர்ப்பணிக் கிறவனுக்கே அதைத் தருகிறார். ஜெபத்திற்காக தன்னுடைய ஜீவிய காலத்தையே அர்ப்பணித்த தேவனுடைய மனிதர்களான ஜான் நாக்ஸ், இவான் ராப்ட்ஸ், சி.டி. ஸ்டேட், ஜான் ஹைடி போன்றவர்கள் தேவனுக்கு முன்பாக இரவும், பகலும் தேசத்தின்மீது கொண்ட பாரத்தினால் தேவனே! என் ஜீவனை எடுத்துக்கொள்ளும், என் தேசத்தைத் தாரும் என்று கதறினார்கள். ஜெபபாரத்திற்கென்றே தங்களை அர்ப்பணிப்போரைத் தேவன் தேடிக்கொண்டிருக்கிறார் (எசே.22:30; ஏசா.59:14-16).

ஜெபபாரம் நேரத்தைக் கொடுக்க வைக்கும்

"தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன்மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்"

(தானி.6:10)

தானியேல் பாபிலோனில் நேபுகாத்நேச்சார் ராஜ்யபாரம் பண்ணும் வருஷத்தில் பாபிலோன் மாகாணம் முழுவதற்கும் அதிபதியாகவும், பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின்மேலும் பிரதான அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டு பல பொறுப்புகளை நிர்வகித்து வந்தார். பின்பு தரியுவின் ராஜ்யபாரத்தில் ராஜ்யம் முழுவதையும் ஆளும்படிக்குத் தன் ராஜ்யத்தின் மேல் நூற்றிருபது தேசாதிபதிகளையும், ராஜாவுக்கு நஷ்டம் வராதபடிக்கு அந்த தேசாதிபதிகள் கணக்கு ஒப்புவிக்கிறதற்காக அவர்களுக்கு மேலாக மூன்று பிரதானிகளையும் ஏற்படுத்துவது தரிவுக்கு நலமென்று கண்டது; இவர்களில் தானியேல் ஒருவனாயிருந்தான். தானியேல் பிரதானிகளுக்கும், நூற்றிருபது தேசாதிபதிகளுக்கும் மேற்பட்டவனா யிருந்தான் என்று தானியேல் 6:1-3 சொல்கிறது.

ஏற்கனவே நிறைவேற்றி வந்த பொறுப்புகளோடு, கூடுதல் பொறுப்புகள் தனக்குக் கொடுக்கப்பட்டபோதிலும் தன்மேல் சுமத்த யாதொரு குற்றமும், குறையும் இராதபடி தனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற அத்தனைப் பொறுப்புகளையெல்லாம் செவ்வனே நிறைவேற்றி வந்தார் தானியேல். அத்தனைக் கடமைகள் மத்தியிலும் தான் இடைவிடாமல் ஆராதிக்கிற தன்னுடைய தேவனுக்கு முன்பாக தினமும் மூன்று வேளையும் எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க ஜெபித்து வந்தார் அவர்.

தன்னுடைய ஜனங்களைக் குறித்ததான அழுத்தமும், பாரமும் அவருக்குள் இருந்தபடியினாலே தன் தேவனுக்கு முன்பாகப் பல மணி நேரங்கள் அவர் சமுகத்தில் அவரால் ஜெபிக்க முடிந்தது. உண்மையான ஜெபபாரம் ஒருவனுக்குள் இருந்தால் அது அவனை தேவனின் பாதத்தில் வீழ்ந்து கிடக்கச் செய்யும். நேரத்தைவிட தேவனின் பாரத்தையே பார்க்கச் செய்யும். நேரத்தைத் தியாகமாகக் கொடுக்காத எவரிடமும் ஜெபபாரம் கண்டிப்பாக இருக்க முடியாது என்பது நிதரிசனமான உண்மை.

ஜெபபாரம் உணவை மறக்க வைக்கும்

"நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்து, மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம்பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்; இவ்விதமாகச் சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச்சொன்னாள்" (எஸ்.4:16)

தாய் தகப்பனில்லாத தன்னை வளர்த்து ஆளாக்கிய மொர்தெகாய் மூலமாக ராஜாவின் அரமனைக்குள் யேகாயின் வசத்தில் இருந்த தனக்குச் சொல்லப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டு, அதனை நன்கு விசாரித்தறிந்த எஸ்தர் என்னும் அச்சாளுக்குள் ஏற்பட்ட பாரமே யூத குலத்தின் இரட்சிப்பிற்காக இரவும் பகலும்

புசியாமலும், குடியாமலுமிருந்து உபவாசப்பண்ணி தேவனை நோக்கி மன்றாடி ஜெபிக்க வைத்தது. எஸ்தரும், தாதிமாரும் செய்த மன்றாட்டைக் கேட்ட தேவன் அவர்கள் எதிர்ப்பார்த்திருந்த நன்மையையும், எதிர்ப்பார்த்திராத வேறே நன்மையையும் அநுக்கிரகம் பண்ணினார்.

ஜெபபாரமானது ஒருவனுக்கு அருளப்படுமாயின் அவனால் வேறொன்றையும் செய்ய இயலாது. தேவனே அந்தப் பாரத்தை எடுத்துப்போடும்வரை அவன் தன்னையே மறந்து பரத்தை நோக்கி அதற்காகவே கதறிக்கொண்டிருப்பான். தேவனுடைய மனுஷனாகிய மோசேயின் அழகான மன்றாட்டைப் பார்க்கும்பொழுது அவர் தம் ஜனங்கள் அழிக்கப்பட்டுவிடக்கூடாது என்கிற பாரத்தினால் உணவையும், தண்ணீரையும் மறந்து தேவனுக்கு முன்பாக விழுந்து கிடப்பதைக் காண முடிகிறது. கர்த்தரைக் கோபப்படுத்துகிறதற்கு நீங்கள் அவருடைய சமூகத்தில் பொல்லாப்பு செய்து நடப்பித்த உங்களுடைய சகல பாவங்களினிமித்தமும், நான் கர்த்தருக்கு முன்பாக முன்போல இரவும் பகலும் நாற்பதுநாள் விழுந்து கிடந்தேன்; நான் அப்பம் புசிக்கவுமில்லை, தண்ணீர் குடிக்கவு மில்லை. கர்த்தர் உங்களை அழிக்கும்படி உங்கள் மேல் கொண்டிருந்த கோபத்திற்கும் உக்கிரத்திற்கும் பயந்திருந்தேன்; கர்த்தர் அந்த முறையும் என் மன்றாட்டைக் கேட்டார் என்று கூறியதிலிருந்து உண்மையைப் புரிந்துகொள்ளலாம் (உபா.9:18,19).

ஜனங்களுக்காக உபவாசித்து ஜெபித்த சிலர்...

+ மோசே 40 நாட்கள் உபவாசித்து ஜெபித்தார்... (உபா.9:18,19)
+ தானியேல் 21 நாட்கள் உபவாசித்து ஜெபித்தார்... (தானி 9:3)
+ நெகேமியா உபவாசித்து ஜெபித்தார்... (நெகே 1:4)
+ எஸ்தர் 3 நாட்கள் உபவாசித்து ஜெபித்தாள்... (எஸ்தர் 4:16)
+ நினிவே மக்கள் 3 நாள் உபவாசித்து ஜெபித்தனர் (யோனா.3:6-8)

ஜெபபாரம் சுயத்தை மறக்க வைக்கும்

"ஆகையால் என் கோபம் இவர்கள் மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப்போடவும் நீ என்னை விட்டுவிடு; உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்றார்" (யாத்.32:9,10)

உன்னத தேவனுடைய விசேஷித்த ஜெபபாரமானது முழுவதும் தேவனுடைய விருப்பத்தையே அடக்கியிருக்கும். தேவனுடைய இராஜ்ஜியம் கட்டியெழுப்பப்படுவதே அதின் மையக்கருத்தாக இருக்கும். தேவனே சொல்லுகிறார்: என் கோபம் இவர்கள் மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப்போடவும் நீ என்னை விட்டுவிடு, உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்று. ஆனாலும், மோசே தான் ஒரு பெரிய ஜாதியாவதைப்பார்க்கிலும், தன் ஜனங்களுக்கு தேவன் இரக்கம் செய்வதையே வாஞ்சித்தார். தன் ஜனமல்லாத பரலோகத்தை அவர் ஏற்கவில்லை. மோசே தன்னுடைய சுயத்திற்கு முற்றிலும் மரித்து தேவன் தந்த பாரத்திற்கே முக்கியத்துவம் தந்து பரிந்துபேசுகிறார்.

எஸ்தரைப் பொறுத்தமட்டில் ராஜா அழைக்காமல் அவரைச் சந்திக்கும்படி உள்ளறைக்குச் சென்றால், அவர் செங்கோல் நீட்டாத பட்சத்தில் சாவு நிச்சயம் என்று தெரிந்திருந்தும் தன்னைப்பற்றி எந்த கவலையுமின்றி தன் ஜனத்திற்காகப் பரிந்து பேசும்படி போகிறாள்.

நெகேமியா சூசான் அரண்மனையில் முக்கிய பொறுப்புகளை வகித்து வந்தார். அப்பொழுது யூதாவிலிருந்த வந்த தன் சகோதரரில் ஒருவனாகிய ஆனானியும், வேறே சிலரும் சிறையிருப்பில் தப்பி மீந்த யூதர்கள் அந்தத் தேசத்திலே மகா தீங்கையும், நிந்தையும் அநுபவிக்கிறார்கள் என்றும், எருசலேமின் அலங்கம் இடிபட்டது என்றும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது என்றும் கூறிய மாத்திரத்தில் அவருக்குள் ஏற்பட்ட பாரமே அவரை தன்னையே மறக்கச்செய்து, பரலோகத்தின் தேவனை நோக்கி, பாவ அறிக்கை செய்து, கெஞ்சி, அழுது, துக்கித்து,

உபவாசம்பண்ணி மன்றாடி ஜெபிக்க வைத்தது. இராஜாவுக்கு முன்பாகச் செல்லும்பொழுதெல்லாம் துக்கமுகமாக இருக்கக்கூடாது என்பதை நன்கறிந்திருந்தும் நெகேமியா தன் ஜனங்கள் படும் சிறுமையையும், தீங்கையும் நினைத்துப்பார்த்து துக்கமுகத்தோடு இராஜாவுக்கு முன்பாக நிற்கிறார். பரலோகத்தின் தேவன் நெகேமியாவின் காரியங்களை கைக்கூடிவரப் பண்ணின பின்பு, தான் சூசான் அரண்மனையில் அநுபவித்திருந்த சகலவிதமான சௌகரியத்தையும் விட்டுவிட்டு எருசலேமுக்குச் சென்று தேவன் தன் மனதில் வைத்த பாரத்தின்படியே செயல்பட ஆரம்பிக்கிறார். தேவன் தரும் பாரமானது ஒரு மன்றாட்டு வீரனை தன்னையே அதற்காக செலவிட வைக்கும், பாரப்பட வைக்கும், செயல்பட வைக்கும் என்பது வேதம் நமக்குக் கற்றுத் தரும் உண்மை.

ஜெபபாரம் தொடர்ந்து ஜெபிக்க வைக்கும்

"பின்பு எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறி, தரையிலே பணிந்து, தன் முகம் தன் முழங்கால்பட குனிந்து..."

(1இரா.18:42)

ஜெபிக்கத் தொடங்கினால் மாத்திரம் போதாது. சரியாக ஜெபித்தால் மாத்திரம் போதாது. சற்றுநேரம் ஜெபத்தைத் தொடர்ந்து செய்தால் மாத்திரம் போதாது. மாறாக நாம் எல்லாரும் பாரத்தோடும், விசுவாசத்தோடும் தேவன் பதில் தரும்வரை நம்முடைய ஜெபத்தைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்று ஜார்ஜ் முல்லர் கூறுகிறார்.

உண்மையான ஜெபபாரம் இருக்கும் ஒரு மனிதனுக்குள் தேசத்தில் எழுப்புதலைக் காணும்வரை அந்த பாரம் கொஞ்சம்கூட அவனுக்குள் குறையாது. அப்படிப்பட்டவர்களைப் பார்த்து ஜெபம் பண்ண வாருங்கள்! திறப்பிலே நில்லுங்கள்!! என்றும் யாரும் வருந்தி அழைக்கவோ, அழுத்தம் கொடுக்கவோ தேவையில்லை. தேவன் தந்த ஜெபபாரத்தைத் தேவனே எடுத்துப்போடும் வரைக்கும் அவர்கள் அதைச் சுமந்துக்கொண்டே இருப்பார்கள்.

ஒரு தாயானவள் கருத்தரித்து பிள்ளையைப் பூரணமாய்ப் பெற்றெடுக்கும் வரை அதைச் சுமப்பதுபோலத்தான் ஜெபபாரமும் ஒருவனைத் தேவன் தந்தருளிய நோக்கம் நிறைவேறும்வரை தொடர்ந்து பாரத்தோடு ஜெபிக்க வைக்கிறது. தன் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு தேவன் கிரியைச் செய்யும் வரை அவனைத் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து மன்றாட வைப்பதும் அவனுக்குள் இருக்கும் அந்த ஜெபபாரமேயாகும்.

தேசத்தைக் குறித்த பாரத்தை ஒருவன் பெற்றுவிட்டால் தேவன் தேசத்திற்கு இரக்கம் செய்யும் வரை அவனுடைய கண்கள் அவரையே நோக்கிக் கொண்டிருக்கும். எலியாவைப் பாருங்கள், வறண்டுப்போய் செழிப்பற்று இருக்கும் தேசத்திற்காகப் பரிதபிக்கும் இருதயத்தோடு கர்மேல் பர்வத்தின் சிகரத்தில் ஏறி, முகம் முழங்காலில்பட குனிந்து தேவன் தேசத்தை ஆசீர்வதிக்கும் வரை அதற்காகத் தொடர்ந்து கருத்தோடும், கரிசனையோடும் விண்ணப்பம்பண்ணிக்கொண்டேயிருக்கிறார். எலியாவிற்குள் அந்த பாரத்தைத் தேவன் தந்திருக்கவில்லையெனில், அவர் இத்தனை பாரத்தோடு, வல்லமையோடு, தொடர்ந்து ஜெபித்திருக்க முடியாது.

ஜெபபாரமில்லாதவர்களின் ஜெபங்கள் சில நிமிடங்களுக்கு மேல் செல்லாது. அந்த சில நிமிடமே அவர்களுக்கு வெகுநேரம் ஜெபித்தது போலத் தோன்றும். நாம் மன்றாடி ஜெபிக்கத் துவங்க வேண்டுமென்றால் தேவனிடமிருந்து ஜெபபாரத்தைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நம்முடைய ஜெப வாழ்வில் ஒரு மாற்றம் உண்டாகும். அப்படியில்லாவிட்டால் கை சூம்பிப்போன மனிதனுடைய கையைப் போலத்தான் ஜெபத்தின் நீளத்தையோ, ஆளத்தையோ, அகலத்தையோ, உயரத்தையோ நம்மால் பார்க்க இயலாது. நாம் ஜெபபாரத்தைப் பெற்றோமானால் ஆவியானவர் நம்மைத் தொடர்ந்து பாரப்படுத்தியும், உற்சாகப் படுத்தியும் நம் மூலமாக வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு விண்ணப்பம்பண்ணிக்கொண்டேயிருப்பார்.

ஜனங்களுக்காகத் தொடர்ந்து ஜெபித்த சிலர்...

+ இயேசு கெத்சமெனே தோட்டத்தில் பாரம் நிறைந்தவராய் தொடர்ந்து மூன்றுமுறை ஜெபித்தார்... (லூக்.22:40-46)
+ ஆபிரகாம் சோதோம், கொமோராவிற்காக இடைவிடாமல் தொடர்ந்து மன்றாடி ஜெபித்தார்... (ஆதி.18:23-33)
+ கர்த்தருடைய தாசனாகிய மோசே இஸ்ரவேல் மக்களுக்கு தேவன் மனமிரங்கும்படி நாற்பது நாட்கள் உபவாசித்து திறப்பிலே நின்று ஜெபித்தார்... (உபா.9:18)
+ தானியேல் தன்னுடைய ஜனங்களின் விடுதலைக்காக தேவனை நோக்கி தொடர்ந்து 21 நாட்கள் உபவாசித்தார்... (தானி.9:3-19)
+ அப்.பவுல் தன் ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டவர்களுக்காக இடைவிடாமல் விண்ணப்பம்பண்ணினார்... (1தெச.1:4,5:17; ரோம.1:9)
+ சாமுவேல் ஜனங்களைப் பகைவரிடமிருந்து விலக்கி இரட்சிக்கும்படி ஓயாமல் விண்ணப்பம்பண்ணினார்...(1சாமு.7:8)
+ எரேமியா தன் ஜனத்தின் அடிமைதானத்தை நினைத்து இரவும், பகலும் ஓயாமல் கண்ணீரோடு ஜெபித்தார்... (எரே.14:17)
+ முதலாம் நூற்றாண்டில் மாபெரும் எழுப்புதலுக்கு வித்திட்டது ஆதிஅப்போஸ்தலர்களின் தொடர்ந்தேர்ச்சையான ஜெபமே... (அப்.6:4,7)

தேவ ஊழியர் வில்லியம்கேரி இந்தியாவில் தம் ஊழியத்தின் மூலமாக முழுமையாய் மனந்திரும்பிய ஒருவர் ஞானஸ்நானம் பெறும்படிக்கு மாத்திரமே ஏழு வருடங்கள் தொடர்ந்து ஜெபித்தாராம். அவரைப் போல நாமும் நம்முடைய கண்களின் கருவிழியை ஓய்ந்திருக்க வொட்டாமல் தொடர்ந்து ஜெபிக்க உன்னத தேவனிடமிருந்து ஜெபபாரத்தைப் பெற்று ஜனங்களுக்காகத் தொடர்ந்து ஜெபிக்கிற ஜெபமனிதர்களாக மாற கர்த்தர் நமக்கு கிருபை செய்வாராக.

ஜெபபாரம் சோர்ந்துபோகாமல் ஜெபிக்க வைக்கும்

"சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும். அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ" (லூக்.18:1,7)

திட்டமிடப்படாத ஜெபமும், பாரமில்லாத கரிசனையற்ற ஜெபமும் எளிதில் ஒரு மனிதனைச் சோர்வுக்குள்ளாக்கிவிடும். உன்னதரின் இருதயபாரம் ஒருவனுக்குள் வைக்கப்படும்பொழுது தான், அந்த பாரம் அவனைச் சோர்வின்றித் தொடர்ந்து ஜெபத்திலே தரித்திருக்க உதவி செய்கிறது. மட்டுமல்ல, அதுவே ஜெபத்திலே பெரும் வலிமையைத் தரும் தேவனுடைய கிருபையின் ஏதுவாகவும் இருக்கிறது.

பாரமில்லாமல் ஜெபிப்பது கர்ப்பம் தரித்து காற்றைப் பெற்றெடுப்பதுபோல. ஒரு தாய் பத்து மாதம் கருவை வயிற்றில் சுமந்தும் பிள்ளையைப் பெற்றெடுக்கவில்லையெனில் அந்தத் தாய் அனுபவித்த வலியும், வேதனையும் வீண். அதுபோலத்தான் பாரமற்ற ஜெபமும். ஜெபத்தினுடைய ஆழத்தின் அளவு என்பது ஒரு ஜெபவீரனுக்குள் தேவன் வைக்கிற ஜெப பாரத்தினுடைய அளவேயாகும். அதுதான் அவனை ஜெபத்திலே தள்ளிக்கொண்டு போகும் தேவனுடைய உந்து சக்தியாக இருக்கிறது.

தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் இடைவிடாமல், சோர்ந்துபோகாமல் தொடர்ந்து ஜெபிக்க வேண்டுமென்றால், அவர்களுக்குப் பரலோகம் தரும் பாரமே மிக அவசியமான ஒன்றாக இருக்கிறது. அந்த பாரம் தான் அவனைக் கொழுந்துவிட்டு எரியச்செய்யும் ஜெப அனுபவத்திற்கு நேராக அழைத்துச் செல்கிறது. அதனை வாஞ்சிக்கிற அத்தனைப் பேருக்கும் தேவன் தம் இருதயத்திலுள்ள பாரத்தினால் நிரப்புகிறார். இன்னும் அதிகமாய் ஜெபத்தின் மேன்மைக்கு நேராகவும் நடத்திச் செல்கிறார்.

ஜெபபாரம் தேவனுக்கு முன்பாக நிற்க வைக்கும்

"அப்பொழுது அந்தப் புருஷர் அவ்விடம் விட்டுச் சோதோமை நோக்கிப் போனார்கள்: ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான்" (ஆதி.18:22)

ஜெபபாரமானது ஒருபோதும் மனுஷனுக்கு முன்பாக அல்ல, எப்பொழுதும் தேவனுக்கு முன்பாகவே நிற்கச் செய்கிறது. தேவனுக்கு முன்பாக நிற்க மட்டுமல்ல, அவருடைய இருதயத்திற்கு அருகிலும் கொண்டு செல்கிறது. அவருடைய உள்ளத்திலுள்ள வலியையும், வேதனையையும், அங்கலாய்ப்பையும் சுமந்து திறப்பிலே நிற்கிற மன்றாட்டு வீரனாகவும் மாற்றிவிடுகிறது.

பின்பு கர்த்தர் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதா யிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப் பதினாலும், நான் இறங்கிப்போய், என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன் என்றார் என்பதாக ஆதியாகமம் 18:20,21 வசனங்கள் சொல்கிறது.

தேவப்பிள்ளைகளுடைய கண்ணீர்... (சங்.56:8)

தானதர்மங்கள்... (அப்.10:4)

ஜெபங்கள்... (வெளி.5:8; 8:3; அப்.10:4)

இவையாவும் தேவனுடைய சமுகத்திற்கு எட்டிச்சென்று அவரிடத்திலிருந்து நன்மையைக் கொண்டு வருகிறது என்று கூறும் அதே வேதம், மனிதர்களால் செய்யப்படும் பாவங்களும், அக்கிரமங்களும்கூட அவருடைய சமுகத்தை எட்டிச்சென்று (அப்.18:20; 1சாமு.2:17; வெளி.18:5) பின்பு, அவைகள் தேவனால் நினைவுகூறப்பட்டு அதற்கேற்ற நீதியையும், தண்டனையையும் கொண்டு வருகிறது என்றும் கூறுகிறது.

நீதியுள்ள நியாயாதிபதியாகிய தேவன் தேசத்தில் செய்யப்படும் பாவங்களுக்குத் தக்கதாக நீதியைச் சரிக்கட்ட எழும்பும்பொழுது தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஜெபபாரமுள்ள ஒருவன் அவருக்கு முன்பாக நிற்கும்போது வரவிருக்கும் அழிவு தடுத்து நிறுத்தப்படுகிறது.

சோதோம் கொமோராவிற்கு வரவிருந்த அழிவு தடுத்து நிறுத்தப்பட அபிரகாம் தேவனுக்கு முன்பாக நின்றார் (ஆதி.18:22)

தேவனின் கோபத்தை ஆற்ற மோசே அவருக்கு முன்பாக நின்றார் (சங்.106:23; யாத்.32:9-10)

தேவனை அறியாத ஜனங்களுக்காகவும், பின்மாற்றத்தி லுள்ள தேவஜனங்களும், இஸ்ரவேல் இராஜ்யமும் தேவனை அறிய எலியா தேவனுக்கு முன்பாக நின்றார் (1இரா.17:1)

ஆரோன் (பிரதான ஆசரியன்) கர்த்தருக்கு முன்பாக தன் இரண்டு தோள்களின்மேலும் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை ஞாபகக் குறியாகச் சுமந்துவர, அந்த இரண்டு கற்களையும் ஏபோத்துத் தோள்களின் மேல் கற்களாக வைக்கப்பட்டது (யாத்.28:12). அதின்படி ஜனங்களின் காரியங்களைச் சுமந்து பிரதான ஆசாரியன் கர்த்தருக்கு முன்பாக நிற்கிறான்.

தன் பாவத்திற்காகவும், தன் ஜனங்களின் பாவத்திற்காகவும் தானியேல் பரிசுத்தமுள்ள தேவனுக்கு முன்பாக விண்ணப்பம் பண்ணினார் (தானி.9:20)

இப்படி வேதத்தில் ஜெபபாரம் பெற்ற அநேகர் தேவனுக்கு முன்பாக நின்றதை நாம் வேதத்தில் வாசித்தறிகிறோம். அதுபோல இக்கடைசி நாட்களில் நாமும் தேவனிடத்திலிருந்து ஜெபபாரத்தைப் பெற்று அவருக்கு முன்பாக நிற்க நம்மை அர்ப்பணிப்போம். கர்த்தர் தம்முடைய மகிமையான ஜெபபாரத்தை நம் ஒவ்வொருவருக்கும் அருளிச்செய்து அவர் சமுகத்தில் நிற்க நம்மை பெலப்படுத்துவார். ஆமென்.

தேவனே! என்னுடைய இருதயத்தைக் கிழித்து மன்றாடவும், பரிந்து பேச திறப்பிலே நிற்கவும் பெலன் தாரும்!!

– புத்தக ஆசிரியர்

பரிசுத்தவான்களின் ஜெப பாரம்

பின்பு, இயேசு சீஷர்களிடத்தில் வந்து,
அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு,
பேதுருவை நோக்கி:
நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட
விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு
விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான்,
மாம்சமோ பலவீனமுள்ளது என்றார் (மத்.26:40,41)

மோசேயின் ஜெபபாரம்

“கர்த்தரைக் கோபப்படுத்துவதற்கு நீங்கள் அவருடைய சமுகத்தில் பொல்லாப்புச் செய்து நடப்பித்த உங்களுடைய சகல பாவங்கள் நிமித்தமும், நான் கர்த்தருக்கு முன்பாக முன்போல இரவும் பகலும் நாற்பதுநாள் விழுந்துகிடந்தேன்; நான் அப்பம் புசிக்கவுமில்லை, தண்ணீர் குடிக்கவுமில்லை. கர்த்தர் உங்களை அழிக்கும்படி உங்கள்மேல் கொண்டிருந்த கோபத்திற்கும் உக்கிரத்திற்கும் பயந்திருந்தேன்; கர்த்தர் அந்த முறையும் என் மன்றாட்டைக் கேட்டார்” (உபா.9:18,19)

ஜெபபாரம் இல்லாத தேவப்பிள்ளைகளால் ஜனங்களுக்கும், தேசத்திற்கும் ஒரு பிரோயோஜனமும் இல்லை. அவர்கள் தேவனுக்கும் பிரயோஜனமற்றவர்களாகவே இருப்பார்கள். பாரம் கொண்டவர்கள் தேசத்தின் நிலையைக் கண்டு புலம்பி அழுது தேவனுக்கு முன்பாக நிற்பார்கள்.

ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் மோசே யோடே முகமுகமாய்ப் பேசினார் (யாத்.33:11) என்று மோசேயைக் குறித்து வேதம் சொல்கிறது. ஏனெனில், மோசே தேவனுடைய சிநேகிதனாக இருந்தார். தேவனுடைய இருதய பாரத்தை நன்கு அறிந்திருந்தார். அந்த பாரத்தினாலேயே நாற்பது நாட்கள் இரவும் பகலும் உணவை மறந்து, கர்த்தருடைய சமுகத்தில் தன் ஜனத்தின் மேல் தேவனுடைய இரக்கம் வருவதற்காகத் திறப்பிலே நின்று மன்றாடினார். மோசே மாத்திரம் தேவனுக்கு முன்பாக மன்றாடி யிருக்கவில்லையென்றால் இஸ்ரவேல் ஜனம் இருந்திருக்க வாய்ப்பே இல்லை என்று சொல்லுமளவிற்கு மோசேயின் ஜெபம் பாரம் நிறைந்த மன்றாட்டாக இருந்தது.

நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னை பார்வோனிடத்திற்கு அனுப்புவேன் வா (யாத்.3:10) என்று சொல்லிய கர்த்தர் இஸ்ரவேலர் தமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தபொழுதோ...

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; எகிப்து தேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள். அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள். அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்து கொண்டு, அதற்குப் பலியிட்டு: இஸ்ரவேலரே, உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள் என்றும், இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள். ஆகையால் என் கோபம் இவர்கள்மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப் போடவும் நீ என்னை விட்டுவிடு; உன்னை ஒரு பெரிய ஜாதியாக்கு வேன் (யாத்.32:9,10) என்றும் மனம்மாறிச் சொல்லுகிறார்.

இஸ்ரவேலர் தமக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதவரை அவர்களை என் ஜனங்கள் என்று கூறிய கர்த்தர் அவர்கள் பாவஞ் செய்தபோதோ உன் ஜனங்கள் என்று கூறுகிறார். அப்பொழுது மோசே, கர்த்தரிடத்திற்குத் திரும்பிப்போய்: ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள். ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லா விட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் (யாத்.32:31,32) என்றார்.

இஸ்ரவேலரைத் தள்ளிவிட நினைத்த தேவனுக்கு முன்பாக பாரம் பெற்றிருந்த மோசே அவர்களுக்காகத் தேவனிடத்தில் பரிந்துபேசுகிறார். தன் ஜனம் இல்லாத பரலோகத்தை அவர் விரும்பவில்லை. தனக்குக் கிடைத்த பரலோக பாக்கியத்தைக் கூட இழக்கத் துணிந்து தேவனுக்கு முன்பாக கதறியழுது, கண்ணீரோடு ஜெபித்தார். தன் பிள்ளை சாகிறதைப் பார்க்கமாட்டேன் என்று கதறிய ஆகாரைப்போல தன் ஜனம் அழிவதைப் பார்க்க விரும்பாத மோசே தாங்க முடியாத பாரத்தினால் அவர் பாதத்தில் விழுந்து மன்றாடினார். மோசே தன் ஜனத்தின்மேல் கொண்டிருந்த பாரத்தைப் பார்க்கும் பொழுது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது.

யோசுவாவின் ஜெபபாரம்

"ஆ, ஆண்டவரே, இஸ்ரவேலர் தங்கள் சத்துருக்களுக்கு முதுகைக் காட்டினார்கள். இப்பொழுது நான் என்ன சொல்லுவேன்? கானானியரும் தேசத்துக்கு குடிகள்யாவரும் இதைக் கேட்டு, எங்களை வளைந்துக்கொண்டு, எங்கள் பேரைப் பூமியிலிராதபடிக்கு வேரற்றுப் போகப்பண்ணுவார்களே; அப்பொழுது உமது மகத்தான நாமத்துக்கு என்ன செய்வீர்?" (யோசு.7:8,9)

மனம் உடைந்து கதறுகிறார் யோசுவா. ஜனத்தின்மேல் அவர் கொண்டிருந்த பாரம் தேவனுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து அவரை மன்றாட வைத்தது. அப்பொழுது கர்த்தர் யோசுவாவை நோக்கி: எழுந்திரு, நீ இப்படி முகங்குப்புற விழுந்துகிடக்கிறது என்ன? இஸ்ரவேலர் பாவஞ்செய்தார்கள். நான் அவர்களுக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையை மீறினார்கள்; சாபத்தீடானதில் எடுத்துக்கொண்டதும், களவுசெய்ததும், வஞ்சித்ததும், தங்கள் பண்டம் பாடிகளுக்குள்ளே வைத்ததும் உண்டே, ஆதலால் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக்கூடாமல், தங்கள் சத்துருக்களுக்கு முதுகை காட்டினார்கள்; அவர்கள் சாபத்தீடானதை தங்கள் நடுவிலிருந்து நிக்கிரகம்பண்ணாவிட்டால், இனி உங்களோடு இரேன். எழுந்திரு, நீ ஜனங்களைப் பரிசுத்தம் பண்ணிச் சொல்ல வேண்டியது என்னவென்றால்: நாளைய தினத்துக்கு உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்; இஸ்ரவேலரே, சாபத்தீடானது உங்கள் நடுவே இருக்கிறது; நீங்கள் சாபத்தீடானதை உங்கள் நடுவிலிருந்து விலக்காதிருக்குமட்டும், நீங்கள் உங்கள் சத்துருக் களுக்கு முன்பாக நிற்கக்கூடாது என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் (யோசு.7;10-13) என்று வேதம் சொல்கிறது.

இஸ்ரவேலர் பாவம் செய்தார்கள். சாபத்தீடானதை எடுத்துக் கொண்டார்கள். அதனால்தான் அவர்கள் தோல்வியடைந்தார்கள். சாபத்தீடானது அகலும் வரை அவர்களால் சத்துருக்களோடே போராட முடியாது. ஆகவே, கர்த்தர் யோசுவாவைப் பார்த்து:

எழுந்திரு, ஜனங்களைப் பரிசுத்தம்பண்ணு என்று சொல்லுகிறார். ஜனங்கள் பாவம் செய்து தேவனைக் கோபமூட்டினதினாலும், அவர்கள் யுத்தத்தில் தோல்வியடைந்ததினாலும், தேவனே வந்து எழுந்திரு என்று சொல்லும் வரை அவருடைய பாதத்தில் விழுந்து கதறிக் கொண்டிருந்தார் யோசுவா. பாரம் பெற்ற ஜெபவீரர்கள் தான் தேவன் இறங்கி வரும்வரை ஜெபத்தை நிறுத்தமாட்டார்கள். நாம் பாரத்தோடு ஜெபிக்காமல் இருந்தால் ஜெபித்த பிறகும் பாரம் இருந்து கொண்டே இருக்கும். நம்மேல் வைக்கப்பட்ட பாரத்தை தேவனுடைய பாதத்தில் உண்மையாக ஊற்றும்பொழுது அவருடைய அளவற்ற இரக்கம் தேசத்தின்மேல் மூடும் என்பதை மறந்து விடக்கூடாது.

சாமுவேலின் ஜெபபாரம்

"கர்த்தர் சாமுவேலை நோக்கி இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிராதபடிக்கு, நான் புறக்கணித்துத் தள்ளின சவுலுக்காக நீ எந்தமட்டும் துக்கித்துக் கொண்டிருப்பாய்?" (Iசாமு.16:1)

இஸ்ரவேலின்மேல் சவுலை ராஜாவாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டதினிமித்தம், சாமுவேல் சவுலுக்காகத் துக்கித்துக் கொண்டிருந்தான் (1சாமு.15:35) என்று வாசிக்கிறோம்.

தேவனுடைய உள்ளத்தை உடைத்த காரியம் சாமுவேலின் உள்ளத்தையும் உடைத்தது. தேசத்தில் நடைபெறும் எத்தனையோ காரியங்கள் தேவனுடைய உள்ளத்தைத் தினம்தினம் உடைத்துக் கொண்டேயிருக்கிறது. தேவனுடைய இருதயத்திற்கு அருகில் செல்லுகிற மன்றாட்டு வீரர்களால் மாத்திரம்தான் அவருடைய உள்ளத்தை உடைக்கிற காரியம் எதுவென்று அறிந்துணர முடியும். ஒருமுறை அவருடைய உள்ளத்திற்கருகில் சென்று, அவருடைய வலியையும், அங்கலாய்ப்பையும் அறிந்துவிட்டால் ஒருபோதும் சாதாரணமாக ஜெபிக்க முடியாது. இருதயத்தைக் கிழித்துக்கொண்டு மன்றாடத் தோன்றும். அந்தளவிற்கு சாமுவேல் தேவனுடைய உள்ளம் உடைக்கப்பட்டிருந்ததைக் கண்டு கதறினார். பாரம் கொண்ட ஜெபவீரன் தான் பரலோகத்தால் அங்கீகரிக்கப்பட்டவனாகவும், நம்பப்படுகிற அவருடைய சிநேகிதனாகவும் இருக்க முடியும்.

நெகேமியாவின் ஜெபபாரம்

"இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது, சிலநாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி..." (நெகே.1:4)

நெகேமியா பாபிலோனில் பெர்சிய ராஜா அர்தசஷ்டாவுக்கு பானபாத்திரக்காரனாக இருந்தார். அவருடைய சகோதரரில் ஒருவனாகிய ஆனானியும், வேறே சில மனுஷரும் யூதாவிலிருந்து வந்தார்கள்; அவர்களிடத்தில் அவர் சிறையிருப்பில் மீந்து தப்பின யூதரின் செய்தியையும், எருசலேமின் செய்தியையும் விசாரிக்கிறார். அதற்கு அவர்கள்: சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்தத் தேசத்திலே மகா தீங்கையும் நிந்தையையும் அநுபவிக்கிறார்கள்; எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது என்றார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே அவர் பரலோக தேவனால் அருளப்பட்ட ஜெபபாரத்தினால் நிறைந்தவராய்... (நெகே.1:2-4)

உட்கார்ந்து அழுகிறார்

நெகேமியா அந்தச் செய்தியைக் கேட்டமாத்திரத்தில் செயலற்றவராய் உட்கார்ந்து அழத் துவங்குகிறார். துக்கம் தொண்டையை அடைக்கும் என்று பழமொழி கூறுவதுபோல அதிகப்படியான வேதனையும், கவலையும் ஒருவனை ஆழ்த்தும்போது அவன் அதைத் தாங்கமுடியாமல், எதையும் செய்ய இயலாதவனாய் இடிந்துபோய் உட்காருவதும், என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நிற்பதும் இயற்கையே. அதுபோலத் தான் நெகேமியாவும் கனப்பொழுது செயலற்றவராய் இருந்து, உடன் சுதாரித்துக்கொண்டு அச்சமயம் தேவனால் அருளப்பட்ட பாரத்தினால் நிரப்பப்பட்டவராய் ஜனத்திற்காகவும், எருசலேமுக்காகவும் அவர் பாதம் அமர்ந்து அழுகிறார். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வழியை மாறுபாடாக்கி, தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்ததினிமித்தம் அழுதுகொண்டு

விண்ணப்பஞ்செய்யும் சத்தம் உயர்ந்த ஸ்தானங்களிலே கேட்கப் படும் (எரே.3:21) என்று வசனம் சொல்வதுபோல நெகேமியா கண்ணீரைக் காண்கிற தேவனிடத்தில் அழுது புலம்பி ஜெபிக்கிறார்.

சில நாட்களாய் துக்கிக்கிறார்

பரலோகம் கொடுத்த பாரம் நெகேமியாவைத் தேவனுடைய பிரசன்னத்தில் சில நாளாகத் துக்கிக்கச் செய்தது. ராஜாவின் வேலைக்காரரில் ஒருவரும் துக்கத்துடனே ராஜாவுக்கு முன்பாக நிற்கக்கூடாது என்கிற கடுமையான சட்டம் இருந்தும், பானப்பாத்திரக் காரனான நெகேமியா துக்கமுகமாய் ராஜாவுக்கு முன்பாகச் செல்கிறார். அதை நெகேமியாவே சொல்வதைக் கேளுங்கள்.

அப்பொழுது ராஜா என்னைப் பார்த்து, நீ துக்கமுகமாயிருக் கிறது என்ன? உனக்கு வியாதியில்லையே, இது மனதின் துக்கமே ஒழிய வேறொன்றும் அல்ல என்றார்; அப்பொழுது நான் மிகவும் பயந்து, ராஜாவை நோக்கி: ராஜா என்றைக்கும் வாழ்க; என் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும் ஸ்தலமாகிய நகரம் பாழானதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கும் போது, நான் துக்கமுகத்தோடு இராதிருப்பது எப்படி? (நெகே.2:2,3) என்று. பாரத்தோடு ஜெபிக்கிற ஒரு மன்றாட்டு வீரனுக்குள் தேசத்தின் இரட்சிப்பைக் குறித்த துக்கம் கட்டாயம் இருக்குமென்று நம்புகிறேன்.

உபவாசிக்கிறார்

ராஜாவுக்கான ஆகாரத்தை ருசி பார்த்து கொடுக்க வேண்டிய நெகேமியாவுக்குள் ஏற்பட்ட ஜெபதாக்கம் அவரை உணவை மறக்கச் செய்து, தேவனுடைய பிரசன்னத்தில் உபவாசிக்க வைத்தது.

மன்றாடி ஜெபிக்கிறார்

அந்த பாரம் நெகேமியாவை மன்றாட்டு ஜெபத்திற்கு நேராகவும் இழுத்துச்சென்றது. ஜனங்களோடு தன்னையும் சேர்த்துக்கொண்டு பாவங்களைத் தேவன் மன்னித்தருளும்படி மன்றாடுகிறார் அவர்.

எஸ்றாவின் ஜெபபாரம்

"அந்தப்பலி நேரத்திலே நான் துக்கத்தோடே எழுந்து, கிழித்துக்கொண்ட வஸ்திரத்தோடும் சால்வையோடும் முழங்காற்படியிட்டு, என் கைகளை என் தேவனாகிய கர்த்தருக்கு நேராக விரித்து...

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, நீர் நீதியுள்ளவர். ஆகையால் இந்நாளில் இருக்கிறதுபோல, நாங்கள் தப்பி மீந்திருக்கிறோம். இதோ, நாங்கள் உமக்கு முன்பாகக் குற்றத்திற்குள்ளானவர்கள். இதினிமித்தம் நாங்கள் உமக்கு முன்பாக நிற்கத்தக்கவர்கள் அல்ல என்று பிரார்த்தித்தேன்" (எஸ்றா.9:5-15)

இஸ்ரவேல் புத்திரர் அந்நிய ஜனங்களோடே சம்பந்தங்கலந்து அவர்களுடைய குமாரத்திகளில் தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்களென்றும், அந்தக்குற்றத்தில் பிரபுக்கள், அதிகாரிகளின் கையே முந்தினதாயிருக்கிறது என்றும் எஸ்றா கேள்விபட்டபொழுது, அவருக்குள் ஏற்றப்பட்ட ஜெபபாரமானது தன் வஸ்திரத்தையும், சால்வையையும் கிழித்துக்கொண்டு, தன் தலையிலும், தாடியிலும் இருந்த மயிரைப் பிடுங்க வைத்து, அந்திப்பலி செலுத்தப்படும் நேரம் மட்டும் திகைத்தவனாய் உட்காரவும், மிகவும் துக்கிக்கவும் செய்து, முழங்காற்படியிட வைத்து, தன் கைகளைத் தேவனாகிய கர்த்தருக்கு நேராக விரிக்கச் செய்து, அவருடைய சமுகத்தில் பிரார்த்தனையைச் செய்ய வைத்தது. அப்பொழுது அவர்...

என் தேவனே, நான் என் முகத்தை உமக்கு முன்பாக ஏறெடுக்க வெட்கிக் கலங்குகிறேன். எங்கள் அக்கிரமங்கள் எங்கள் தலைக்கு மேலாகப் பெருகி, எங்கள் குற்றம் வானபரியந்தம் வளர்ந்து போயிற்று. எங்கள் பிதாக்களின் நாட்கள்முதல் இந்நாள்மட்டும் நாங்கள் பெரிய குற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறோம்; எங்கள் அக்கிரமங்களி னிமித்தம் நாங்களும், எங்கள் ராஜாக்களும், ஆசாரியர்களும் அந்நியதேச ராஜாக்களின் கையிலே, பட்டயத்துக்கும், சிறையிருப்புக்

கும், கொள்ளைக்கும், வெட்கத்துக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்டோம். தேவரீர் கற்பித்த உமது கற்பனைகளை விட்டுவிட்டோம். கர்த்தாவே, நீர் நீதியுள்ளவர்; ஆகையால், நாங்கள் தப்பி மீந்திருக்கிறோம், இதோ, நாங்கள் உமக்கு முன்பாகக் குற்றத்திற்குள்ளானவர்கள்; இதினிமித்தம் நாங்கள் உமக்கு முன்பாக நிற்கத்தக்கவர்கள் அல்ல என்று தன் ஜனத்தின் பாவத்தை அறிக்கை செய்து மன்றாடுகிறார்.

தொடர்ந்து எஸ்றா 10-ம் அதிகாரத்தில் அவருடைய மன்றாட்டு ஜெபத்தைக் கேட்ட கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடையே ஒரு பலத்த எழுப்புதலைக் கட்டளையிடுகிறார். ஜனங்களின் இருதயம் தேவன் பக்கம் திரும்பியது. பாவ உணர்வடைந்த அவர்கள் அந்நிய ஸ்திரீ களைத் தள்ளிவிட அவர்களது வாழ்க்கை முறையே மாறி விடுகிறது.

இன்றும் எஸ்றாவைப் போல் திருச்சபைக்காக மன்றாடி ஜெபிப்போர் திரளாக எழும்பியே ஆகவேண்டும். இல்லையேல், சாத்தானுக்குச் செவிகொடுத்து தேவன் நியமித்திருக்கிற பாதையை விட்டு வழிவிலகிவிடும் அபாயத்தில் இன்றைய பெரும்பாலான சபைகள் இருக்கிறது என்று சொன்னால் அதில் தவறில்லை.

எலியாவின் ஜெபபாரம்

"எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது. பூமி தன் பலனைத் தந்தது" (யாக்.5:17,18)

இஸ்ரவேல் தேசம் விக்கிரக வணக்கத்திலும், வேசித்தனத்திலும் மூழ்கிக்கிடந்தது. தேவனை மறந்து பின்வாங்கிப்போய், மனம் விரும்பியதெல்லாவற்றையும் செய்து வந்தது. அப்படிப்பட்ட தேசம் தேவன் பக்கம் திரும்பியாக வேண்டும் என்கிற பாரம் எலியாவை ஜெபிக்க வைத்தது. அந்த ஜெபத்திற்கு பதிலாகக் கர்த்தரிடத்திலிருந்து அக்கினி இறங்கியது. தேசத்தின் பாவங்கள் பட்சிக்கப்பட்டன. ஒரே

நாளில் தேசம் மனந்திரும்பியது. தேவன் பக்கம் திரும்பிய தேசம் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்கிற பாரம் எலியாவை மழைக்காக ஜெபிக்க வைத்தது. கர்மேல் பர்வதத்தின் சிகரத்தில் கர்ப்ப வேதனைப் பட்டு மன்றாடிய எலியாவின் ஜெபம் தேசத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. வறுமையும், பஞ்சமும் மாறியது. செழுமையும், கொழுமையும் வந்தது. ஆசீர்வாதமும், ஆவிக்குரிய மறுமலர்ச்சியும் உண்டானது (1இரா.18:36-45). அதற்குக் காரணம் எலியாவின் ஜெபபாரம் நிறைந்த ஜெபமே.

தானியேலின் ஜெபபாரம்

"இப்படி நான் சொல்லி, ஜெபம்பண்ணி, என் பாவத்தையும் என் ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தையும் அறிக்கையிட்டு, என் தேவனுடைய பரிசுத்த பர்வதத்துக்காக என் விண்ணப்பத்தை என் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாகச் செலுத்திக்கொண்டிருந்தேன்" (தானி.9:20)

தன் ஜனத்தின் விடுதலைக்காக தானியேலின் உள்ளத்தில் தேவனால் வைக்கப்பட்ட ஜெபபாரம் அவரை... உபவாசம்பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட, தன் முகத்தை அவருக்கு நேராக்கி, ஜெபம்பண்ணி, பாவஅறிக்கை செய்து கருத்தாய் ஜெபிக்க வைத்தது. அந்த ஜெபமே தேவசமுகத்திலிருந்து மகிமையான வெளிப்பாட்டையும், தீர்வையும் கொண்டு வந்தது.

எசேக்கியேலின் ஜெபபாரம்

"அவர்கள் வெட்டிக்கொண்டுபோகையில் நான்மாத்திரம் தனித்து, முகங்குப்புற விழுந்து; ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் எருசலேமின்மேல் உமது உக்கிரத்தை ஊற்றுகையில் இஸ்ரவேலின் மீதியானவர்களையெல்லாம் அழிப்பீரோ என்று முறையிட்டேன்" (எசே.9:8)

தீர்க்கதரிசி எசேக்கியேல் தேசத்தைக் குறித்த வெளிப்பாட்டைப் பெற்று, ஆவியில் கொண்டுபோகப்பட்டு அங்கே நடைபெறுகிற சகல அருவருப்புகளையும், அதினிமித்தம் தேசத்தின்மேல் வரவிருந்த நியாயத்தீர்ப்பையும் கண்டபொழுது ஜனங்களுக்காகப் பாரத்தோடும் வேதனையோடும் திறப்பிலே நின்று அவரை மன்றாட வைத்தது தேவனுடைய இருதய பாரத்தால் நிரப்பப்பட்டதே.

அப்.பவுலின் ஜெபபாரம்

"சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது" (ரோம.10:1)

அப்.பவுல் தான் புறஜாதியாருக்கு அப்போஸ்தலனாக தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறேன் என்று உறுதிப்பட கூறினாலும் தன் உள்ளத்தில் தான் பிறந்த தேசமாகிய இஸ்ரவேல் தேசம் இரட்சிக்கப்பட வேண்டும் என்கிற பாரம் நிறைந்தவராக அனுதினமும் தேவனை நோக்கி விண்ணப்பம்பண்ணினார். எனக்கு மிகுந்த துக்கமும், இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது; நான் சொல்லுகிறது பொய்யல்ல, கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்று பரிசுத்த ஆவிக்குள் என் மனச்சாட்சியும் எனக்குச் சாட்சியாயிருக்கிறது. மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே (ரோம.9:1-3) என்று அவர் கூறியதிலிருந்து அவருடைய உள்ளத்தில் இருந்த பாரம் எத்தனையாய் அவரை மன்றாட வைத்திருக்கும் என்று யூகிக்கலாம். அவர் தன்னுடைய இடையறாத ஊழியத்தின் மத்தியிலும், கிறிஸ்து வினிமித்தம் தனக்கு உண்டான பலவிதமான பாடுகள், வேதனைகள் நடுவிலும் பாரம் நிறைந்தவராய் தன் ஜனங்கள் கர்த்தரை அறிந்துகொள்ள வேண்டும் என்று தினந்தோறும் தேவனை நோக்கி கண்ணீரோடு ஜெபித்து வந்தார். அதற்கான காரணம் அவருடைய உள்ளத்தில் வைக்கப்பட்ட ஜெபபாரமே.

எல்லாவற்றையும் சுமக்கும் சர்வ வல்லவரின் இதயத்தை சுமப்பதே! பாரமுள்ள ஜெபத்தின் அஸ்திபாரம்

– புத்தக ஆசிரியர்

ஜெப பாரத்தை சுமக்க வேண்டிய விதம்

அப்பொழுது நான் இறங்கிவந்து,

அங்கே உன்னோடே பேசி,

நீ ஒருவன் மாத்திரம் ஜனங்களின் பாரத்தைச் சுமக்காமல்,

உன்னோடேகூட அவர்களும் அதைச் சுமப்பதற்காக

உன்மேல் இருக்கிற ஆவியை அவர்கள்மேலும் வைப்பேன்

(எண்.11:17)

இப்படி அவர்கள் உம்மோடேகூட

இந்த பாரத்தைச் சுமந்தால்,

உமக்கு இலகுவாயிருக்கும் (யாத்.18:23)

தேவனால் அருளப்படும் ஜெபபாரமானது சில சமயங்களில் நம் ஒருவரால் மாத்திரம் சுமக்க முடியாது. ஆகவே, தேவன் ஒருவராக, இருவராக, குழுவாக, குடும்பமாக மற்றும் சபையாகச் சுமக்கவேண்டிய பாரத்தையும், அவற்றின் விதத்தையும்கூட நன்கு கற்றுத் தந்திருக்கிறார். வேதம் பல்வேறு சூழ்நிலைகளில், பல்வேறு விதங்களில் ஜெபபாரத்தைச் சுமந்தவர்களைப் பற்றித் தெளிவாகச் சொல்கிறது. அவர்கள் சுமந்த வெவ்வேறு பாரத்திற்கேற்ப அவர்கள் ஒவ்வொருவருடைய ஜெபங்களும் ஒரே மாதிரியாக இராமல் வெவ்வேறு விதத்தில் இருந்ததையும் காணமுடிகிறது. இவ்விதம் ஜெபபாரம் பெற்றவர்களின் ஜெபங்கள் எவ்விதம் மாறுபட்டு தனித்துவம் பெற்று விளங்குகிறது என்பதைக் கீழ்காணும் தலைப்புகளில் காண்போம்.

தனி நபராகச் சுமக்க வேண்டிய ஜெபபாரம்

"நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்" (எசே.22:30)

பரலோகத்தின் தேவன் தேசத்தில் செய்யப்படுகிற சகல அருவருப்புகளையும் பார்க்கும்பொழுது அவருடைய இருதயம் வெகுவாகக் காயப்பட்டு, கிழிக்கப்படுகிறது. அச்சமயம் அவரால் முன்குறிக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்ட சிநேகிதர்களாகிய மன்றாட்டு வீரர்களுக்குள் தம்முடைய இதயபாரத்தை வெளிப்படுத்தி, அதையே ஜெபபாரமாக அவர்களுக்குள் வைக்கிறார். அவர்கள் அந்தப் பாரத்தைச் சுமந்துத் திறப்பிலே நின்று, கதறி, கண்ணீரோடே மன்றாடி, போராடி ஜெபிக்க வேண்டுமென்று எதிர்ப்பார்க்கிறார். தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவுந்தக்கதாக மனிதர்களைத் தேவன் தேடிக்கொண்டிருக் கிறார். அவர்கள் யாரென்றால், அவரிடத்திலிருந்து ஜெபபாரத்தைப் பெற்று, அதனைச் சுமந்து, தேவனுக்கும், ஜனங்களுக்கும் இடையே திறப்பிலே நின்று கதறவேண்டிய மன்றாட்டு வீரர்களே (எசே.22:30).

பல வேளைகளில் தேவனுடைய பாரத்தைச் சுமக்க தனிப்பட்ட முறையில்தான் ஒரு மன்றாட்டு வீரன் அழைக்கப்படுகிறான். அந்தப் பாரத்தை அவன் சுமக்கையில் அவனுடைய ஆத்துமா அவனுக்குள் அனல் கொண்டதுபோல இருக்கிறது. அது கண்ணீர்த் துளிகளால் அணைக்கப்படும் வரை அது அவனில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டே இருக்கிறது. மற்ற எவரும் தேவனிடத்தில் பார்க்காத இடத்தை அவன் பார்க்கிறான். எல்லாரும் தேவனிடத்தில் ஆசீர்வாதத்தைத் தேடும்பொழுது, அவனோ தேவனுடைய உள்ளத்திலுள்ள வேதனையைக் கேட்டு வாங்கி சுமக்கிறவனாக இருக்கிறான். தேவனுடைய வலியைச் சுமப்பது என்பது எத்தனை மேன்மையான பாக்கியம் பாருங்கள். அதனைப் சரீரமாகிய மண்பாண்டத்தில் பெற்றிருப்பது வார்த்தைகளால் விவரிக்க இயலாத ஆனந்தமே.

சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும், நான் இறங்கிப் போய், என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின் படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன் (ஆதி.18:20-21) என்று கூறிய கர்த்தர், சோதோம் கொமோராவையும், சூழ்ந்திருந்த இரண்டு பட்டணங்களையும் அழிக்கவேண்டுமென்கிற தம்முடைய இருதயத்திலிருந்த காரியத்தை, நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? (ஆதி.18:18) என்று சொல்லி அந்தப் பாரத்தை ஆபிரகாமுடைய உள்ளத்தில் வைத்தார். அப்பொழுது அவர் ஒருவராகவே அந்த பாரத்தைச் சுமந்து தொடர்ந்து கர்த்தருக்கு முன்பாக மன்றாடி நிற்கிறார்.

அதேபோல, நெகேமியாவின் நாட்களில் எருசலேமின் அலங்கம் இடிபட்டதையும், ஜனங்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் சிறுமையையும் அந்நாட்களில் வாழ்ந்த அநேகர் நேரில் பார்த்தோ, மற்றவர் மூலமோ அறிந்திருந்திருக்கக்கூடும். ஆனால், அதனைக்

கேள்விப்பட்ட உடன்தானே நெகேமியாவின் உள்ளம் தேவனுடைய பாரத்தால் நிரப்பப்பட்டு அவர் ஒருவராகவே அழுது மன்றாடி ஜெபிக்கிறார். ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார் (ஏசா.59:16) என்று வேதம் சொல்கிறதே.

ஒரு சமயம் தேவனுடைய மனுஷனாகிய அண்ணன் மோகன் சி. லாசரஸ் அவர்கள் திறப்பின் வாசல் ஜெபத்தை நடத்திக் கொண்டிருந்தபோது, அர்ப்பணித்தவர்கள்மேல் கரங்களை வைத்து ஜெபிக்கும்படி தேவன் தன்னைப் பாரப்படுத்துவதாக உணர்ந்தார். அதின்படி அவர் மேடையை விட்டு இறங்கி ஒவ்வொருவர்மேலும் கைகளை வைத்து ஜெபிக்கத் துவங்கினார். அப்படியே பதின்மூன்று வயதே நிரம்பிய ஒரு சிறுப்பிள்ளையின்மீது கைகளை வைத்து ஜெபித்துவிட்டு, அடுத்த நபரிடம் செல்ல முயன்றபோதோ ஆவியானவர் அவரிடம் பேசுவதைத் தெளிவாகக் கேட்டார். அது என்னவென்றால்? இவள் யார் தெரியமா? இவள் என்னுடைய பாரத்தைச் சுமந்து அதற்காகக் கண்ணீரோடே ஜெபிக்கிறவள் என்பதாக. உடன்தானே அண்ணன் கதறியழ ஆரம்பித்து விட்டார். ஏனெனில், அவருடைய பாரத்தைச் சுமக்க வயது ஒரு தடையாக இருக்கவில்லையே என அறிந்து. பின்பு அவர் விசாரித்துக்கேட்ட பொழுது, ஆவியானவர் தன்னைப் பாரப்படுத்தும்போதெல்லாம் அதற்காகக் கண்ணீரோடு ஜெபிப்பேன் என்றும், சில நேரங்களில் இயேசுவோடு இணைந்து ஜெபிப்பேன் என்றும் ஒரு அற்புதமான சாட்சியைக் கூறிவிட்டுச் சென்றாள் அச்சிறுபெண்.

தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்ட ஜான் வெஸ்லி, இவான் ராபட்ஸ், சார்ல்ஸ் பின்னி, டன்கன் கேம்பெல், டேவிட் பிரெய்னார்ட், ஜான் ஹைடு, டி.எல்.மூடி, ஜான் நாக்ஸ் போன்ற எத்தனையோ தேவமனிதர்களுக்குள் தேவனால் வைக்கப்பட்ட ஜெபபாரம் அக்கினியாக அவர்களில் வெடித்துக்கிளம்பி மாபெரும் எழுப்புதலைக் கொண்டு வந்தது. ஜெபபாரத்தினால் நிறையப்பட்டு, நீண்ட பெருமூச்சுகளோடு இரவும், பகலும் கண்ணீரோடு கதறியழுது,

அதிலேயே தங்கள் வாழ்நாளைக் கழித்த அவர்களைக் கொண்டு தான் தேவன் தேசங்களை அசைத்தார். அவர்களெல்லாரும் உலகம் கொடுக்கும் இன்பங்களில் ஈடுபாடு காட்ட மனமற்று தேவனுடைய பாரத்தினாலேயே அழுது கண்ணீர் வடித்து கரைந்துபோனவர்கள். மெழுகுவர்த்தியைப்போல எரிந்து பிரகாசித்து தேவனுடைய பாதத்தில் தங்களையே ஊற்றினவர்கள். அன்று அவர்கள் மூலம் வீசிய ஒளியில் அநேகர் வெளிச்சத்தைக் கண்டது உண்மையே.

தேவமனிதர் ஜான் நாக்ஸ் தன்னுடைய நாட்டைக் குறித்து ஓயாத பாரம் கொண்டிருந்தவர். அவர் நாட்டை ஆளும் இரத்த வெறிபிடித்த இராணி மேரியின் பார்வையிலிருந்து தப்பி மறைந்து வாழ்ந்த நாட்களில் தான் தங்கியிருந்த வீட்டின் ஓர் மூலையில் ஒரு மரப்பலகையில் முழங்காற்படியிட்டு ஒவ்வொரு நாள் இரவிலும் தவறாமல் ஜெபித்துக் கொண்டிருந்தார். கொஞ்ச நேரமாவது தூங்கக்கூடாதா என்று தன்னிடம் கெஞ்சிக் கேட்ட மனைவியிடம் "என் நாடு இரட்சிக்கப்படாமல் இருக்கும்பொழுது நான் எப்படி தூங்க முடியும்?" என்று பதிலளித்தார். அவர் இரவு முழுவதும் மிகுந்த வேதனையுடன் "ஆண்டவரே! ஸ்காட்லாந்தை எனக்குத் தாரும், இல்லையேல் நான் மரித்துப்போவேன்" என்று மன்றாடி ஜெபித்தே ஸ்காட்லாந்தை அசைத்தார். தேவன் அவருக்கே ஸ்காட்லாந்தைக் கொடுத்தார் என்பது சரித்திரம் சொல்லும் உண்மை.

"ஆண்டவரே! ஆத்துமாக்களை எனக்குத் தாரும் அல்லது என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்" என்று தேவனுடைய பாதத்தில் விழுந்து கதறினார் தேவனுடைய மனிதர் ஒய்ட்ஃபீல்ட்.

"பிதாவே, இந்த ஆத்துமாக்களையெல்லாம் எனக்குத் தாரும், இல்லாவிட்டால் நான் மரிக்கிறேன்" என்று கண்ணீரோடு மன்றாடினார் இந்தியாவின் ஜெபஅப்போஸ்தலன் ஜான் ஹைடு.

"தேவன் என்னை உடைத்து நொறுக்கி ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக அழச் செய்வாரானால் எத்தனை நலமாயிருக்கும்" என்று ஆத்தும வஞ்சையினால் கதறினார் டாக்டர் ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித்.

இவர்களைப்போன்றே, தேவனுடைய சிநேகிதர்களாக அவரால் தெரிந்துகொள்ளப்பட்டு, அவருடைய பாரத்தினால் நிறையப்பட்டு, தேசத்திற்காக மன்றாடி ஜெபிக்கிற எண்ணற்ற தேவமனிதர்கள் இன்றளவும் இருக்கத்தான் செய்கிறார்கள். இப்படி ஒருவராக மாத்திரம் தேவனுடைய பாரத்தைச் சுமக்க வேண்டிய தருணங்களும் இருக்கிறது.

இருவராகச் சுமக்க வேண்டிய ஜெபபாரம்

"அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்.18:19)

சில சமயம் தனி மனிதனாக மாத்திரம் இல்லாமல் இரண்டு பேராக இணைந்து ஜெபிக்கும்படி தேவனால் ஜெபபாரம் கொடுக்கப் படுவதும் உண்டு. தேவன் தந்த அந்த ஜெபபாரத்தைச் சரியாக விளங்கிக் கொண்டு நம்மோடு ஒருமனமாய் இணைந்து ஜெபிக்கிற ஜெபஆவியைப் பெற்றிருக்கிற வேறொருவரிடம் அதனைப் பகிர்ந்து கொண்டு, அவரோடு இணைந்து ஜெபிக்கத்தக்கதாகவே அந்த பாரமானது இருக்கும்.

இரண்டுபேராய்ப் படுத்துக்கொண்டிருந்தால் அவர்களுக்குச் சூடுண்டாகும்; ஒண்டியாயிருக்கிறவனுக்குச் சூடுண்டாவது எப்படி? ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது (பிர.4:11,12) என்றும், உங்களில் ஒருவன் ஆயிரம்பேரைத் துரத்துவான். உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்னபடி, அவர்தாமே உங்களுக்காக யுத்தம்பண்ணுகிறார் (யோசு.23:10) என்றும் எழுதப்பட்டிருக்கிற வசனங்கள் இருவர் இணையும்பொழுது விளையும் நன்மையை கோடிட்டுக் காட்டுகிறதே.

தேவனுடைய பாரத்தைச் சுமக்கிற ஒரே இருதயம் கொண்ட இரு மன்றாட்டு வீரர்கள் தேசத்திற்காக இணைந்து பாரத்தோடு ஜெபிக்கும்பொழுது தேவனுடைய வல்லமையானது அதிகளவில் வெளிப்படுவதை நாம் அறிந்ததே. அந்த ஜெபமானது சத்தானுடைய இராஜ்ஜியத்திற்கு பெரிய பாதிப்பை எற்படுத்துகிறது. அப்படி ஜெபிக்கிற மனிதர்களைக் கொண்டுதான் தேவன் தேசத்தில் மகத்தான கிரியைகளைச் செய்து வருகிறார். தேசத்திற்காக வைராக்கியம் கொண்டு சாத்தானுடைய இருளின் இராஜ்ஜியத்தைத் தகர்த்தெறிந்து தம்முடைய மகிமையுள்ள இராஜ்ஜியத்தை இந்தப் பூமியில் வல்லமையோடு ஸ்தாபிக்க அவரைத் துரிதப்படுத்துவதே அவ்விருவருடைய ஒருமனப்பட்ட இணைந்த ஜெபமே என்பது எல்லாரும் அறிந்த உண்மை தான்.

பூமியில் ஒருமனப்பட்டிருக்கிற இரு ஜெபவீரர்கள் இணைந்து ஒரே ஜெப நோக்கத்திற்காக பாரத்தோடு திறப்பிலே நிற்கும்போது எதிரியின் இராணுவங்கள் கலங்கிப்போகிறது. வேதத்தில் தாவீது ராஜாவின் குமாரனாகிய யோனத்தான் தன் ஆயுததாரியாகிய வாலிபனை நோக்கி: விருத்தசேதனம் இல்லாதவர்களுடைய அந்தத் தாணையத்திற்குப் போவோம் வா; ஒருவேளை கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செய்வார் (1சாமு.14:6) என்று கூப்பிட்டு, இருவரும் இணைந்து பெலிஸ்தரின் தாணையத்திற்குள் போன பொழுது, எதிரிகளை மடங்கடித்து அன்றைய தினம் தேவன் மாபெரும் இரட்சிப்பைக் கட்டளையிட்டதைப் பார்க்கிறேமே. அதேபோல, ஒத்த ஜெபஆவி உடையவர்களோடு இணைந்து போராடி ஜெபிக்கிற வேளையில் தேவன் தேசத்திற்காக வைராக்கியங் கொண்டு தம்முடைய விலையேறப்பெற்ற இரட்சிப்பை நிச்சயம் கட்டளையிடுவார் என்பது சந்தேகத்திற்கிடமின்றி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய சத்தியமே.

+ பேதுரு, யோவான் தேவாலயத்தில் கூடி ஜெபித்தனர்... (அப்.3:1)

+ பவுல், சீலா இணைந்து ஜெபித்தனர்... (அப்.16:25)

சிறு குழுவாகச் சுமக்க வேண்டிய ஜெபபாரம்

“இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்” (மத்.18:20)

தேவன் தருகிற ஜெபபாரத்திற்கேற்ப அதின் தன்மையும், ஜெபிக்க வேண்டிய விதமும் கட்டாயம் மாறுபடும் என்பதை மறந்துவிடக்கூடாது. தேவனுடைய பாரத்தைச் சுமக்கும்படி சிறு குழுவாக நாம் இணையும்பொழுது அந்த ஜெபத்தில் தேவனும் இணைந்துகொள்கிறார் என்பதே மிக உறுதியான விஷயமாகும். பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரால் நிறுத்தப்பட்ட பொற்சிலையை வணங்க மறுத்த சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என பாபிலோனிய பெயரிடப்பட்ட அனனியா, மீசாவேல், அசரியா ஆகியோரது கைகளும், கால்களும் கட்டப்பட்டு, எப்போதும் இருப்பதைவிட ஏழு மடங்கு சூடாக்கப்பட்ட எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்பட்டதும், சூளையில் நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவினதும், நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருந்ததும், அவர்களுக்கு ஒரு சேதமும் இல்லாதிருந்ததும், அக்கினி அவர்கள் சரீரத்தின்மேல் பெலஞ் செய்யாமலும், அவர்களுடைய தலைமயிர் கருகாமலும், அக்கினியின் மணம் வீசாமலும் இருந்ததற்குக் காரணம் நாலாவது ஆளாகக் கர்த்தர் அவர்கள் நடுவில் உலாவினதே.

நான் அவர்கள் நடுவில் உலாவி அவர்கள் தேவனாயிருப்பேன் என்று உரைத்த கர்த்தர் அப்படியொரு பெருத்த காரியம் செய்து தம்முடைய மகிமையை விளங்கப்பண்ணினார் அன்று. அந்த மூவருக்குள் இருந்த பாரமும், நோக்கமும் ஒன்றுதான். அது உன்னதமான தேவனைத் தவிர வேறெதையும் வணங்கக்கூடாது என்கிற வைராக்கியமே. அந்த வைராக்கியத்திற்குத் துணையாகத் தேவனும் அவர்களோடிருந்து கிரியைச் செய்தார் அன்று.

அதேபோல, இஸ்ரவேலரோடு யுத்தம்பண்ணிக் கொண்டிருந்த அமலேக்கியர் முற்றிலும் முறியடிக்கப்பட மலையின் உச்சிக்குப் போய் தன்னுடைய இரு கரங்களையும் உயர்த்தி நின்ற தேவனுடைய மனுஷனாகிய மோசேயோடு ஆரோனும், ஊரும் இணைந்து நிற்பதையும், அந்தப் பாரத்தைச் சுமப்பதையும், அதினிமித்தம் யோசுவாவின் தலைமையிலான படைக்கு மாபெரும் ஜெயத்தைத் தேவன் தந்ததையும் யாத்திராகமம் 17:10-16 வசனங்களில் வாசிக்கிறோமே.

தேசத்தில் அருவருப்பான கொடிய பாவங்களை உண்டாக்குகிற சத்துருவின் சேனைகள் முறியடிக்கப்படுவதற்கே தேசத்திற்காகத் திறப்பிலே நின்று மன்றாடும் சிறுகுழுவிற்கு காலங்காலமாக இந்த ஜெபபாரத்தைத் தேவன் பகிர்ந்து தருகிறார்.

+ ஜெபபாரம் பெற்ற தேவனுடைய மனுஷனாகிய மோசேயின் கைகளை ஆரோனும், ஊரும் இணைந்து தாங்கியபொழுது (சிறு குழுவாக இணைந்து ஜெபித்தல்) தேவவல்லமை அமலேக்கியரை முறியடித்தது... (யாத்.17:10-16)

+ எஸ்தருக்குள் இருந்த ஜெபபாரம் தாதிமார்களுடன் இணைந்து ஜெபிக்கவும், ஆமானின் சதித்திட்டங்களை முறியடிக்கவும், தேவ ஜனங்களைக் காக்கவும் வைத்தது... (எஸ்தர்.4:16,17)

+ தானியேலுக்குள் இருந்த ஜெபபாரம் தன் மூன்று நண்பர் களோடு பகிரப்பட்டு அவர்களோடு இணைந்து ஜெபிக்கவும், ராஜாவின் சொப்பனத்திற்கு விளக்கம் கொடுக்கவும் மற்றும் தன்னோடிருந்தவர்களைக் காப்பாற்றவும் வைத்தது... (தானி.2:17,18).

+ கர்த்தருடைய சீஷர்கள், ஸ்திரீகள் மற்றும் சகோதரருக்குள் இருந்த ஜெபபாரம் தேவன் தந்த வாக்குத்தத்தம் நிறைவேறவும், புதிய திருச்சபை உருவாகவும் இணைந்து ஜெபிக்க வைத்தது... (அப்.1:14)

சபையாக இணைந்து சுமக்க வேண்டிய ஜெபபாரம்

"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் ஜனங்களுக்கு மூப்பரும் தலைவருமானவர்கள் இன்னார் என்று நீ அறிந்திருக்கிறாயே, அந்த மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டி, அவர்களை ஆசரிப்புக்கூடாரத்தினிடத்தில் அங்கே உன்னோடேகூட வந்து நிற்கும்படி செய். அப்பொழுது நான் இறங்கிவந்து அங்கே உன்னோடே பேசி, நீ ஒருவன்மாத்திரம் ஜனங்களின் பாரத்தைச் சுமக்காமல், உன்னோடேகூட அவர்களும் அதைச் சுமப்பதற்காக உன்மேல் இருக்கிற ஆவியை அவர்கள்மேலும் வைப்பேன்"

(எண்.11:16,17)

கர்த்தருடைய தாசனாகிய மோசே தேவன் தன்மேல் வைத்த ஜெபபாரத்தை தன்னால் மாத்திரம் சுமக்க இயலாது என்பதை உணர்ந்தவராகக் கர்த்தரை நோக்கி: நீர் இந்த ஜனங்கள் எல்லாருடைய பாரத்தையும் என்மேல் சுமத்தினதினால், உமது அடியானுக்கு உபத்திரவம் வரப்பண்ணினதென்ன? உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடையாதேபோனதென்ன? இந்த ஜனங்களெல்லாரையும் நான் ஒருவனாய்த் தாங்கக்கூடாது; எனக்கு இது மிஞ்சின பாரமாயிருக்கிறது என வேண்டிக்கொள்வதை எண்ணாகமம் 11:11-15ல் பார்க்கிறோம்.

சில சமயம் தேவன் அருளும் பாரத்தை நம் ஒருவரால் மாத்திரம் சுமக்க முடியாது. அதனைக் குறித்து மோசே தேவனிடம் கதறியபொழுது, தேவன் நீதான் அதைச் சுமக்க வேண்டும் என்று சொல்லவில்லை. அதற்குமாறாக, அவன் மேலிருந்த ஆவியை (பாரத்தை) இஸ்ரவேல் ஜனங்களின் மூப்பரில் எழுபதுபேர்மேல் வைக்கிறார். அதேபோல, சில ஜெபபாரங்கள் சபையாருக்கு அறிவிக்கப்பட்டு சபையாராக இணைந்து ஜெபிக்க வேண்டுமென்றும் தேவன் எதிர்ப்பார்ப்பதுண்டு. அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச்

சொன்னார்கள். விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்ல வில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது என அப்.4:31-33 சொல்லுவதிலிருந்து அவருடைய எதிர்ப்பார்ப்பை நாம் அறிந்துகொள்கிறோமே.

முதலாம் நூற்றாண்டு திருச்சபையைக் கொண்டுதான் தேவன் தம்முடைய மகிமையான திட்டத்தை உலகெங்கிலும் கொண்டு செல்லத் தீர்மானித்தார். அவர்களுக்குள் வைக்கப்பட்ட அந்த பாரம் அவர்களை ஒரே இருதயமும் ஒரே மனமும் உள்ளவர்களாயிருந்து ஜெபிக்க வைத்தது. அந்த பாரத்தினால் அவர்கள் வல்லமையாக ஜெபித்து தாங்கள் கூடியிருந்த இடத்தையும், இராஜ்ஜியத்தையும், சிறைச்சாலையையும்கூட அசைத்தனர். அன்று தேவனுடைய பெரிதான வல்லமை விளங்கியது.

அக்காலத்திலே ஏரோது சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி, பேதுருவைப் பிடித்து சிறைச்சாலையிலே வைத்து, பஸ்காபண்டிகைக்குப் பின்பு ஜனங்களுக்கு முன்பாக அவனை வெளியே கொண்டுவரலாமென்று எண்ணி, அவனைக் காக்கும்படி வகுப்புக்கு நான்கு போர்ச்சேவகராக ஏற்படுத்திய நான்கு வகுப்புகளின் வசமாக ஒப்புவித்தான். அப்படியே பேதுரு சிறைச் சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள் (அப்.12:1-5). அவர்களுடைய ஊக்கமான ஜெபத்தைக் கேட்ட தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அற்புதமாக பேதுருவைச் சிறைச் சாலையிலிருந்து விடுவித்தார். அதுபோல, சபையானது பல்வேறு உபத்திரவங்களின் மத்தியில் கண்ணீரோடு ஜெபிக்கும்போது மனுஷரால் கிரக்கிக்கக்கூடாத பெரிய காரியங்களைத் தேவன் இன்றளவும் செய்துகொண்டுதான் இருக்கிறார்.

சபையாக இணைந்து ஜெபித்த சில நிகழ்வுகள்

+ சீஷர்கள், ஸ்திரீகள், சகோதரர்கள் இணைந்து பிதா அருளிய வாக்குத்தத்தம் நிறைவேற ஜெபித்தனர்... (அப்.1:14)
+ சபைக்கு மிகுந்த துன்பம் உண்டானபோது சபையாராக இணைந்து ஜெபித்தனர்... (அப்.4:31,32)
+ சபைக்குள் முறுமுறுப்புகள் வந்தபோது சபையார் இணைந்து ஜெபத்திலே உறுதியாய் தரிந்திருந்தனர்... (அப்.6:4)
+ பேதுரு சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட சபையார் இணைந்து கூடி ஜெபித்தனர்... (அப்.12:5-12)
+ அந்தியோக்கியா சபை தேவசித்தத்திற்ாக இணைந்து ஜெபித்தது... (அப் 13:1,2)

குடும்பமாக இணைந்து சுமக்க வேண்டிய ஜெபபாரம்

"நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்"
(யோசு.24:15)

"தேவனுடைய இரகசியச்செயல் என் கூடாரத்தின்மேல் இருந்தது"
(யோபு29:4)

தேவனுடைய பாரத்தைக் குடும்பமாகச் சுமப்பது என்பது மேன்மையான ஒரு காரியமாகும். நம்முடைய குடும்பத்தின்மீது தேவனுடைய விலையேறப்பெற்ற நோக்கமும், பரிபூரண சித்தமும் ஒன்று உண்டாயிருக்குமானால் கட்டாயம் நாம் வசிக்கிற கூடாரத்தின் மேல் தேவனுடைய இரகசியச் செயல்கள் வைக்கப்பட்டிருக்கும். குடும்பமாகப் போராடி ஜெபிக்க வேண்டும் என்கிற பாரம் நமக்குள் எழும்போதெல்லாம் குடும்பமாக இணைந்து பாரத்தோடு ஜெபிக்கத் துவங்கினால்போதும் தேவனுடைய அசாதாரணமான காரியங்கள் தேசத்தில் வெளிப்படுவதைக் காணலாம். அப்படி தேவன் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட குடும்பங்களின்மேல் தம்முடைய பாரத்தை இன்றும் வைத்துக்கொண்டு தான் இருக்கிறார்.

நூற்றுக்கு அதிபதியான கொர்நேலியுவுக்குள் வைக்கப்பட்ட ஜெபபாரமே அவருடைய குடும்பத்தை மட்டுமல்ல, அவருடைய உறவினரையும், சிநேகிதரையும்கூட இரட்சிக்கும்படியான தேவ சித்தமாயிருந்தது. நம்முடைய குடும்பத்தின்மேல் வைக்கப்படும் ஜெபபாரமானது நரகத்தின் பிடியிலிருந்து விலையேறப்பெற்ற ஆத்துமாக்களை மீட்டெடுக்கும்படி நம் கரங்களில் கொடுக்கப்பட்ட தேவனுடைய வலிமையான ஆயுதமாகும். நம்முடைய ஜெபத்தைக் கேட்கிற கர்த்தர் தேசத்தில் மகத்தான கிரியைகளை நடப்பித்து திரள்திரளான ஆத்துமாக்களை இரட்சிக்கிறார். ஆவியானவரும் நமக்குள்ளிருந்து அந்த ஜெபபாரத்தைத் தூண்டிக்கொண்டேயிருந்து துரிதமாக ஜெபிக்க நமக்கு உதவி செய்கிறார்.

தேவன் அருளும் பாரத்தினால் நிறையப்பட்டு குடும்பமாக நாம் நம்முடைய இருதயத்தைக் கிழித்து ஜெபித்தால், தேவன்தாம் தம்முடைய வானத்தைக் கிழித்திறங்கி தேசத்தில் மாபெரும் எழுப்புதலைக் கட்டளையிடுவார். அந்த ஜெபபாரம்தான் சர்வ வல்லவருடைய கரத்தையே அசையப்பண்ணி அவரிடத்திலிருந்து வல்லமையை வெளிப்படச் செய்கிறது. பாதாளத்தை அசைக்கவும், அதின் வாசலை அடைக்கவும்பண்ணி, பரலோகத்தின் வாசலைத் திறக்கவும், அதை ஆத்துமாக்களால் நிரப்பவும் வைக்கிறது.

அந்த ஜெபபாரமே நம்மைச் சோர்ந்துபோகாதபடி அனல் கொண்டு பற்றியெரியும் இருதயத்தைத் தந்து, ஜெபத்தின் மகிமையான ஆழத்திற்குள் பிரவேசிக்க உதவி செய்கிறது.

பாரமுள்ள ஜெபம் இரத்தம் சிந்தத் துணிந்த ஜெபம். அது அக்கினியை இறக்குகிறது. அது ஜீவனைக் கொடுக்கிது. அது தேவனையே கொண்டு வருகிறது – சாமுவேல் சாட்விக்

பாரத்தோடு ஜெபிக்கிறவனுக்கு நேரம் போதவில்லை! கடமைக்காக ஜெபிக்கிறவனுக்கு நேரம் போகவில்லை!!

– புத்தக ஆசிரியர்

ஜெப பாரத்தின் நேரங்கள்

பின்பு, இயேசு சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள்
நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி:
நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?
நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து
ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ
பலவீனமுள்ளது என்றார் (மத்.26:40,41)

தேவன் தரும் ஜெபபாரத்தின் தன்மைகேற்ப நம்முடைய சூழ்நிலையையும், சரீரத்தையும், மனதையும் சரியாக வைத்துக் கொள்வது அவசியமானது. ஜெபபாரம் நம்மை அழுத்தும்பொழுது

சில சமயம் நீண்ட நேரம் ஜெபிக்க வேண்டியதாக இருக்கும், சில சமயம் உபவாசித்து ஜெபிக்க வேண்டியதாக இருக்கும். ஆகவே, தேவனுக்கு நின்பாக நின்ற மோசே, எலியா போன்று நாமும் எப்பொழுதும் ஆயத்தமாக இருந்தால் அது நம்மில் இருக்கும் ஜெபபாரத்திற்கேற்ப விடாப்பிடியாக மன்றாடி ஜெபிக்க மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். அதைப்பற்றி கீழே சற்று காண்போம்.

சில நிமிட நேரங்கள்

"அப்பொழுது ராஜா என்னைப் பார்த்து: நீ கேட்கிற காரியம் என்ன என்றார். அப்பொழுது நான் பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம் பண்ணி..." (நெகே.2:4)

சில சமயம் நாம் நடந்துசெல்லுகிற, கடந்துபோகிற பாதையில் நாம் காண்கிற எத்தனையோ அருவருப்பான காரியங்கள், கொடுமை யான காட்சிகள், தேவனுக்குப் பிரியமில்லாத பாவச்செயல்கள் நம்முடைய இருதயத்தை பாரமடையச் செய்யும். அது நம்முடைய இருதயத்தில் ஜெபபாரமாக எழும்பும். அப்பொழுது அதே இடத்தில் நின்று இருதயத்தில் சில நிமிடம் ஜெபிப்பதும், அதற்காக நம்மில் இருந்து எழும்பும் வேதனை நிறைந்த பெருமூச்சும்கூட தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்ற ஜெபமாக மாறிவிடும்.

நம் உள்ளத்தில் ஜெபபாரம் பரலோகத்தால் கொடுக்கப்படும் போது அந்த ஜெபபாரத்திற்கு மதிப்பு தந்து அந்நேரத்திலேயே சில வினாடிகளோ, நிமிடங்களோ ஜெபித்துவிட வேண்டும். பிற்பாடு அந்த பாரத்தை ஆவியானவர் நம்மிலிருந்து எடுத்துப் போடுவார். அப்படி நாம் அடிக்கடி ஜெபித்துக்கொண்டே வந்தால்போதும் பல மணிநேரங்கள்கூட நாம் ஜெபத்திலே தரித்திருக்க வாய்ப்புண்டு. நாம் முழங்கால்படியிட்டு ஜெபிக்க வேண்டிய நேரமும் உண்டு. நம் பார்வையில் படுகிறவைகளுக்காகவும், கேள்விப்படுகிற காரியங் களுக்காகவும் அதே இடத்தில் அந்நேரமே உள்ளத்தில் ஜெபித்துக் கொண்டே பயணிக்க வேண்டிய வேளைகளும் உண்டு.

நாம் செய்தித்தாள் வாசிக்கும்போதோ, வானொலியில் செய்தி கேட்கும்போதோ, தொலைக்காட்சியில் செய்தி பார்க்கும்போதோ தேவன் தரும் பாரத்திற்கேற்ப ஜெபிக்கவும், ஸ்தோத்திரம் செலுத்தவும் பழகினால் போதும் ஒரே நாளில் பல மணிநேரம் கூட ஜெபிக்க நம்மால் இயலும். நாம்...

வேலை செய்யும் போது...

பயணம் செய்யும் போது...

வெளியே செல்லும்போது...

புத்தகம் வாசிக்கும்போது...

செய்தித்தாள் வாசிக்கும் போது...

தொலைக்காட்சி செய்தி பார்க்கும்போது...

மட்டுமல்ல, நம்முடைய எல்லா சூழ்நிலைகளிலும் ஜெப பாரத்தைத் தேவன் தருகிறவராக இருக்கிறார். அதனைச் சரியாகப் புரிந்துகொண்டு ஜெபிக்க நம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்த வேண்டும். நம் உள்ளத்தில் பாரம் ஏற்படும்போது உடன்தானே ஜெபித்துவிட வேண்டும். அதுபோல நாம் காண்கிற காட்சிகள், கேள்விப்படுகிற காரியங்களுக்காக அவ்வப்பொழுதே ஜெபித்து விட வேண்டும்.

நம் வாழ்நாளில் எத்தனை நிமிடம் ஜெபத்தில் கழித்திருப்போம்

+ நெகேமியா எருசலேமின் அலங்கம் கட்டப்படும்படி தான் அனுப்பப்படவும், தேவையான உதவிகள் கிடைக்கவும் சில வினாடிகளே ஜெபித்தார்... (நெகே.2:4,5)

+ எலியேசர் ஈசாக்கிற்கு உகந்த மணப்பெண் தேவசித்தத்தின்படி அமைய சில வினாடிகளே ஜெபித்தார்... (ஆதி.24:12-14)

+ இயேசுகிறிஸ்து எருசலேம் நகரத்தைப் பார்த்து கண்ணீர்விட்டு சில நிமிடமே புலம்பினார்... (மத் 19:41-43)

+ சிம்சோன் பெலிஸ்தரைப் பழிவாங்க சில வினாடிகளே ஜெபித்தார்... (நியா.16:28-30)

சில மணி நேரங்கள்

"பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?" (மத்.26:40)

சில சமயம் தேவன் தரும் பாரமானது சில மணி நேரங்கள் உத்திரவாதம் எடுத்து ஜெபிக்க வேண்டியதாக இருக்கும். சில நிமிடம் ஜெபித்தபிறகும் பாரமானது நம் இருதயத்திலிருந்து நீங்காமல் இருந்தால் கர்த்தருடைய ஆவியானவர் நம்மிலிருந்து அதை எடுத்து போடும்வரைக்கும் சில மணிநேரங்கள் தொடர்ந்து ஜெபிக்க நம்மை விட்டுக்கொடுக்க வேண்டும். சில நிமிடங்கள் ஜெபித்தும் பாரம் நம்மில் குறையாதபட்சத்தில் அதற்காகப் பாரத்தோடு சில மணி நேரங்கள் ஜெபிக்க தேவன் எதிர்ப்பார்க்கிறார் என்பதே அதின் அர்த்தம். தேவன் எந்த நோக்கத்திற்காக அந்த பாரத்தை நம்மில் வைத்தாரோ அந்த காரியத்திற்கான முழுமையான ஜெபத்தேவை கிடைக்கும்வரை அந்த பாரமானது நீடித்துக்கொண்டே இருக்கும். தேவன் எதிர்ப்பார்த்த அளவிற்கு ஜெபம் நிறைவடையும்பொழுது தேவனும் நிச்சயமாகவே சந்தோஷப்பட்டு அந்த குறிப்பிட்ட காரியத்திற்காகக் கிரியைச் செய்ய தொடங்கிவிடுவார். இவ்வாறு தேவனுடைய தேவைக்கேற்ப நம்மை ஜெபிக்க அர்ப்பணித்துக் கொள்வதே உன்னத ஜெப அனுபவமாகும்.

ஆண்டவர் எதிர்ப்பார்த்தும் ஜெபிக்காமல் தூங்கினார்கள் சீஷர்கள். அவர்கள் உத்திரவாதத்தை மறந்தார்கள், உண்மையை மறந்தார்கள்; நம்பிக்கையை இழந்தார்கள், எதிர்ப்பார்ப்பை அல்லற்தட்டினார்கள்; மீண்டும் மீண்டும் அவருடைய ஏக்கத்தைப் புரிந்துக்கொள்ளாது விட்டார்கள். நாம் அப்படிச்செய்யாமல் அவருடைய பாரத்தையும், ஏக்கத்தையும், விருப்பத்தையும் அறிந்து அதற்காகவே நம்முடைய ஜெபநேரத்தை அர்ப்பணிப்பதுதான் சிறந்த ஜெபவாழ்வின் அடையாளமாகும்.

நம்முடைய நேரங்கள் தேவனுடைய பிரசன்னத்தில் செலவிடப் படாமல், ஜெபத்திற்கான தேவைகள் முழுமை பெறாது. மேலே கண்ட வசனம் அவருடைய உன்னத நோக்கத்தை தெளிவாகக் காட்டுகிறது. ஒருமணி நேரமாவது விழிந்திருந்து ஜெபிக்கக்கூடாதா? என்று எதிர்ப்பார்த்த அவருக்கு ஏமாற்றமே மிஞ்சினது அன்று. நம் அன்பு தகப்பன் படும் வேதனையில் பங்கெடுக்க சில மணிநேரங்களைக் கூட கிரயமாகக் கொடுத்து, அவரோடு இணைந்து ஜெபிக்க எப்பொழுதும் நம் இருதயத்தை ஆயத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியது மிகமிக அவசியமாகும்.

ஒரு நாள்

"யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்; அப்பொழுது
ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி..."
(ஆதி.32:24)

தேவனுடைய பாரத்தைச் சுமப்பது என்பது எப்பொழுதும் தங்களுக்காகவே ஜெபித்து அதில் பழகிவிட்டவர்களுக்கு ஒரு புதுமையாகத் தோன்றலாம். ஆனால், ஜெபபாரம் என்பது மகா மேன்மையானது. தேவன் தரும் பாரம் அவசரமானதாக இருந்தால் நம்முடைய அன்றாட வேலைகள், தேவைகள், எதிர்ப்பார்ப்புகள் எல்லாவற்றையும் தூக்கி எரிந்துவிட்டு தேவனோடு தனித்திருக்க நம்மை விட்டுக்கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட நேரங்களில் தேவனே தம்முடைய இருதயத்தை நம்மிடம் திறந்து காட்டி நம்மைப் ஜெபபாரத்தினால் நிரப்பி பல மணி நேரங்கள் அவருடைய சமுகத்தில் ஜெபிக்க வைத்துவிடுவார். அதில் பழகப்பழக நாள் முழுவதும் ஜெபிப்பது நமக்கு மிக எளிதானதாகவும், இனிமை யானதாகவும் தோன்றி ஜெபவாஞ்சையும், ஜெபஅபிஷேகமும் நம்மில் பெருக்கெடுக்க ஆரம்பித்துவிடும்.

சில நாட்கள்

“இந்த வார்த்தைகளைக் கேட்ட போது நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி...” (நெகே.1:4)

நம்முடைய தேவன் சில சமயம் இப்படிப்பட்ட முக்கியமான ஜெப பாரத்தை நம்மில் தந்து சில நாட்கள் நாம் உத்தரவாதம் எடுத்து ஜெபிக்க வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பார். நமக்கு அவசியமாகத் தோன்றுகிற எல்லாவற்றையும்விட பரலோக இராஜாவின் காரியமே மிக மேன்மையானதும், முக்கியமானதும் ஆகும். ஆகவே, தேவன் அந்த குறிப்பிட்ட காரியத்திற்காக இரக்கம் செய்யும் வரை தொடர்ந்து ஜெபித்து, சில கிரயங்களைச் செலுத்தி, அவருடைய பாதத்தில் காத்திருந்து கண்ணீரோடு கதறும்பொழுது தேவனுடைய இருதயம் பூரிப்படைவதைக் காணமுடியும். அந்த பாரமானது சில நாட்களாக நம்மில் இருந்துகொண்டே இருக்கும்.

நெகேமியாவிற்குள் ஏற்பட்ட பாரம் அவரை சில நாட்களாய் துக்கிக்க வைத்தது. சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்தத் தேசத்திலே மகா தீங்கையும், நிந்தையையும் அநுபவிக்கிற காரியத்திலும், இடிபட்ட எருசலேம் நகரின் அலங்கம் திரும்பக் கட்டப்படுவதிலும், அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டு கிடக்கும் அதின் வாசல்கள் திரும்ப எடுப்பிக்கப்படுவதிலும் தேவன் இறங்கிக் கிரியைச் செய்யும்வரை அவருடைய உள்ளத்தில் குறையாமல் இருந்தது.

ஒரு உலக மனிதனுக்கு பலவித பாரங்கள் இருக்கலாம். ஆனால், நம்முடைய பரலோகத் தந்தையின் துக்கத்தையும், பாரத்தையும் நாம் சுமப்போம் என்றால் அது எத்தனை மேன்மை. அப்படிப்பட்டவர்கள் அவருடைய இருதயத்திற்கு அருகில் இருப்பவர்கள். தேவனுடைய இதயம் பாரமடையும்பொழுதெல்லாம் அதை அறிந்து கருத்தாய் ஜெபிப்பவர்கள் அவர்களே.

மாதங்கள்

"நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன்"

(Iசாமு.12:23)

சில நேரம் தேவன் நமக்குள் வைக்கும் ஜெபபாரமானது மாதக்கணக்காகக்கூட நீண்டுகொண்டே செல்லலாம். பாவத்திற்கு ஒரு அளவு உண்டு. பாவம் பூரணமடையும்போதுதான் தேவன் தம்முடைய நியாயத்தீர்ப்பை அதின்மேல் அனுப்புகிறார். அதுபோலத்தான், ஒரு காரியத்திற்காக ஜெபத்தைப் பூரணமாய் ஏறெடுக்கப்படும்வரை தேவனும் அதற்காகக் காத்திருக்கிறார். அதுவரை ஜெபபாரமானது ஆவியானவர் மூலமாக தெரிந்தெடுக்கப் பட்ட ஜெபவீரர்களை அழுத்திக்கொண்டே இருக்கும். அந்த அழுத்தத்தின் மூலமே தேவனுடைய பாரம் வெளிப்படுத்தப்படுகிறது. அந்த பாரமானது நம்மிலிருந்து முழுமையாய் நீங்கும் வரை பல நாட்கள் உபவாசித்து ஜெபிக்க வேண்டியதாகவும் இருக்கலாம். அது 21 நாட்களாகவும், 40 நாட்களாகவும்கூட இருக்கக்கூடும்.

ஆகவே, மன்றாட்டுவீரர்கள் சோர்ந்துபோகாமல் தேவன் நமக்குள் வைக்கிற ஜெபபாரத்திலேயே இடைவிடாமல் தொடர்ந்து தரித்திருக்க வேண்டும். தானியேலைப் போல பரலோகத்திலிருந்து பதிலைப் பெறும் வரை ஜெபத்தை நிறுத்தவே கூடாது. ஏனெனில், ஒருவேளை அது தேவனுக்கு மிக அவசரமான, முக்கியமான ஒன்றாகக் கூட இருக்கலாம். ஆதலால், நம்முடைய உத்தரவாதத்தையோ, அவருடைய எதிர்ப்பார்ப்பையோ நாம் மறந்துவிடக்கூடாது.

ஒரு தாய் கோழியானது தன் முட்டைமேல் அடைகாத்து குஞ்சு முழுமையடையும்வரை காத்துக்கொண்டிருப்பதுபோல் நமக்குள் வைக்கப்பட்ட ஜெபபாரத்தை அடைகாத்து தேவன் கிரியைச் செய்யும் வரை ஜெபத்தில் விடாமல் தரித்திருப்பதுதான் உத்தரவாதமான ஜெபமாகும்.

வாழ்நாள் முழுவதும்

"மனுபுத்திரனே, நான் உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவற்காரனாக வைத்தேன்; ஆகையால் நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக" (எசே.33:7)

தேவன் நம்முடைய தேசத்திற்கு நம்மையே காவற்காரனாக வைத்திருக்கிறார். தேசத்தின் கடைசி மனிதனும் இரட்சிக்கப்படும்வரை நமக்குள் வைக்கப்பட்ட ஜெபபாரமானது எரிந்துகொண்டேயிருக்கும். தேவன் நம்மை இவ்வுலகில் வைத்திருக்கும்நாளெல்லாம் பலிபீடத்தின்மேலுள்ள அக்கினி போல அது எப்பொழுதும் எரிந்து கொண்டே இருக்கும். ஆகவே, தேவன் தந்திருக்கும் பாரத்திலிருந்து நம்மைத் திசைதிருப்புகிற எல்லாவற்றிற்கும் நம்மை விலக்கிக் காத்துக்கொள்ள வேண்டியது அவசியம். ஜெபத்தைத் தடை பண்ணுகிற எல்லாக்காரியங்களிலுமிருந்து நம்முடைய மனதை தெளிவாகக் காக்கப் பிரயாசப்பட வேண்டும்.

ஒரு தேவனுடைய மனுஷன் இவ்விதமாக ஜெபித்தாராம். ஓ! தேவனே! என் வாழ்க்கைப் பாதையின் கடைசிவரை எனக்குள் வைக்கப்பட்ட ஜெபஆவியும், கண்களில் கண்ணீரும், முழங்காலில் பெலனும், இருதயத்தில் பாரமும், வாயில் விண்ணப்பஞ்செய்யும் வார்த்தைகளும் குறையவே கூடாது, இவைகள் என் வாழ்வில் உம்மால் கிடைக்கப்பெற்ற விலையுயர்ந்த சொத்தாக இருக்க கிருபை தாரும் என்பதாம். இதுதான் மன்றாட்டு ஜெபவீரர்களுக்கு தேவன் அளித்திருக்கிற மகிமையான சொத்தாக இருக்கிறது.

இரட்சிக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு தேவப்பிள்ளையினுடைய வாழ்நாள் முழுவதும் ஜெபத்திலே ஆரம்பித்து, ஜெபத்திலே முடிக்க தேவன் கிருபைச்செய்தால் ஆவிக்குரிய கிறிஸ்தவ உலகில் நிகழும் மாற்றங்கள் என்னவாக இருக்கும் என்று ஆராய்ந்தாலே பிரமிப்பாக இருக்கிறது.

நினைகூர்ந்து ஜெபிப்பது

"தேவனுக்குப் பிரியமான சகோதரரே, உங்கள் விசுவாசத்தின் கிரியையையும் உங்கள் அன்பின் பிரயாத்தையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள உங்கள் நம்பிக்கையின் பொறுமையையும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து, நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்று நாங்கள் அறிந்து, எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக்குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்தரிக்கிறோம்" (1தெச.1:2-4)

தேவன் தருகின்ற பாரத்தைச் சுமந்து அவருடைய சமுகத்தில் சில நிமிடங்கள், சில மணி நேரங்கள், ஒரு நாள், சில நாட்கள், மாதங்கள் மற்றும் வாழ்நாள் முழுவதும் ஜெபிப்பது என்பது நமக்குள் வைக்கப்படுகிற ஜெபபாரத்தின் தன்மைக்கேற்ப அமைகிறது. அதுபோல தேவனுடைய பெரிதான கிருபைகளை அவ்வப்பொழுது நினைகூர்ந்து ஜெபிப்பதும், ஸ்தோத்திரம்செலுத்துவதும் மேலும் சிறப்பான ஒரு அனுபவமாகும். மறதியின் பூமியில் என்று வேதம் சொல்லியிருக்கிறபடி தேவன் தந்த பல ஜெபக்குறிப்புகளை நாம் கொஞ்சநாள் மாத்திரம் நினைவில் வைத்திருந்து கொஞ்சம் கொஞ்சமாக மறந்துபோகிறோம். அவற்றை அவர் சமுகத்தில் நினைவுகூர்ந்து ஜெபிக்கும்பொழுது அவருடைய இதயம் மகிழும். ஆகவே, தேவன் செய்த நன்மைகளையும், நாம் கண்ட காட்சிகள், நிகழ்வுகள் மூலமாகவோ, கேட்ட செய்திகள் மூலமாகவோ நமக்குள் வைக்கப்பட்ட பாரத்தையும் மறவாமல் நிச்சயம் நினைவுகூர்ந்து அவ்வப்பொழுது அவரிடத்தில் விண்ணப்பம் ஏறெடுப்பதற்கும், ஸ்தோத்திரம் செலுத்துவதற்கும் ஆயத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில், அவசரம் அவசரமாக செய்யப்படுவது ஜெபமல்ல. காத்திருந்து அவர் தந்த பாரத்தை நினைவுகூர்ந்து விண்ணப்பத்தையும், மன்றாட்டையும் செலுத்துவதே சிறந்த ஜெபமாகும்.

ஜெபத்தில் பற்றியெரியும்
தூளையாக மாற வேண்டுமானால்,
முட்செடியை அக்கினி ஜுவாலையாகப்
பற்றியெரியச் செய்தவரின் பாரம் வேண்டுமே!

– புத்தக ஆசிரியர்

ஜெப பாரத்திற்கு தகுந்த ஆயுதத்தைப் பயன்படுத்துங்கள்

அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டிய தின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோம.8:26)

இன்று ஆவிக்குரிய திருச்சபைகளை நாம் கண்ணோக்கும் போது அங்கு காணப்படுகிற வேதனை தரும் காரியம் என்ன

வென்றால், அங்கிருக்கும் ஆவிக்குரிய தெளிவற்ற நிலைமையே. ஜெபம் என்பது தேவன் நமக்குத் தந்திருக்கும் வலிமையான ஓர் ஆயுதமாகும். அதை நேர்த்தியாகச் சரியான முறையில் பயன்படுத்த நமக்கு நல்லதொரு ஆவிக்குரிய விவேகமும், கையாள வேண்டிய விசேஷித்த ஞானமும் அவசியமாகத் தேவைப்படுகிறது. உதாரணமாக உலகப்பிரகாரமான பயங்கரமான ஓர் ஆயுதத்தைச் சரியான முறையில் கையாள அறியாத ஒருவர் அதைப் பயன்படுத்தினால் அவருக்கு வருத்தம் ஏற்படுவது நிச்சயமே. அதுபோலத்தான் பரலோகம் தரும் ஆயுதத்தையும் நல்லமுறையில் பயன்படுத்த அறிந்திருக்க வேண்டும். தகுந்த இடத்தில் தகுந்த ஆயுதத்தைப் பயன்படுத்தினால் தான் சரியான விளைவுகளைக் காண முடியும்.

மரங்களைப் பிளக்கப் பயன்படும் உளிகள் உண்டு. அவற்றைச் சரியாகப் பயன்படுத்தினால் மரங்களைப் பிளந்துவிடலாம். ஆனால், அவற்றையே கொண்டு பாறைகளைப் பிளந்துவிட முடியாது. பாறைகளைப் பிளக்கப் பயன்படும் உளிகள் வேறு. அதுபோல, ஜெபபாரம் நம்மை அழுத்தும்பொழுது நம்மில் அநேகர் செய்யும் தவறுகள் கண்ணீர் சிந்தி கெஞ்சவேண்டிய நேரத்தில் அதிகாரத்தோடு ஜெபிப்பதும், சத்துருவோடு யுத்தம் செய்ய வேண்டிய நேரத்தில் அழுது, புலம்பி ஜெபிப்பதும் தான். இதனால் ஜெபத்தில் வலிமை குறைகிறது. பலனையும் முழுமையாகக் காணமுடியாமல் போகிறது. மேலும், தேவனைக் கிரியைச் செய்ய விடாமல் நாமே தடையாக இருந்துவிடுகிறோம். ஜெபத்திற்கான பதில் கிடையாமலும், நல்ல விளைவுகள் எதிர்ப்பார்த்தும் நடந்தேறாமலும் போகும்பொழுது எளிதில் ஆவிக்குரிய சோர்வுக்குள்ளாகி விடுகிறோம்.

தாவீது கோலியாத்தை வீழ்த்த பயன்படுத்திய கூழாங்கற்களைப் போல ஜெபத்தில் மகிமையான விளைவை ஏற்படுத்தவும், சத்துருவை வீழ்த்தவும், ஆத்துமாக்களை மீட்டெடுக்கவும் தகுந்த ஆயுதத்தையே ஆவியானவரோடு இணைந்து பயன்படுத்த அறிந்திருக்க வேண்டும்.

ஒரு ஜெபவீரன் ஜெபத்தில் கர்த்தருடைய ஆவியானவரை முழுமையாகச் சார்ந்துகொள்ளும்போதுதான் எந்த ஜெபபாரத்திற்கு எப்படிப்பட்ட விதத்தில் ஜெபிக்க வேண்டுமென்று அவர் நடத்த ஆரம்பிப்பார். அவருடைய சத்தத்திற்கு அப்படியே கீழ்படிய நம்மை அர்ப்பணிக்க வேண்டியது மிக மிக அவசியம்.

சரியாக ஆயுதங்களைப் பயன்படுத்தியவர்கள்

+ தாவீது கூழாங்கல்லை கோலியாத்தின் நெற்றியில் பட எறிந்து அவனை வீழ்த்தினார்... (1சாமு.17:40)
+ யோசுவா ஈட்டியை ஆயிக்கு நேராக நீட்டினபோது பட்டணம் தீக்கொளுத்தப்பட்டு ஆயியின் மனுஷர் முறிய அடிக்கப் பட்டார்கள்... (யோசு.8:18-21)
+ கிதியோனும் அவனோடிருந்தவர்களும் தீவட்டி பிடித்துக் கொண்டு, எக்காளம் ஊதி, பானையை உடைத்தபோது பாளையம் பிடிபட்டது... (நியா.7:16-25)
+ யோசபாத் கர்த்தரைப் பாட பாடகரை நிறுத்தினபொழுது அவர்கள் துதி செய்யத்தொடங்கின உடனே எதிரியின் சேனைகள் வெட்டுண்டு விழுந்தது... (2நாளா.20:15,21,22)



ஜெபம்...
சத்துருவின் அஸ்திபாரத்தை
அசைப்பதோடு மட்டுமல்ல! அதை
நிர்மூலமாக்கும் வல்லமையும்
கொண்டது!!

ஜெபபாரத்திற்கு ஏற்றார்போல ஜெபியுங்கள்

"நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால்..." (ரோம 8:26)

நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாமலிருக்கிறபடியால், தேவனுடைய பரிசுத்த ஆவியானவரின் துணையோடும், வழிநடத்துதலோடும், பெலத்தோடும் ஜெபிக்க நம்மை அர்ப்பணிக்க வேண்டும். கீழே கொடுக்கப்பட்டிருக்கிற உதாரணங்கள் மாதிரிக்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைவிட மேலான ஜெப அனுபவங்களையும் தேவன் நமக்குக் கற்றுத் தர வல்லவராயிருக்கிறார். ஜெபத்தின் நீளத்தையும், அகலத்தையும், ஆழத்தையும், உயரத்தையும் நன்கு அறிந்தவர் பரிசுத்த ஆவியானவர். அவரைச் சார்ந்து செய்யப்படும் ஜெபமே மகிமையான ஜெபமாக இருக்க முடியும். சரியான நேரத்தில் சரியான விதத்தில் ஜெபத்தைச் செய்ய அவர் ஒருவரே வழிநடத்துகிறவராக இருக்கிறார். நாம் எப்படி ஜெபிக்கலாம் என்றால்...

- கண்ணீரோடு ஜெபிக்கலாம்... (எரே.13:17; எபி.5:7)
- மன்றாடி ஜெபிக்கலாம்... (உபா.9:19; 10:10)
- கெஞ்சி ஜெபிக்கலாம்... (யாத்.32:13; 2நாளா.33:12-13)
- புலம்பி ஜெபிக்கலாம்... (நாகூம்3:7)
- பெருமூச்சுகளோடு ஜெபிக்கலாம்... (எசே.9:4)
- பரிந்துபேசி ஜெபிக்கலாம்... (1யோவா.2:1)
- யுத்தம்பண்ணி ஜெபிக்கலாம்... (லூக்.11:21)
- ஆவியில் நிறைந்து ஜெபிக்கலாம்... (எபே.6:18; 1கொரி.16:11; யூதா.20)
- ஊக்கமாக ஜெபிக்கலாம்... (யாக்.5:16; லூக்.22:44; அப்.12:5)
- இடைவிடாமல் ஜெபிக்கலாம்... (கொலோ.1:9)
- கருத்தாக ஜெபிக்கலாம்... (யாத்.5:17; லூக்.11:6)

- தாழ்மையாக ஜெபிக்கலாம்... (1நாளா.7:14)
- நீண்ட ஜெபமாக ஜெபிக்கலாம்... (2நாளா.6:12-42)
- தேவனைப் பலவந்தப்படுத்தி ஜெபிக்கலாம்... (ஆதி.32:36)
- உபவாசம்பண்ணி ஜெபிக்கலாம்... (மத்.4:1; லூக்.17:21)
- தனியாக ஜெபிக்கலாம்... (மாற்.1:36; தானி.6:10)
- குழுவாக ஜெபிக்கலாம்... (தானி.2:18; யாத்.17:12)
- கிரயம் செலுத்தி ஜெபிக்கலாம்... (ஏசா.53:12)
- இரவு நேரங்களில் ஜெபிக்கலாம்... (லூக்.6:12)
- குடும்பமாக ஜெபிக்கலாம்... (அப்.10:1-5)
- சோர்ந்துபோகாமல் ஜெபிக்கலாம்... (லூக்.18:1-4)
- கரிசனையோடு ஜெபிக்கலாம்... (யாத்.32:13-32)
- உத்தரவாதம்பண்ணி ஜெபிக்கலாம்... (எஸ்தர்4:16)
- நீண்ட நேரமெடுத்து ஜெபிக்கலாம்... (1சாமு.1:10,11)
- திரும்பத்திரும்ப ஜெபிக்கலாம்... (மத்.26:44) இது விசுவாசக் குறைவு கிடையாது. தாராளமாக திரும்பத்திரும்ப ஜெபிக்கலாம். தவறும் கிடையாது. இவைகள் மாதிரிகளாகத் தரப்பட்டுள்ளது. இதைவிட மேலான, உன்னதமான ஜெபஅனுபவங்களையும் தேவன் நமக்குக் கற்றுத் தருகிறவராக இருக்கிறார்.

ஜெபபாரம் கொண்ட உள்ளமே
எரிகின்ற உள்ளம்! அதுவே, ஆத்தும
பாரத்தினால் பற்றியெறியும் உள்ளம்!!

– புத்தக ஆசிரியர்



ஜெப பாரத்திற்கு வேண்டிய தகுதிகள்!

நீ தேவனுக்குப் பயப்படுகிறவன்

என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் (ஆதி.22:12)

உயிருள்ள தேவன் உண்மையான ஜெபவீரனுக்கு தம்முடைய இதயபாரத்தையும், இனி நடக்கவிருக்கும் சம்பவங்களையும் வெளிப்படுத்துகிறார். நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? (ஆதி.18:18) என்றவர் தாம் செய்யப்போகிற காரியங்களை மறைக்காமல் எல்லாவற்றையும் உண்மையான ஒரு ஜெபவீரனுக்கு வெளிப்படுத்துகிறார். அப்படிப்பட்டவர்களையே தம் நம்பிக்கைக்குரிய சிநேகிதர்களாக உருவாக்குகிறார்.

தேவனால் நம்பப்படுகிற ஜெபவீரன் எவ்வளவாய் அவருடைய நம்பிக்கையையும், எதிர்ப்பார்ப்பையும் நிறைவேற்றுவதில் உண்மையாக இருக்க வேண்டும். கொஞ்சத்தில் உண்மையாக இருக்கும்போது தேவன் அவனை நம்பி தேசத்தின் பல காரியங்களை வெளிப்படுத்திக் காட்டுகிறார். எஜமான் அவனை நோக்கி: நல்லது உத்தம ஊழியக்காரனே, நீ கொஞ்சத்தில் உண்மையுள்ள வனாயிருந்தபடியால் பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான் என்பதாக லூக்கா 19:17 சொல்கிறது.

ஜெபத்தின் மூலமாகத்தான் தேசத்தில் மகிமையான எழுப்புதல் வந்தடையும். அழிவுக்கு நேராகச் செல்லும் ஜனங்கள் மீட்டெடுக்கப்பட ஜெபமே பிரதானம். தேவனுடைய எதிர்ப்பார்ப்பை உணர்ந்து உண்மையாக ஜெபிக்கிறவர்களைக் கர்த்தருடைய கண்கள் தேடிக்கொண்டிருக்கிறது. ஜெபத்தில் உண்மை என்பது தேவனிடத்தில் உண்மையாக இருப்பதாகும்.

தேவன் சிறந்த கல்விமானையோ, சாதுரிய பிரசங்கியையோ, பணம் படைத்தவனையோ, திறமை பல உள்ளவனையோ நோக்குவதில்லை. அவருடைய உள்ளம் உண்மையுள்ளவனையே நாடுகிறது. உண்மையுள்ளவனின் கரத்தில்தான் ஜெபிக்கும்படி உத்தரவாதத்தைக் கொடுக்கிறார். உண்மையாக இருத்தல் என்பது ஒருநாளில் நடந்துவிடுகிற காரியமல்ல. அது அனுதின ஜீவியம்.

வேதத்தில் பல பரிசுத்தவான்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தனர். மோசேயைக்குறித்து வேதம் கர்த்தருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் என்றும் (எபி.3:5), தாவீதைக் குறித்து கனமுள்ளவனுமாயிருக்கிற உண்மையுள்ளவன் (1சாமு.22:14) என்றும், கர்த்தரைக் குறித்து நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர் (1தெச.5:23) என்றும் சாட்சி சொல்லுகிறது. நாமும் உண்மையாய் ஜெபிக்க வேண்டும் என்கிற பாரத்தைக் கொண்டிருப்போமானால் தேவன் நம்மையும் உத்தமமும், உண்மையுமுள்ள ஜெபவீரர்களாக தமக்குமுன்பாக நிறுத்துவார் என்பதில் ஆச்சரியம் இல்லை.

இன்று ஜெபத்திலும் நடிக்கிற கூட்டங்கள் பெருகிவிட்டதை நினைக்கும்பொழுது மனதிற்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. தேவனுடைய உள்ளம் எவ்வளவு வேதனை அடையும் என்பதை யோசித்துப் பாருங்கள். உண்மையாகக் கண்ணீரோடு ஜெபிக்காமல் அழுது புலம்புவதுபோல குரல் தொனியில் வித்தியாசம் காட்டுவதும், கரிசனையாக ஜெபிப்பதைப்போல ஜனங்களுக்கு முன் மாய்மாலம் பண்ணுவதும், வல்லமையாக ஜெபிப்பதுபோல பொய்யாய் மிகுந்த சப்தமிட்டு ஜெபிப்பதும் (சப்தமாக ஜெபிப்பதில் தவறில்லை, சப்தத்தில் தான் வல்லமை இருக்கிறது என்பதே தவறு) எவ்வளவு கொடுமை. இவைகளெல்லாம் எதிரிக்கு பாதிப்பை உண்டாக்காத ஆயுதங்கள். தோட்டா இல்லாத துப்பாக்கிகள்.

உத்தரவாதமுள்ளவர்கள்

"அவனுக்காக நான் உத்தரவாதம்பண்ணுவேன்; அவனை என்னடத்திலே கேளும், நான் அவனை உம்மிடத்தில் கொண்டுவந்து, உமக்கு முன்பாக நிறுத்தாமற்போனால், எந்நாளும் அந்தக் குற்றம் என்மேல் இருப்பதாக" (ஆதி.43:9)

யாக்கோபினுடைய குமாரர்களில் யூதா தன்னுடைய தமையன் பென்யமீனை எகிப்திலிருந்து திருப்பிக்கொண்டுவந்து தன் தகப்பனாகிய யாக்கோபுக்கு முன்பாக நிறுத்துவேன் என்று மிகுந்த பொறுப்புடனும், உத்தரவாதத்துடனும் சொல்லுவதைப் பார்க்கிறோம். நாமும் நம்முடைய தேசத்தின் ஜனங்களைப் பரலோகத் தகப்பனுக்கு முன்பாக அவருடைய சமுகத்தில் சேர்க்கும்வரை மிகுந்த பொறுப்புடனும், உத்தரவாதத்துடனும் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டியது அவசியமாகிறது. பரந்து விரிந்த பாரத தேசம் நம்முடைய தேசம். அதிக மக்கள்தொகையில் உலகிலேயே இரண்டாவது இடத்தில் உள்ள தேசம் நம் தேசம். தேசத்தின் இரட்சிப்பிற்காக இரவும், பகலும் தேவனின் பாதத்தில் விழுந்து அதிக ஈடுபாட்டுடனும், மிகுந்த பொறுப்புடனும் ஜெபிப்பதே உத்தரவாதம்.

அழிவை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் நாம் தான் உத்தரவாதி. அதைக் குறித்த கணக்கு நம்மிடம்தான் கேட்கப்படும். மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக என்று எசேக்கியேல் 3:17-ல் உரைத்தவர் நம்முடைய தேசத்தின் காவலாளனாக நம்மையே ஏற்படுத்தியிருக்கிறார். நம்முடைய முழங்கால் ஜெபத்தில் தான் தேசத்தின் மீட்பை வைத்திருக்கிறார் தேவன். ஆகவே, உத்தரவாதத்தை உணர்ந்து தேவன் எதிர்ப்பார்க்கும் ஜெபத்தை நாம் ஏறெடுப்போமானால் தேசத்தில் மாபெரும் மாற்றத்தை அவர் கட்டளையிடுவார். இல்லையெனில், இரத்தப்பழியை நம்மிடத்தில் கேட்பார் என்பதை மறந்துவிடக்கூடாது.

பீறுண்டதை நான் உம்மிடத்துக்குக் கொண்டுவராமல், அதற்காக நான் உத்தரவாதம்பண்ணினேன்; பகலில் களவு போனதையும் என் கையில் கேட்டு வாங்கினீர். பகலிலே வெயிலும் இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது; நித்திரை என் கண்களுக்குத் தூரமாயிருந்தது; இவ்விதமாய்ப் பாடுபட்டேன் (ஆதி.31:39,40). யாக்கோபைப் போல உத்தரவாதமாக நாமும் இருந்து தேவன் தந்திருக்கும் ஜெபபாரத்தில் ஜெபிப்போமானால் தேசத்தில் எழுப்புதலை நிச்சயம் காண்போம்.

கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார்; அதற்கு அவன்: நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான் (ஆதி.4:9). இங்கு உத்தரவாதமற்ற பதிலைக் காயீன் தருவதைக் காணமுடிகிறது. அதுபோல நம்முடைய வாழ்க்கை இருக்ககூடாது. ஆகவே, நம்மேலுள்ள உத்தரவாதத்தை உணர்ந்தவர்களாக இருக்க தேவனுடைய கரத்தில் நம்மை அர்ப்பணிப்போம்.

ஊக்கமாய் ஜெபிக்கிறவர்கள்

"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக்.5:16)

சாதாரண நிலையிலிருந்து சற்று அதி தீவிரமாக ஜெபத்தில் ஈடுபடும் நிலையே ஊக்கமான ஜெபமாகும். ராஜாவின் காரியம் அவசரமானது என 1சாமு.21:8-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அதை விட அவரசமானதும், முக்கியமானதும் எதுவென்றால் அது நம்முடைய பரலோக ராஜாவிடம் இருந்து வரும் ஜெபபாரமே. அந்த ஜெபபாரத்தை நாம் அசட்டைச் செய்யவோ, தாமதமாகச் செயல்படுத்தவோ கூடாது. உடன் அந்த பாரத்தினால் நிறையப்பட்டு கரிசனையோடும், கருத்தோடும் மட்டுமல்ல, அதி தீவிரமாகவும் ஜெபிக்க வேண்டியது நம்மேல் விழுந்த கடமையாகும்.

பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணி னார்கள். அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான்; அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது. அவன் பேதுருவை விலாவிலே தட்டி சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான். உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது (அப்12:5-7). அப்போஸ்தலனாகிய பேதுரு இயேசுவைக் குறித்து பிரசங்கித்ததால், ஏரோது அவரைச் சிறையில் அடைத்து, பலத்த காவல் வைத்தான். பரத்திலிருந்து சபையாருக்கு பேதுருவினிமித்தமாகக் கொடுக்கப்பட்ட ஜெபபாரத்தில் ஊக்கமாக ஜெபித்ததால் கர்த்தருடைய தூதன் வந்து பேதுருவை விடுவிக்கிறான். தாமதமாகவோ அல்லது பயத்தினாலோ சீஷர்கள் கெத்செமனே தோட்டத்தில் தூங்கியதுபோல நித்திரை செய்திருந்தால் பெரிய இழப்பை ஆதி திருச்சபை சந்தித்திருக்கும். ஆனால், பரலோகம் சபையாருக்குள் ஜெபிக்க வேண்டிய பாரத்தை ஊற்றினபொழுது அவர்களும் தேவனுடைய பாரத்தைப் புரிந்து கொண்டு அதற்கேற்றபடி ஊக்கமாக ஜெபித்தனர். அந்த ஜெபம் பலத்த கிரியையைக் கொண்டு வந்தது.

அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது (லூக்.22:44). நம் அன்பு இரட்சகருக்கும்கூட அதிக ஊக்கத்தோடே ஜெபிக்க வேண்டிய தருணம் ஏற்பட்டது. பிதாவாகிய தேவன் எதிர்ப்பார்த்ததைப்போல கிறிஸ்துவானவர் தமக்குள் ஏற்பட்ட ஜெபபாரத்திற்கு அப்படியே தம்மை விட்டுக் கொடுத்தார்.

இயேசுகிறிஸ்துவின் ஊக்கமான ஜெபத்தால்...

- **வானம் திறந்து தேவதூதன் இறங்கி வந்தான் (லூக்.22:43)**

  அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்.

- **பிதாவின் சித்தத்திற்கு முழுமையாக அர்ப்பணிக்க வைத்தது (லூக்.22:42)**

  பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்.

- **சிலுவையின் பாடுகளைத் தாங்க பெலன் கிடைத்தது (லூக்.22:43)**

  முழு மனுக்குலத்தின் பாவங்களைச் சுமக்க வேண்டியதிருக்கிறது.

  பிதாவாகிய தேவனுடைய முகம் மறைக்கப்படப்போகிறது.

  பிதாவினால் கைவிடப்பட வேண்டிய சூழ்நிலை உண்டாகிறது.

  தம் வேதனையைக் கண்டு பிதா துக்கப்படும் சூழல் உண்டாகிறது.

- **தேவனுடைய வல்லமை வெளிப்பட்டது (யோவா.18:4-5)**

  இயேசு தமக்கு நேரிடப்போகிற எல்லாவற்றையும் அறிந்து எதிர்கொண்டு போய், அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்றார்.

அவருக்கு அவர்கள் பிரதியுத்தரமாக: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு: நான்தான் என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவர்களுடனேகூட நின்றான்.

நான்தான் என்று அவர் அவர்களிடத்தில் சொன்னவுடனே, அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள்.

சபையாரின் ஊக்கமான ஜெபத்தால்...

- வானம் திறந்து தேவதூதன் இறங்கி வந்தான் (அப்.12:7)

அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான்.

- இருளில் வெளிச்சம் பிரகாசித்தது (அப்.12:7)

அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது.

- கட்டுகள் உடைந்து விழுந்தது (அப்.12:7)

உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது.

- அடைக்கப்பட்டிருந்த கதவுகள் திறந்தது (அப்.12:8)

அவர்கள் முதலாங்காவலையும் இரண்டாங்காவலையும் கடந்து, நகரத்திற்குப் போகிற இருப்புக்கதவண்டையிலே வந்தபோது அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது.

- கிரகிக்க முடியாத அற்புதம் நடந்தது (அப்.12:13-16).

அவள் பேதுருவின் சத்தத்தை அறிந்து சந்தோஷத்தினால் கதவைத் திறவாமல், உள்ளேயோடி, பேதுரு வாசலுக்குமுன்னே நிற்கிறார் என்று அறிவித்தாள்.

அவர்கள்: நீ பிதற்றுகிறாய் என்றார்கள். அவளோ அவர்தானென்று உறுதியாய்ச் சாதித்தாள். அப்பொழுது அவர்கள்: அவருடைய தூதனாயிருக்கலாம் என்றார்கள்.

பேதுரு பின்னும் தட்டிக்கொண்டிருந்தான். அவர்கள் திறந்தபோது அவனைக் கண்டு பிரமித்தார்கள்.

எலியாவின் ஊக்கமான ஜெபத்தால்...

- வானத்தை அடைக்கவும், திறக்கவும் இயற்கையின்மேல் அதிகாரம் கிடைத்தது (யாக்.5:16-18)

எலியா என்பவன் நம்மைப்போல பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான். அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை.

மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது.

- உலக இராஜ்ஜியம் கலங்கினது (1இரா.18:17)

ஆகாப் எலியாவைக் கண்டபோது, ஆகாப் அவனை நோக்கி: இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நீயல்லவா என்றான்.

- வல்லமையான அற்புதம் நடந்தேறியது (1இரா.18:38)

அப்பொழுது கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது.

- எழுப்புதல் ஏற்பட்டது (1இரா.18:39)

ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம் என்றார்கள்.

- தேசத்தின்மேல் ஆசீர்வாதம் வந்தது (1இரா.18:42-46)

ஆகாப் போஜனபானம் பண்ணப்போனான்; பின்பு எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறி, தரையிலே பணிந்து, தன் முகம் தன் முழங்காலில் பட குனிந்து,

தன் ஊழியக்காரனை நோக்கி: நீ போய்ச் சமுத்திரமுகமாய்ப் பார் என்றான்; அவன் போய்ப் பார்த்து, ஒன்றும் இல்லை என்றான்; நீ இன்னும் ஏழுதரம் போய்ப் பார் என்றான்.

ஏழாந்தரம் இவன்: இதோ, சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கை அத்தனைச் சிறிய மேகம் எழும்புகிறது என்றான்; அப்பொழுது அவன் நீ போய், ஆகாபை நோக்கி: மழை உம்மைத் தடைசெய்யாதபடிக்கு இரதத்தைப் பூட்டி, போய்விடும் என்று சொல் என்றான்.

அதற்குள்ளாக வானம் மேகங்களினாலும் காற்றினாலும் கறுத்து பெருமழை உண்டாயிற்று; ஆகாப் இரதத்தில் ஏறி யெஸ்ரயேலுக்குப் போனான்.

ஊக்கமான ஜெபம் என்பது தேவனிடத்தில் நம் முழு இருதயத்தோடும், முழு மனதோடும் ஏறெடுக்க வேண்டிய ஜெபமாகும். அந்த ஜெபம் தேவனுடைய பிரசன்னத்திலிருந்து மிகுந்த பலனையும், நன்மையையும் கொண்டு வருகிறது. தேசத்தின் எழுப்புதலுக்காகத் தேவன் தந்த ஜெபபாரத்திற்கு நம்மை அர்ப்பணித்து அப்படியே தொடர்ந்து ஊக்கமாக ஜெபிக்கும்பொழுது உன்னதமான தேவன் எழுந்தருளி தேசத்திற்காக வைரக்கியம் கொண்டு அதனைக் கடாட்சிப்பார்.

முக்கியத்துவமும், மதிப்பும் தருகிறவர்கள்

"இஸ்ரவேலின்மேல் சவுலை ராஜாவாக்கினதற்காகத் கர்த்தர் மனஸ்தாபப்பட்டதினிமித்தம், சாமுவேல் சவுலுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான்" (1சாமு.15:35)

தீர்க்கதரிசியாகிய சாமுவேல் தனக்கு நேராக வந்த ஜெப பாரத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு, அதற்கு மதிப்பளித்து தொடர்ந்து பல நாட்கள் துக்கித்துக்கொண்டிருந்தபொழுது, கர்த்தராகிய ஆண்டவர் சாமுவேலை நோக்கி: இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிராதபடிக்கு, நான் புறக்கணித்துத் தள்ளின சவுலுக்காக நீ எந்தமட்டும் துக்கித்துக்கொண்டிருப்பாய் என்று கேட்டதாக 1சாமுவேல் 16:1-ல் வாசிக்கிறோம்.

கர்த்தர் சாமுவேலைப் பார்த்து: நான் சவுலை இராஜாவாக ஏற்படுத்தினது எனக்கு மனஸ்தாபமாக இருக்கிறது என்று சொல்லி விட்டு போய்விடுகிறார். ஆனால், சாமுவேலோ அதை விடுவதாக இல்லை என் தேவன் மனஸ்தாபப்படும்படி நடந்துவிட்டதே என்று வேதனைப்படத்தொடங்கி, தன்னைப் பாரப்படுத்தின அந்தக் காரியத்திற்கு முக்கியத்துவமும், மதிப்பும் அளித்துத் தொடர்ந்து நாட்கணக்கில் மனம்நொந்து தேவனுடைய சமுகத்தில் புலம்பிக் கொண்டிருந்தார். அதாவது தேவனே இறங்கி வந்து நீ எந்தமட்டும் துக்கித்துக்கொண்டிருப்பாய் என்று கேட்குமளவிற்கு சாமுவேல் அந்த பாரத்திற்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்தார்.

மன்றாட்டு வீரர்களாகிய தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தேவப்பிள்ளைகளுடைய இருதயத்திலே சில நேரங்களில் அவரால் வைக்கப்படும் பாரமானது சிறிய அளவில் இருந்தாலும் அதற்கு அதிக முக்கியத்துவம் தந்து அதற்காக மன்றாடும்பொழுது அவர்கள் மேல் ஜெபஅனல் பெருக ஆரம்பித்து விடும். கொஞ்சத்தில் உண்மையாக இருந்து அவர்கள் செய்கிற அந்த ஜெபமானது போகப்போக பலமடங்காகப் பெருகவும் தொடங்கிவிடும். இந்த அனுபவத்தை மன்றாட்டு வீரர்களில் அநேகர் தங்களுடைய ஜெபவாழ்வில் கண்டிருப்பார்கள்.

அது மட்டுமல்ல, சர்வ வல்லமையுள்ள தேவன் அப்படிப் பட்டவர்களை நம்பி இன்னும் அதிகமான பல்வேறு ஜெபபாரங்களை தரத் தொடங்கிவிடுவார். அவன் உனக்காக வேண்டுதல் செய்வான் என்று தேவனாலே அறிவிக்கப்பட்ட விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் தேவன் தனக்குத் தந்த ஜெபபாரத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு அதற்கு முக்கியத்தும் தந்து தொடர்ந்து தேவனுக்கு முன்பாக நின்று பரிந்துபேசி ஜெபித்தாரே. நாமும் அப்படியே தேவனிடத்திலிருந்து நமக்கு நேராக வரும் பாரத்தைப் புரிந்துகொண்டு தொடர்ந்து அவர் சமுகத்தில் நிற்க கர்த்தர் நமக்குக் கிருபை செய்வாராக.

கரிசனையுடன் ஜெபிக்கிறவர்கள்

"ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான்"
(யாத்.32:32)

தேவன் தந்த விலையேறப்பெற்ற ஜெபதாகத்தையும், பாரத்தையும், வாஞ்சையையும் ஏனோதானோவென்று அதாவது ஐயோ! ஜெபிக்க வேண்டுமே என்று கஷ்டப்பட்டு செய்யாமல் அவர் சமுகத்திற்கு வரும்போதெல்லாம் அந்த பாரத்திற்காக சிரத்தையுடன், பரிவுடன் அக்கறை எடுத்து ஜெபிப்பதே கரிசனையுள்ள ஜெபமாகும். தேவனிடத்தில் ஜனங்கள் நிமித்தமாக உண்டாகும் பாரத்தை அன்போடும், அக்கறையோடும்தான் சுமந்து செல்ல வேண்டும். தேவன் ஜனங்கள்மேல் எவ்வளவு கரிசனையுள்ளவராக இருக்கிறாரோ மன்றாட்டு வீரர்களும் அதே கரிசனையுடன் அவர்களுக்காகப் பரிந்துபேச வேண்டியது அவசியம்.

இன்றைய கிறிஸ்தவ உலகில் அநேகர் ஜெபிக்காமல் கிறிஸ்துவுக்காக ஓடிஓடி உழைக்கவும் (கொலோ.4:12), தாராளமாய்க் காணிக்கைக் கொடுக்கவும், ஊழியத்தில் ஆர்வம் காட்டவும் தயாராக இருக்கிறார்கள். ஆனால், அவர்களெல்லாம் ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுகிறவர்கள்போலவே இருப்பார்கள். இரகசியமாக ஜெபிப்பதே ஜெபத்தின் இரகசியமாகும் (மத்.6:5-8). அதிலும், கரிசனையோடு, பாரத்தோடு ஜெபிப்பதே அதிலும் மேன்மையான அனுபவமாகும். தேவனுக்கு உகந்த விதத்தில் கரிசனையோடு ஜெபிப்பது என்பது ஒரு தாய் தன் கருவில் இருக்கும் குழந்தையைப் பெற்றெடுக்கும் அனுபவத்திற்குச் சமானமானது. கரிசனையுள்ள ஜெபத்தால் மட்டுமே தேவன் தேசங்களை அசைக்க முடியும். உயிரற்று ஜெபிக்கும் பல மணிநேர ஜெபங்கள் எந்த தாக்கத்தையும் உண்டாக்காது. மாறாக பாரத்தோடும், கரிசனையோடும் ஜெபிக்கும் சில நிமிட ஜெபங்கள்கூட மாபெரும் எழுப்புதலைக் கொண்டு வருவதை மறக்க முடியாது.

பரிசுத்த ஆவியானவரின் அக்கினி இல்லாமல் ஏறெடுக்கப்படும் எந்த ஜெபதூபமும் பிதாவின் சமுகத்தில் நறுமணமாக இருக்காது!

– புத்தக ஆசிரியர்

ஜெப பாரமும் ஆவியானவரும்!

அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில்
நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள
வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால்,
ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு
நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய
சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல்
செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின்
சிந்தை இன்னதென்று அறிவார்
(ரோம 8:26,27)

ஆவியானவரை முழுமையாக சார்ந்துகொள்ளுங்கள்

"நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு பரிசுத்தஆவிக்குள் ஜெபம்பண்ணி..." (யூதா.20)

உன்னத தேவன் தமது ஜனங்களுக்காகக் கொண்டிருக்கும் கரிசனையையும், இதய பாரத்தையும் சரியாக விளங்கிக் கொள்ளாமல் நம்முடைய சுய பெலத்தையோ, சொந்த அறிவையோ சார்ந்து கட்டாயம் ஜெபிக்க முடியாது. கர்த்தருடைய ஆவியானவரை முழுமையாக சார்ந்து நிற்கும்போது தான் தேவன் எதிர்ப்பார்க்கிற மகிமையான ஜெபத்தை நம்மால் ஏறெடுக்க முடியும். எந்த ஜெபபாரத்திற்கு எப்படிப்பட்ட விதத்தில் ஜெபிக்க வேண்டுமென்று ஆவியானவர் ஒருவர்தான் நம்மை நடத்த முடியும். அவர் ஒருவரே தேவனுடைய பாரத்தின்படி ஜெபிப்பதற்கு நம்மைச் சரியாக நடத்த வல்லவர். ஒரு காரியத்திற்காகக் கருத்தாய் விண்ணப்பம் செய்ய வைக்கிறவரும் ஆவியானவர்தான் (1கொரி.14:14,15). ஜெபம் என்பது பரலோகத்தை எட்டும் மகிமையான தூபவர்க்கம். ஆவியானவரைச் சார்ந்தே அதனை ஏறெடுக்க முடியும்.

ஆவியானவருடைய முழுமையான ஆளுகை இல்லாமல் செய்யப்படும் ஜெபம் ஜெபமே இல்லை – பரி. ஸ்பர்ஜன்

தேவஆவியானவர் நம்மை ஜெபிக்கும் மனிதர்களாக மாத்திரம் அல்ல. முழுமையாக அவரையே சார்ந்துகொண்டு ஜெபிக்கிற ஜெப மனிதர்களாகவே மாற்ற விரும்புகிறார். கள்ளர் குகையைப் போன்ற தேவையற்ற காரியங்களை நம்மை விட்டு விலக்கி ஜெபவீடாக நம்மை தமக்கேற்றவாறு மாற்றுகிறார் ஆவியானவர். நாம் ஒவ்வொருவரும் ஒரு ஜெபவீடு என்பதை மறந்துவிடக்கூடாது. குளிர்ந்துபோய் வெதுவெதுப்பான நிலையிருந்து நம்மைத் தூக்கியெடுத்து கொழுந்துவிட்டு எரியும் அக்கினிஜ்வலையாகிய உயர்ந்த நிலைக்கு ஜெபத்தைக் கொண்டு செல்பவரும் ஆவியானவரே.

ஆவியானவர் உதவி செய்கிறார்

"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்ன தென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" (ரோம.8:26)

நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாமலிருக்கிறபடியால் ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார். அவர் நம்மை ஜெபிப்பதற்குப் போதித்து, பெலப்படுத்தி, வழிநடத்தி, உதவியும் செய்கிறவராயிருக்கிறார். ஆதியிலே ஜலத்தின்மேல் அசைவாடி பூமியை ஒழுங்குபடுத்தினவர் நம்மீதும் அசைவாடி நாம் ஜெபிக்க வேண்டிய காரியத்திற்கு நேராக நம்மை வழிநடத்தி ஒரு ஆழமான ஜெபபாரத்திற்கு நேராக நம்மை நடத்திச் செல்கிறார். ஆதலால் அந்த ஜெபஆவி நம்மில் எப்பொழுதும் அனலுள்ளதாகக் காணப்படுவதோடு, பற்றியெரிகிற ஜெபஅக்கினியாகவும் நம்மில் கிரியைச் செய்து நம்மை மூடி அடைகாத்துக்கொண்டே இருக்கும். அந்த தேவனுடைய பாரம் எனும் அனல் நம்மில் எப்பொழுதும் ஜெபிக்கும் வாஞ்சையை பெருக்கிக்கொண்டே இருக்கும்.

பரிசுத்த ஆவியானவர் மரியாள்மீது மகிமையின் மேகமாக நிழலிட்டு பரிசுத்த கருவை வைத்ததுபோல, நம்மீதும் நிழலிட்டு ஜெபக்கருவை நம்மில் வைத்து உன்னதமான உயர்ந்த ஜெபத்தைச் செய்யவும் அவர் உதவி செய்கிறார். ஆதலால் பாரம் மிகுந்த மன்றாட்டைச் செய்ய நம்மால் முடிகிறது. கெத்செமனே தோட்டத்தில் நம்முடைய அன்பு இரட்சகர்மேல் ஆவியானவர் நிழலிட்டு அவருக்குள் ஏற்படுத்திய ஆழமான பாரமே ஒரு அற்புதமான மன்றாட்டிற்குள்ளாக அவரை நடத்தியது. நம்மையும் பரிசுத்த ஆவியானவர் ஒரு ஜெபப்புயலாக, காட்டுத்தீயாக, காட்டாறாக மாற்றி ஜெபத்தில் பற்றி பரவச் செய்ய விரும்புகிறார்.

ஆவியானவர் வெளிப்படுத்துகிறார்

"நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்" (1கொரி.2:10)

தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுடைய இதய பாரத்தை அறியமாட்டான். எந்தச் சூழ்நிலையில் எப்படிப்பட்ட ஜெப ஆயுதத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று ஆவியானவர் மூலமாகவே வெளிப்படுத்தப்படுகிறது. தேவனுடைய இதயத் துடிப்பையும், அவர் கொண்டிருக்கும் மனவேதனையையும், துக்கத்தையும் ஆவியானவர் ஒருவர் தான் நமக்கு வெளிப்படுத்த முடியும். எத்தனையோ முறை நாம் தேவனுடைய இதயத் துடிப்பை அறியாதபடி விண்ணப்பம் செய்திருக்கிறோம். அவருடைய தேவையை அறிய விரும்பாமல், வெளிப்படுத்தும்படி கதறாமல், நம்முடைய தேவையை மட்டுமே அவரிடம் திணித்துவிட்டு சென்று விட்டிருக்கிறோம். அவருடைய உள்ளத்தைப் பிளக்கிற காரியங்களை அறிந்து அதற்காக ஜெபிக்க நாம் ஆயத்தம் என்றால், ஆவியானவரும் அவைகளை நமக்கு வெளிப்படுத்த ஆயத்தமே.

பரலோகம் செய்யவிருக்கும் மகிமையான காரியங்களையும், திட்டங்களையும் ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்துவார். அவர்தான் பரலோக தேவனுடைய அன்பின் அகலத்தையும், ஆழத்தையும், நீளத்தையும், உயரத்தையும் அறிந்தவர். மட்டுமல்ல, பாதாளத்தின் சதிநாசமோசங்களையும், அதின் தந்திரங்களையும் அவரே நமக்கு வெளிப்படுத்தி அதற்காகப் போராடி ஜெபிக்க நம்மைத் தூண்டிவிடுகிறவராக இருக்கிறார். கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந் தோறும் தெரிவிக்கிறதைமாத்திரம் அறிந்திருக்கிறேன் (அப்.20:23) என்று அப். பவுல் சொல்லுகிறதை வாசிக்கிறோமே. அதுபோல, ஆவியானவரே எல்லாவற்றையும் நமக்கு வெளிப்படுத்தி ஜெபிக்க வேண்டிய பெலத்தையும் அநுக்கிரகம்பண்ணுகிறவராக இருக்கிறார்.

ஆவியானவர் பெலப்படுத்துகிறார்

"நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசேலம் நகரத்தில் இருங்கள்" (லூக்.24:49)

நம்முடைய ஆண்டவர் ஜெபிக்க வேண்டிய மிக முக்கியமான தருணத்தில் ஜெபிக்காமல் நித்திரை மயக்கத்தில் தூங்கிப்போன சீஷரைப் பார்த்து: நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார் (மத்.26:41). பரலோகம் தரும் ஜெப பாரத்தைச் சுமப்பது பலவீனமான நம்முடைய மாம்சத்தினால் தாங்கக்கூடாத ஒரு காரியமாகும். ஆகவே, பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும் (லூக்.1:35) என்று மரியாளுக்கு தேவதூதன் பிரதியுத்தரம் சொன்னதுபோலவே ஜனங்களுக்காகக் கண்ணீரோடு, கரிசனையோடு திறப்பிலே நிற்க நம்மீது நிழலிடும் உன்னத பெலனாக ஆவியானவரே இருக்கிறார்.

பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலன் அடைந்து என்று அப்.1:8-ம், உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும், அப்பொழுது வனாந்தரம் செழிப்பான வயல்வெளியாகும், செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும் என்று ஏசா.32:15-ம் சொல்வதுபோலவே தேவ ஆவியானவர் தரும் பெலனால் நாம் தரிப்பிக்கப்படும் வரை நம்முடைய ஜெபமானது பாரமற்றதும், வறட்சியானதும், கரிசனை யற்றதுமாகவே இருக்கும். ஆகவே, ஆவியானவரின் பெலத்தினால் மன்றாட்டு வீரர்கள் அவ்வப்போது நிரப்பப்பட வேண்டியது அவசியம்.

ஆதியில் பரிசுத்த ஆவியானவரின் பெலத்தினால் நிரப்பப்பட்டு தேசத்திற்காகப் பாரத்தோடும், கரிசனையோடும் திறப்பிலே நின்று மன்றாடின பலர் இன்று சிம்சோனைப்போல ஆவியின் பெலத்தை இழந்து, ஆவியானவரை விட்டு விலகியிருக்கிறார்கள். அவன் தன்

கண்களை இழந்ததுபோலவே இவர்களும் தேசத்தைக் குறித்ததான தரிசனப் பார்வையிலிருந்து விழுந்துபோய் கரிசனையற்ற ஜெபத்தை செய்கிறவர்களாக மாறிவிட்டார்கள். தேவன் இல்லாத ஜெபத்தை தங்கள் மன திருப்திக்காக மாத்திரம் செய்துவிட்டு போகிறவர்களும் உண்டு. ஜெபத்தில் அந்நிய அக்கினியைக் கொண்டு சென்றால் அது தேவனுக்கு முன்பாக தூபமாக எழும்பாது. உன்னத பெலனாகிய ஆவியானவரின் அக்கினியைக் கொண்டு செல்லும்போதுதான் அது நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக தூபவர்க்கமாக ஏறெடுக்கப்படும் (வெளி.5:8; 8:3) என்பதை அனைவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமே.

ஆவியானவர் ஆலோசனை தருவார்/வழிநடத்துவார்

"ஆலோசனையும் பெலனையும் அருளும் ஆவியும்"
(ஏசா.11:2)

ஒரு ஜெபவீரன் முற்றும் முழுவதுமாகத் தன்னைப் பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்புக்கொடுக்கும்போது தான் அவர் அவனை ஆட்கொண்டு வழிநடத்த முடியும். ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; மனுஷனிலுள்ள ஆவியே யன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக் குரியவைகளை அறியமாட்டான் (1கொரி.2:11) என்று எழுதியிருக்கிறது போலவே பரிசுத்த ஆவியானவர் மாத்திரம்தான் பரத்திலிருந்து ஜெப வீரர்களுக்குக் கொடுக்கப்படும் பாரத்திற்கு ஏற்றார்போல ஜெபிக்க வேண்டிய நடத்துதலையும், ஆலோசனையையும் அருள முடியும். ஜெபத்தில் மிகச்சரியான வார்த்தைகளைச் சொல்லி ஜெபிக்கவும், ஜெபிக்க வேண்டிய காரியத்தையும் அவரே கொடுக்கிறார். ஆகவே, ஆவியானவருடைய நடத்துதலைப் பெற ஜெபவீரர்களாகிய நாம் அவரை வாஞ்சித்துக் கதறுவோம்.

ஆவியானவர் பாரப்படுத்துவார்

"நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்" (1கொரி.2:10)

தேசத்தில் உடைந்துபோன ஆத்துமாக்களுக்காக, உடைந்த குடும்பங்களுக்காக, இயேசுவை ஒருமுறைகூட கேள்விப்பட்டிராத கோடான கோடி மக்களுக்காக அவர்கள்மேல் தேவாதி தேவன் கொண்டிருக்கும் அவருடைய உள்ளத்தின் பாரத்தையும், வேதனையையும் அறிந்து, அதனைச் சுமந்து திறப்பிலே நின்று கண்ணீரோடும், கரிசனையோடும் மன்றாடுவதற்கு ஆவியானவரே ஒரு மன்றாட்டு வீரனை அந்தப் பாரத்திற்கு நேராக நடத்துகிறார். உன்னதமானவரின் பாரத்தைச் சுமந்து ஜெபிப்பது என்பது எத்தனை பாக்கியம். நரகம் செல்லும் பாதையில் தினம்தினம் சிலுவையின் அன்பை அறியாத எத்தனையோ கோடிகள் பயணிப்பதையும், நரகத்திலிருந்து எழும்பும் அகோர சத்தங்களையும், அவர்களுடைய வேதனை மிகுந்த வலியையும் தேவன் கண்ணோக்கும்போது அவருடைய உள்ளம் நொறுக்கப்படுகிறது.

ஆவியானவர் ஒருவரே நம்மை நொறுக்கப்பட்ட அவருடைய இருதயத்திற்கு அருகில் கொண்டுசெல்கிறார். அவ்வேளையில் எவர் சும்மா இருக்க முடியும்? கண்ணீர் விட்டு கதறாமல் இருக்க முடியும்? தேவனுடைய பாதத்தில் விழுந்து, ஓ தேவனே! அழிவை நோக்கி விரைந்தோடும் ஜனங்களை மீட்கமாட்டீரோ? என்று மன்றாடாமல் இருக்க முடியும். ஜெபத்தில் ஆவியானவர் நம்மை நடத்தும்படி அர்ப்பணித்தால் நம் ஜெபங்கள் வல்லமையுள்ளதாக மாறும். அப்பொழுது நாம் சுயநலமாகவே ஜெபித்துக்கொண்டு இருக்கமாட்டோம். நம் கண்கள் வறட்சியான பாலைவனமாக இருக்காது. நம் முழங்கால்களில் பெலன் குறையாது. நம் நெஞ்சம்

ஈரமற்றுப் போகாது. அவர் பாதத்தில் விழுந்து ஆத்துமாக்களை எனக்குத் தாரும் என்று இதயம் உடைந்து நொறுங்குமளவிற்கு நம்மைக் கொண்டு செல்வார் விண்ணப்பங்களின் ஆவியானவர்.

ஆவியானவர் கர்மேல் பர்வதத்தின் சிகரத்தில் முழங்காலில் முகம் படும்படி குனிந்து ஜெபித்த எலியாவைப்போல கர்ப்ப வேதனையின் ஜெபத்திற்கு நேராக நம்மை நடத்துவார். கெத்செமனே தோட்டத்தில் இரத்த நாளங்கள் வெடிக்குமளவிற்கு ஜெபித்த அருமை இரட்சகர் இயேசுவைப் போல நாமும் ஜெபிக்க அர்ப்பணித்தால் அவர் நம்மையும் அப்படியே வழிநடத்துவார். வலியில்லாமல் ஜெபித்துப் பழகிப்போனவர்களுக்கு கர்ப்ப வேதனையின் வலிக்கு ஒத்த ஏக்கப்பெருமூச்சுகளோடு ஜெபிக்க ஆவியானவரே பாரத்தை அருளுகிறார்.

ஆவியானவர் தூண்டுகிறார்

“நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்” (ரோம.8:26)

நமக்குள்ளிருக்கும் பரிசுத்த ஆவியானவர் நம்மை ஜெபிக்கத் தூண்டுகிறவர் மட்டுமல்ல; ஜெபிப்பதற்கு உதவி செய்கிறவரும் கூட (ரோம. 8:26). இவர் பிதாவானவர் பாரப்படும் காரியங்களுக்காக நம்மை பாரப்பட வைத்து நமக்குள்ளிருந்து வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு ஜெபிக்கவும் நம்மைத் தூண்டி ஜெபிக்க வைக்கிறார். எழுப்புதலை ஆவலோடு காத்துக்கொண்டிருக்கும் இக்கொடிய கடைசி நாட்களில் வல்லமையாக ஜெபிக்கவும், சிறந்த மன்றாட்டு வீரர்களாகத் திகழவும் உதவி செய்வதில் ஆவியானவரே பெரும் பங்காற்றுகிறார். உன்னதரின் சித்தத்தை அறிந்து ஆவியானவரால் தூண்டப்பட்டு ஜெபிக்கிற அனுபவம் நம்மை ஜெபத்தின் உயரத்திற்கு அழைத்துச் செல்கிறது.

தேசத்தில் நடைபெறுகின்ற சகல காரியங்களையும் அறிந்தவர் ஆவியானவரே. அவரால் நிறைந்து ஜெபிக்கும்போது பல மணி நேரங்கள் ஜெபிக்கும் கிருபையை நாம் அடைகிறோம். சில சமயம் உலகம் தரும் உபத்திரவங்களினால் நாம் சோர்ந்துபோகும்பொழுது நம்மைத் தட்டி தூண்டி எழுப்பி விடுகிறார். நமக்கு வேண்டிய ஜெபஅபிஷேகத்தால் நிரப்புகிறார். அந்த அபிஷேகம் ஜெபிக்கிற நம் இருதயத்தில் தணியாத ஜெபதாகத்தை உண்டாக்குகிறது. அதுவே நம்மை ஜெபிக்கும்படி தூண்டிவிடுகிறது.

பரிசுத்த ஆவியானவருடைய துணையும், தூண்டுதலும் இல்லாமல் வல்லமையாய் ஜெபிக்க இயலாது. எனவேதான் ஜெபிக்க முடியாத கடினமான நேரத்திலும், சோர்வடைந்த சமயத்திலும் ஆவியானவரைச் சார்ந்துகொண்டால் அவரால் தூண்டப்பட்டு தொடர்ந்து பல மணிநேரங்கள் கருத்தோடும், கரிசனையோடும், கண்ணீரோடும் மனப்பூர்வமாக ஜெபிக்கிற உன்னத அனுபவத்தை மன்றாட்டு வீரர்கள் பெறுவது நிச்சயம்.

"உன்னதரின் பாரத்தை தந்திடுமே

உண்மையான வலியோடு ஜெபித்திடவே

பரிசுத்தரின் உள்ளத்தின் ஏக்கமே

எந்தனின் ஜெபமாய் மாறட்டுமே"

பரிசுத்த ஆவியானவரின் அக்கினியோடு இணைந்து ஜெபிக்கும் ஜெபம் பிதாவின் சமுகத்தில் மகிமையான பதில் பெறும்.

நமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து பெருமூச்சுகளுடன் புறப்படும் ஜெபபாரமானது ஒரு பிரசவ வேதனைக்கு ஒப்பானதாகும்.

– புத்தக ஆசிரியர்



தேவனின் பாரம்

ஒருவரும் இல்லையென்று கண்டு,
விண்ணப்பம் பண்ணுகிறவன்
இல்லையென்று ஆச்சரியப்பட்டார்
(ஏசாயா 59:16)

பரலோக தேவனுடைய பாரமே நம்முடைய ஜெபபாரமாக மாறுகிறது. மன்றாட்டு ஜெபமானது பரலோக இராஜ்ஜியத்தின் விரிவாக்கத்திற்காகத் தேவனுடைய உள்ளத்தின் முழுவேதனையையும் சுமந்து ஜெபிக்கிற உன்னத ஜெபமாகும். தேவனுடைய வேதனையே ஜெபபாரமாக நமக்குத் தரப்படுகிறது. ஒரு சமயம் தேவனுடைய பெரிதான கிருபையால் என் மனைவி, பிள்ளைகளுடன் குடும்பமாக

நாங்கள் ஜெபித்துக் கொண்டிருந்தபோது கர்த்தருடைய மேகம் எங்கள்மேல் நிழலிடுவதை உணரத் துவங்கினோம். அனைவரும் மனப்பூர்வமாக அர்ப்பணித்து ஜெபித்து காத்திருக்கையில் திடீரென கர்த்தர் என் மகன் சாமுவேலின் கண்களைத் திறந்தருளினார். அப்பொழுது அவன் ஒரு தரிசனத்தைக் கண்டான். அத்தரிசனத்தில், திரள்திரளான ஜனங்கள் போகக்கூடாதபடிக்கு ஒரு பெரிய கதவு அவர்களைத் தடுத்துக் கொண்டிருந்தது. ஆனால், கூட்டநெரிசல் காரணமாக அதையும் உடைத்துக்கொண்டு கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த அக்கினியுள்ள அவ்விடத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக விழுந்துகொண்டேயிருந்தனர். அக்காட்சியைக் கண்ட கர்த்தருடைய கண்களில் கண்ணீர் வழிந்தோடிக்கொண்டேயிருந்தது. அன்று நாங்கள் அனைவரும் உள்ளம் உடைந்து பல மணி நேரம் குடும்பமாக ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காகக் கண்ணீரோடு ஜெபிக்கவும், அன்பாகவே இருக்கிற நம் தேவன் தம் ஜனங்கள்மேல் கொண்டுள்ள அவருடைய கரிசனையையும், மனதுருக்கத்தையும் அறியவும் காரணமாயிருந்தது அவன் அன்று கண்டு அறிவித்த அந்த தரிசனமே. அவரைப்போல நாமும் ஜனங்களுக்காகக் கரிசனை யோடும், மனதுருக்கத்தோடும் திறப்பிலே நின்று மன்றாட வேண்டுமென்று அவர் நம்மை எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார் (எசே.22:30).

அன்பு தகப்பனுடைய கண்கள் ஏன் மன்றாடுகிறவர்களைத் தேடுகிறது என்றால் நரகத்திற்கு தூக்கி அடிக்கப்படுகிற மக்கள் அதில் விழுகிறபோது தாங்கமுடியாத வேதனையினாலும், துயரத்தினாலும் அவர்கள் எழுப்புகிற கூக்குரலின் சத்தங்கள் பரத்தை நோக்கி எட்டுகிறது. அவ்வேளையில் தேவனுடைய உள்ளம் மிகவும் வேதனையடைகிறது. இதினிமித்தமே நரகத்தை நோக்கி விரைந்தோடும் ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காகக் கண்ணீரோடும், கரிசனையோடும், உத்தரவாதத்தோடும் திறப்பிலே நின்று மன்றாடுகிற தம்மவர்களை அவருடைய உள்ளம் தேடுகிறது.

நியாயம் பின்னிட்டு அகன்றது, நீதி தூரமாய் நின்றது, சத்தியம் வீதியிலே இடறி, யதார்த்தம் வந்து சேரமாட்டாமற் போகிறது. சத்தியம் தள்ளுபடியாயிற்று, பொல்லாப்பை விட்டு விலகுகிறவன் கொள்ளையாகிறான், இதைக் கர்த்தர் பார்த்து நியாயமில்லையென்று விசனமுள்ளவரானார். ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம்பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார், ஆதலால் அவருடைய புயமே அவருக்கு இரட்சிப்பாகி, அவருடைய நீதியே அவரைத் தாங்குகிறது (ஏசா.59:14,15,16) என்றும், நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன் (எசே.22:30) என்றும் கூறும் வசனங்கள் அவருடைய மனவேதனையையும், அவர் தேடியும் ஒருவரையும் காணாதபோது அவருக்கிருக்கும் அங்கலாய்ப்பையும் காண்பிக்கிறது.

நம் தேசத்தில் ஒரு நிமிடத்திற்கு எத்தனை கொலைகள், கொள்ளைகள், கடத்தல்கள், கற்பழிப்புகள், குடும்ப வன்முறைகள், விபத்துகள், குற்றங்கள் நடந்தேறுகிறது என்பதைக் காணும்பொழுது நம்மால் எப்படி சும்மா இருக்க முடியும். சில நாட்களுக்கு முன்பு நான் கேட்ட செய்தி என்னை உடைத்தது. மும்பைக்கு கட்டிட வேலைக்காக திருவண்ணாமலையிலிருந்து ஒரு குடும்பம் தங்களுடைய 3 வயது குழந்தையோடு சென்றிருந்தது. பகல் நேரமெல்லாம் கட்டடி வேலை, களைப்புடன் திரும்பிய அந்த குடும்பம் இரவு உணவு எடுத்ததும் படுக்கைக்குச் சென்றது. அதிகாலையில் எழும்பியபோதோ அருகில் படுத்திருந்த குழந்தையைக் காணவில்லை. பல இடங்களில் தேடி அலைந்தும் குழந்தையை கண்டுபிடிக்க முடியவில்லை. சில மணிநேரங்கள் சென்றபின்பு அவர்கள் தங்கியிருந்த கட்டிடத்தின் பின்புறம் ஒரு கால்வாயில் மரிந்த சடலமாகக் கண்டெடுக்கப்பட்டது அக்குழந்தை. பின்பு அதற்குப் பிரேதப் பரிசோதனை நடந்தது. சோதனையின் முடிவில் குழந்தை பாலியல் ரீதியில் பாதிக்கப்

பட்டிருப்பதாக முடிவுகள் வெளியானது. அந்தக் குழந்தையை வாங்கிய தாய் தன் மார்ப்பில் அடித்துக்கொண்டு எந்த பாழாய்ப்போனவன் இதைச் செய்தானோ என்று கதறினார்கள். அந்தத் தாயின் வலியை வார்த்தையால் விவரிக்க முடியாது. அந்தக் குழந்தை பாதிக்கப்பட்டபோது அது அடைந்த வலியையும், வேதனைனையும் வார்த்தைகளால் விவரிக்க முடியாது. இப்படி ஒவ்வொருநாளும் பூமியில் நடந்தேறும் அக்கிரமங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு பரலோக தகப்பனால் எப்படி சும்மா இருக்க முடியும்? ஆகவே, தேசம் அழிவுக்கும், நியாயத்தீர்ப்புக்கும் நேராக வைக்கப்படுகிறது. இச்சூழ்நிலையில்தான் உண்மையுள்ள மன்றாட்டு ஜெபவீரனிடம் ஜெபபாரம் அருளப்படுகிறது.

ஒருமுறை கைலாச மகரிஷி ஆவிக்குள்ளாகி பூமியிலிருந்து வானமண்டலத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டாராம். அப்பொழுது இயேசு அவரிடம் சொன்னார்: உன் காதுகளைத் திறக்கப் போகிறேன், நான் கேட்கிறதுபோல் நீயும் கேட்பாய் என்று. காதுகள் திறக்கப் பட்டவுடன் பூமியிலிருந்து எழும்பி வருகிற சத்தங்களை அவர் கேட்க ஆரம்பித்தார். கொடூரமான சத்தங்கள், அகோர சத்தங்கள், தவிப்பின் சத்தங்கள், கூக்குரலின் சத்தங்கள், வேதனையின் சத்தங்கள் என பாதிக்கப்பட்டவர்களின் பலவித சத்தங்கள் அவருடைய காதில் விழுந்துகொண்டேயிருந்தது. சற்றுநேரத்திலேயே அவர் தேவனை நோக்கி தாங்கமுடியாத வேதனையுடன் தேவனே என்னால் இதைச் சகிக்க முடியவில்லை, தயவு செய்து இந்த சத்தங்களை எடுத்துவிடுங்கள் என்று கதறினார். அவர் தேவனுடைய முகத்தைப் பார்த்தபோதோ அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் வடிவதைக் கண்டார் என்பதாக அப்புத்தகத்தில் எழுதியிருந்தது.

பரலோக தகப்பனின் மனவேதனையையும், பாரத்தையும் நாம் ஒருமுறை அறிந்துவிட்டால்கூட நம்மால் சும்மா இருக்க முடியாது. ஜெபிக்காமல் இருக்க முடியாது. அழுகி நாற்றமெடுத்துப்போன

பாரம்பரிய வார்த்தைகளையே திரும்பத்திரும்ப சொல்லிக்கொண்டு இருக்க முடியாது. காய்ந்துபோன கிணறுபோல ஈரமற்ற வார்த்தைகளைக் கொண்டு ஜெபிக்க முடியாது. அடுக்கு வார்த்தைகளாலும், அழுகு வார்த்தைகளாலும் மனிதரை கவர்ச்சிக்கும் முறையில் ஜெபிக்க முடியாது. அந்த ஜெபமோ உள்ளத்தைப் பிளந்து எழும்பும் பாரம் நிறைந்த வார்த்தைகளாக இருக்கும். அந்த பாரம் இருதயத்தைப் பிளக்கும், நொறுக்கும். இரத்த நாளங்கள் வெடிக்குமளவு அழுத்தம் நிறைந்திருக்கும். குனிந்து பிரசவிக்கும் பெண்ணைப் போல கர்ப்ப வேதனையோடு எழும்பும் ஜெபமாக அது இருக்கும்.

நாம் அவருடைய இருதயத்திற்கு அருகில் சென்று ஜெபிக்கப் பழுகும்வேளையில்தான் நம்மால் அவருடைய வலியைப் புரிந்து கொள்ள முடியும். தேவனைக் கொடுக்கிற ஒரு கருவியாகவே பார்த்து பழகிவிட்ட நாம் அவருடைய இருதயத்தைப் பார்க்க மறந்துவிட்டோம். நம்முடைய கண்களில் இருக்கும் செதில்கள் இந்நாட்களில் விழுந்தே ஆகவேண்டும். தேவனைத் துக்கப்படுத்தும் காரியங்கள் நம்முடைய உள்ளத்தை வேதனைப்படுத்த நம்மை அர்ப்பணிக்கும்போது தேவன் எதிர்ப்பார்க்கும் மகிமையான ஜெபத்தை ஏறெடுக்க நம்மாலும் முடியும் என்பதே மன்றாடுபவர்களுக்குக் கிடைக்கும் மாபெரும் பரிசு.

தேவனுடைய பாரத்தை அறிவோம்

- நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்... (எசே.22:30)
- ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல... (மத்.18:14)
- சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை... (எசே.18:32)

+ துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ, அவன் தன் வழிகளைவிட்டுத் திரும்பிப்பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம்... (எசே.18:23)

+ என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்... (ஓசி.4:6)

+ அக்கிரமாக்காரரில் ஒருவனுக்கும் அறிவு இல்லையோ? அப்பத்தைப் பட்சிக்கிறதுபோல, என் ஜனத்தைப் பட்சிக்கிறார் களே... (சங்.14:4)

+ எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்... (1தீமோ.2:4)

+ ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார்... (ஏசா.59:16)

+ யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்... (ஏசா.6:8)

+ நான் சோதோமில் ஐம்பது நீதிமான்களைக் கண்டால், அவர்கள் நிமித்தம் அந்த ஸ்தலமுழுதையும் இரட்சிப்பேன்... (ஆதி.18:26)

+ கர்த்தர் நமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்டார்... (யாத்.32:14)

+ வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம்பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருகஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ... (யோனா4:11)

+ என்னைவிட்டுத் தூரப்பட்டு, மாயையைப் பின்பற்றி, வீணராய்ப் போகிறதற்கு என்னிடத்தில் என்ன அநியாயத்தைக் கண்டார்கள்?... (எரே. 2:6)

+ நீ போய் வடதிசையை நோக்கிக் கூறவேண்டிய வார்த்தைகள் என்னவென்றால்: சீர்கெட்ட இஸ்ரவேலே, திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார், நான் உங்கள்மேல் என் கோபத்தை இறங்கப்பண்ணுவதில்லை, நான் கிருபையுள்ளவரென்று கர்த்தர் சொல்லுகிறார், நான் என்றைக்கும் கோபம் வைக்கமாட்டேன்... (எரே 3:12)

+ துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன், அவர் அவன்மேல் மனதுருகுவார், நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன், அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்... (ஏசா 55:7)

பாரம் சுமந்தவராய் திறப்பிலே நிற்போம்

பரமனின் இருதயம் அறிந்தே ஜெபிப்போம்

பரத்திற்கு நேராய் கண்களை ஏறெடுப்போம்

பாரம் நிறைந்தவராய் மன்றாடுவோம்

பரிந்துபேசி ஜனங்களுக்காகக் கெஞ்சுவோம்

பரிதபிக்கும் இருதயத்தோடு தொடர்ந்து போராடுவோம்

பாராளும் தேவனிடம் பாரதத்திற்காக அவர் பாதம் வீழ்வோம்

பரலோகம் சேர்த்திடும் வரையிலும் கண்ணீர் சிந்துவோம்

பரிசுத்தம் அடையும்வரை தேசத்திற்காக இடைவிடாமல் விண்ணப்பம் பண்ணுவோம்

ஜெபபாரம் குறையாத உள்ளம்தான் ஆத்துமாக்களுக்காக பற்றியெரிகிற உள்ளம்

– புத்தக ஆசிரியர்



அவசரமான / தீவிரமான ஜெப பாரம்

தாவீது அகிமெலேக்கைப் பார்த்து: இங்கே உம்முடைய
வசத்தில் ஒரு ஈட்டியானாலும் பட்டயமானாலும் இல்லையா?
ராஜாவின் காரியம் அவசரமானபடியினால்,
என் பட்டயத்தையாகிலும், என் ஆயுதங்களையாகிலும்,
நான் எடுத்துக்கொண்டுவரவில்லை என்றான்
(1சாமு.21:8)

ராஜாவின் காரியம் அவரசமானது என்று வேதம் சொல்கிறது. அதைப்பார்க்கிலும் நம்முடைய பரலோக இராஜாவின் காரியமே மிக அவசரமானதும், அவசியமானதும் கூட. சில சமயம் பரத்திலிருந்து

அவசரமான ஜெபக்குறிப்புகள் ஜெபவீரர்களுக்கு அனுப்பப்படுகிறது. அவற்றைச் சரியாய்ப் புரிந்துகொண்டு உத்தரவாதம் எடுத்து ஜெபிக்கும் பொழுது தேசத்தின்மேல் வரவிருக்கும் அழிவைத் தேவன் தடுத்து நிறுத்துகிறார், சிலரை விடுவிக்கிறார். சில நேரம் அவருடைய கோபமும் மாறிப்போகிறது. ஆகவே, ஜெபவீரன் ஒருவன் பரலோகம் தரும் ஜெபபாரத்தை அறிந்து உடனே ஜெபிக்க ஆயத்தமுள்ளவனாக இருக்க வேண்டும். எப்பொழுது வேண்டும் என்றாலும் தேவனிடத்திலிருந்து இந்த ஜெபஅழைப்பு வரலாம்.

“மறுநாளிலே இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து: நீங்கள் கர்த்தரின் ஜனங்களைக் கொன்றுபோட்டீர்கள் என்றார்கள்.

மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக்கூடாரத்துக்கு முன்பாக வந்தார்கள். அப்போது கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த சபையாரை விட்டு விலகிப்போங்கள், ஒரு நிமிஷத்தில் அவர்களை அதமாக்குவேன் என்றார். அவர்கள் முகங்குப்புற விழுந்தார்கள்.

மோசே ஆரோனை நோக்கி: நீ தூபவர்க்கம் இட்டு, சீக்கிரமாய் சபையினிடத்தில் போய், அவர்களுக்காகப் பாவநிவிர்த்தி செய், கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டது, வாதை தொடங்கிற்று என்றான்.

மோசே சொன்னபடி ஆரோன் அதை எடுத்துக்கொண்டு சபையின் நடுவில் ஓடினான்; ஜனங்களுக்குள்ளே வாதை தொடங்கியிருந்தது, அவன் தூபவர்க்கம் போட்டு, ஜனங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்து, செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே நின்றான்; அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது (எண் 16:14-48)

இஸ்ரவேலர் வனாந்திரத்திற்கு திரும்பிப் போனபோது, அவர்களில் சிலர் பெருமை கொண்டு மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டம் கூடி அவர்களுக்கு விரோதமாய் நிந்திக்க

ஆரம்பித்தார்கள். அந்தக் கூட்டத்தின் தலைவன் லேவி கோத்திரத்தைச் சேர்ந்த கோராகு என்பவன். அவனுடன் இஸ்ரவேலரில் பிரபலமான 250 தலைவர்களும் இணைந்து மோசேக்கு எதிர்த்து நின்று: நீங்கள் மிஞ்சிப் போகிறீர்கள், சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள், கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறாரே, இப்படியிருக்க கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள்? என்று கூறினார்கள். மோசே அதை கேட்ட போது, முகங்குபுற விழுந்தான். அவன் கோராகிடம், நாளைக்கு கர்த்தர் தம்முடையவன் இன்னான் என்றும், தம்மண்டையிலே சேர தாம் கட்டளையிட்ட பரிசுத்தவான் இன்னான் என்றும் காண்பிப்பார் என்று சொல்லி, லேவியின் புத்திரராகிய நீங்கள் தான் மிஞ்சிப்போகிறீர்கள். கர்த்தருடைய வாசஸ்தலத்தின் பணிவிடைகளைச் செய்யவும், சபையாரின் முன் நின்று அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளை செய்யவும், உங்களை தம்மண்டையிலே சேரப்பண்ணும்படி இஸ்ரவேலின் தேவன் இஸ்ரவேல் சபையாரிலிருந்து உங்களை பிரித்தெடுத்தது போதாதா? இப்பொழுது ஆசாரியப் பட்டத்தையும் தேடுகிறீர்களா? இதற்காக நீயும் உன் கூட்டதார் அனைவரும் கர்த்தருக்கு விரோதமாகவே கூட்டங்கூடினீர்கள். நாளைக்கு நாம் எல்லாரும் அவரவர் தங்கள் தங்கள் தூப கலசங்களை எடுத்து, அவைகளில் அக்கினியையும், தூபவர்க்கத்தையும் போட்டு கர்த்தருக்கு முன்பாக வந்து நிற்போம். தம்முடைய ஜனங்களை யார் வழி நடத்த வேண்டும் என்பதை கர்த்தர் தெரிந்தெடுப்பார் என்றான்.

பின்னர் மோசே தனக்கு எதிராகக் கூட்டத்தை ஏற்பாடு செய்த எலியாபின் குமாரனாகிய தாத்தானையும், அபிராமையும் அழைத்து அனுப்பினான். அவர்கள், நாங்கள் வருகிறதில்லை. இந்த வனாந்திரத்தில் எங்களைக் கொன்றுபோடும்படி, பாலும், தேனும் ஓடுகிற தேசத்திலிருந்து எங்களைக் கொண்டு வந்தது அற்ப காரியமோ? எங்கள்மேல் அதிகாரமும் பண்ணப்பார்க்கிறாயோ? இல்லை. நாங்கள் வருகிறதில்லை என்றார்கள்.

அவர்களுடைய மாறுபாடான சிந்தனைக்கு தேவன் வாக்குபண்ணின கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற தேசமாக இராமல், தாங்கள் அடிமையாக இருந்த எகிப்து தேசமே பாலும் தேனும் ஓடுகிற தேசமாகத் தோன்றியது. இதனிமித்தம் மோசேக்கு கடுங்கோபம் மூண்டது. அவன் கர்த்தரை நோக்கி: அவர்கள் செலுத்தும் காணிக்கையை அங்கீகரியாதிருப்பீராக. நான் அவர் களிடத்தில் ஒரு கழுதை முதலாய் எடுத்துக்கொள்ளவில்லை. அவர்களில் ஒருவனுக்கும் யாதொரு பொல்லாப்பு செய்யவும் இல்லை என்று குற்றமற்றவனாய் கர்த்தரைக் கெஞ்சி நின்றார்.

முன்பு கோராகு புத்திரரோடே பேசியிருந்ததுபோல மறுநாள் மோசேயும், ஆரோனும், மற்ற இருநூற்று ஐம்பது பேரும் தங்கள் தூபகலசங்களை எடுத்து, அவைகளில் அக்கினியையும், தூப வர்க்கத்தையும் போட்டு, ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக வந்து நின்றார்கள். அப்பொழுது கர்த்தருடைய மகிமை சபைக்கெல்லாம் காணப்பட்டது. கர்த்தர் மோசேயோடும், ஆரோனோடும் பேசி, இந்த சபையை விட்டுப் பிரிந்துபோங்கள். ஒரு நிமிஷத்திலே அவர்களை அதமாக்குவேன் என்றார். அப்பொழுது மோசேயும், ஆரோனும் முகங்குப்புற விழுந்து, ஒரு மனிதன் பாவம் செய்திருக்க, சபையார் எல்லார் மேலும் கடுங்கோபம் கொள்வீரோ என்று கெஞ்சினார்கள்.

அதற்கு கர்த்தர் கோராகு, தாத்தான் அபிராம் என்பவர் களுடைய வாசஸ்தலத்தை விட்டு விலகிப் போங்கள் என்று சபையாருக்குச் சொல். இந்த துஷ்டமனிதரின் சகல பாவங்களிலும் நீங்கள் வாரிக்கொள்ளாதபடிக்கு, அவர்களுக்கு உண்டானவை களில் ஒன்றையும் தொடாதிருங்கள் என்றார். எனவே எல்லாரும் விலகிப்போனார்கள். கலகத்திற்குக் காரணமான தலைவர்கள் வெளியே வந்து, தங்கள் பெண்ஜாதிகள் மற்றும் குழந்தைகளோடு தங்கள் கூடாரவாசலிலே நின்றார்கள்.

அப்பொழுது மோசே சபையாரை பார்த்து, இந்த கிரியை களையெல்லாம் செய்கிறதற்கு கர்த்தர் என்னை அனுப்பினார் என்றும், அவைகளை நான் என் மனதின்படியே செய்யவில்லை என்றும் எதினாலே அறிவீர்களென்றால், இவர்கள் மனிதர்கள் சாகிறது போல் வயதாகி, இயற்கையாக மரித்தால் கர்த்தர் என்னை அனுப்பவில்லை என்று அறிவீர்கள். ஆனால் பூமி தன் வாயைத் திறந்து உயிரோடே பாதாளத்தில் இறங்கத்தக்கதாக இவர்களையும் இவர்களுக்கு உண்டான யாவையும் விழுங்கிப்போட்டதேயானால் இந்த மனிதர் கர்த்தரை அவமதித்தார்கள் என்பதை அறிந்து கொள்வீர்கள் என்றான். அவன் இந்த வார்த்தைகளையெல்லாம் சொல்லி முடித்தவுடன், அவர்கள் நின்றிருந்த நிலம் பிளந்தது. பூமி தன் வாயைத் திறந்து அவர்களையும் அவர்கள் வீடுகளையும், கோராகுக்குரிய எல்லா மனிதரையும் அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப்போட்டது.

அவர்கள் எல்லாரையும் விழுங்கி பூமி மூடிக்கொண்டது. ஜனங்கள் பூமி நம்மையும் விழுங்கிப்போடும் என நினைத்து, பயந்ததினால் அலறியபடி ஒடினார்கள். பின்னர் அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, தூபங்காட்டின இருநூற்று ஐம்பது பேரையும் பட்சித்துப் போட்டது. அந்த மனிதர்கள் துணிகரம் கொண்டு கர்த்தருடைய சந்நிதியில் தூபங்காட்டியதால் தங்களுடைய அழிவைத் தாங்களே தேடிக்கொண்டு, கர்த்தருடைய அக்கினியால் பட்சிக்கப்பட்டார்கள்.

பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி, அக்கினிக்குள் அகப்பட்ட தூபகலசங்களை எடுத்து, அவைகளிலிருக்கிற அக்கினியை அப்பாலே கொட்டிப்போடும்படி ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலியேசருக்கு சொல். அந்த தூபகலசங்கள் பரிசுத்த மாயின. தங்கள் ஆத்துமாக்களுக்கே கேடுண்டாக்கின அவர்களது தூபகலசங்களைப் பலிபீடத்தை மூடத்தக்க தட்டையான தகடுகளாக அடிக்கக்கடவர்கள். அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் அவை களைக் கொண்டு வந்ததினால் அவைகள் பரிசுத்தமாயின.

ஆரோனுடைய சந்ததியார் மட்டுமே கர்த்தருக்கு முன்பாக தூபங்காட்டும்படிக்கு அவைகள் இஸ்ரவேல் புத்திரருக்கு அடையாளமாக இருக்கும் என்றார். இப்படியெல்லாம் நடந்திருந்தும் கூட இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து, நீங்கள் கர்த்தரின் ஜனங்களை கொன்றுபோட்டீர்கள் என்று சொல்லி ஆசாரிப்புக் கூடாரத்துக்கு நேரே பார்க்கிறபோது, மேகம் அதை மூடினது, கர்த்தரின் மகிமை வெளிப்பட்டது. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, இந்த சபையாரை விட்டு விலகிப்போங்கள். ஒரு நிமிஷத்திலே அவர்களை அதமாக்குவேன் என்றார். மோசேயும், ஆரோனும் முகங்குப்புற விழுந்தார்கள். மோசே ஆரோனிடம் சீக்கிரம் நீ தூபகலசத்தை எடுத்து, பலிபீடத்திலிருக்கிற அக்கினியை அதில் போட்டு, அதின் மேல் தூபவர்க்கம் இட்டு, சீக்கிரமாய் சபையினிடத்தில் போய், அவர்களுக்காக பாவநிவர்த்தி செய். கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டு, ஜனங்களை வாதைகளால் அடிக்கத் தொடங்கியது என்றான்.

ஆரோன் மோசே சொன்னபடியே செய்து, அதை எடுத்துக் கொண்டு சபையின் நடுவில் ஓடினான். ஜனங்களுக்குள்ளே வாதை தொடங்கியிருந்தது. அவன் தூபவர்க்கம் போட்டு ஜனங்களுக்காக பாவநிவர்த்தி செய்து செத்தவர்களுக்கும், உயிரோடிருந்தவர்களுக்கும் நடுவே நின்றான். அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது.

தேவன் நம்மை சில நேரங்களில் அவசரப்படுத்துவதையும், துரிதப்படுத்துவதையும் அறிந்து அதற்கு ஏற்றார்போல் ஜெபிக்கும் போது தேவன் தேசத்திற்கு இரக்கம் செய்வதைக் காண முடியும்.

"மோசே தீவிரமாய்த் தரைமட்டும் குனிந்து பணிந்துகொண்டு:
ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை
கிடைத்ததானால், எங்கள் நடுவில் ஆண்டவர் எழுந்தருளவேண்டும்.
இந்த ஜனங்கள் வணங்காக்கழுத்துள்ளவர்கள். நீரோ, எங்கள்
பாவத்தையும் மன்னித்து, எங்களை உமக்குச் சுதந்தரமாக
ஏற்றுக்கொள்ளும் என்றான்" (யாத்.34:8-9)

மன்றாட தீவிரப்பட்டவர்கள்

- மோசே, ஆரோன்... (எண்.16:41-48)
- ஆபிரகாம்... (ஆதி.18:22)
- லோத்... (ஆதி.19:22)
- யாக்கோபு... (ஆதி.32:24)
- எஸ்தர்... (எஸ்தர்4:16)
- எசேக்கியேல்... (எசே.9:8)
- எரேமியா... (எரே.12:1)
- எஸ்றா... (எஸ்றா9:5)
- எலிசா... (2இரா.6:17)

"முழங்காலில் நாம் ஜெபிக்க

நிற்கையில் அங்கே

ஏற்படுவது கடினமான வலி அல்ல

ஆச்சரியமான வழி!"



ஜெபம்...

நம்முடைய பாரமுள்ள ஜெபம்

ஆத்துமாக்களை பெற்றெடுக்கும்;

அழிவைத் தடுத்து நிறுத்தும்!

பரம தகப்பனின் பாரத்தைச் சுமக்க
நாம் அர்ப்பணிப்போமானால்,
நம் பாரங்களை அவர் சுமக்க ஆயத்தமே!

– புத்தக ஆசிரியர்

ஜெப பாரத்தைப் பெற்றுக்கொள்ளுவது எப்படி?

இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது, சிலநாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி...

(நெகே.1:4)

தேவன் நேரிடையாகப் பேசும்பொழுது...

"நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?"
(ஆதி.18:18)

சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும், நான் இறங்கிப்போய், என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின் படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன் என்று தம்முடைய உள்ளத்தில் சொன்ன தேவன் நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ என்று சொல்லி ஆபிரகாமிடம் தம்முடைய உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் வெளிப்படுத்துகிறார். தேவனுடைய பாரத்தை அறிந்த அவருடைய சிநேகிதனாகிய ஆபிரகாம் அவருக்குச் சமீபமாய்ச் சேர்ந்து: துன்மார்க்கனோடே நீதிமானையும் அழிப்பீரோ? சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாதிருப்பீரோ என்று சோதோம் கொமோரா பட்டணங்கள் அழிக்கப்படாதபடி பாரத்தோடு கெஞ்சி நிற்பதையும், அதற்கு அவர்: பத்து நீதிமான்கள்நிமித்தம் அதை அழிப்பதில்லை என்று கூறுவதையும் ஆதியாகமம் 18:20-32 வசனங்கள் கூறுகிறது. ஆனாலும், அங்கே பத்து நீதிமான்கள்கூட இல்லாததினால் அந்தப் பட்டணங்கள் அழிக்கப்பட்டன. தேசத்தில் நடைபெறும் கொடிய பாவங்கள் சர்வ வல்ல தேவனை எந்தளவிற்கு எரிச்சல் மூட்டுகிறது என்பதைப் பாருங்கள்.

அதேபோல், நோவாவின் நாட்களில்... பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால் நிறைந் திருந்தது. தேவன் பூமியைப் பார்த்தார்; அது சீர்கெட்டதாயிருந்து; மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியை கெடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி: மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது;

அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது; நான் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப்போடுவேன் என்று கூறுகிறார் (ஆதி.6:11-13). அப்படியே ஜலப்பிரளயத்தினால் பூமி அழிக்கப்பட்டது. ஜனங்களின் பாவத்தினால் உலகிற்கு நியாயத்தீர்ப்பு உண்டானது. திறப்பிலே நின்று மன்றாட எவரும் இராததினால் அழிந்துபோயிற்று. நீதியைப் பிரசங்கித்த நோவாவும், அவர் குடும்பமும் மாத்திரம் பேழையைக் கொண்டு காப்பாற்றப்பட்டது. பின்பு, நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி பலி செலுத்தினார். தேவன் அதனை சுகந்த வாசனையாக முகர்ந்து, இனி நான் மனுஷன்நிமித்தம் பூமியை சபிப்பதில்லை... என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார் (ஆதி.8:20-22). இதிலிருந்து தேவன் தம் ஜனத்தின்மேல் வைத்திருக்கிற நேசத்தைப் பார்க்க முடிகிறது. இதனை நன்கு அறிந்திருந்து பாவத்தினிமித்தம் நீதியுள்ள தண்டனை வழங்க தீவிரிக்கும் நியாயாதிபதியாகிய தேவன், தகப்பனுடைய இருதயம் கொண்டு தீங்குக்கு மனஸ்தாபப்பட்டு ஜனத்தை விடுவிப்பார் என்றெண்ணியே அவருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தார் ஆபிரகாம். ஆயினும், அவருடைய மன்றாட்டு போதுமானதாக இராததினால் அப்பட்டணங்கள் அக்கினியினால் அழிக்கப்பட்டன.

ஆனால், யாத்திராகமப் புஸ்தகத்தில் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள். ஆகையால் என் கோபம் இவர்கள்மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப்போடவும் நீ என்னை விட்டுவிடு; உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்கிறார். மோசே தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி: கர்த்தாவே, தேவரீர் மகா பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உம்முடைய ஜனங்களுக்கு விரோதமாக உம்முடைய கோபம் பற்றியெரிவதென்ன... என்று கெஞ்சிப் பிரார்த்திக்கிறார். அப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய

நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொள்கிறார் (யாத்.32:9-14) என எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய அங்கலாய்ப்பை மோசேயிடம் கூறியபோது, தேவனின் பாரத்தை உணர்ந்த மோசே தனக்குண்டான நித்திய ஆசீர்வாதத்தைக்கூட இழக்கத் துணிந்து திறப்பிலே நின்று மன்றாடினதினிமித்தம் தேவனுடைய உக்கிர கோபம் தணிந்து இஸ்ரவேலர் விடுவிக்கப்பட்டு காப்பாற்றப்பட்டார்கள். இப்படி தேவன் ஒரு மன்றாட்டு வீரனோடு நேரிடையாகப் பேசும்போது அவனுக்குள் ஏற்படுவதே ஜெப பாரமாகும். வேதத்தில் தேவன் நேரிடையாகப் பேசினபோது ஏற்பட்ட பாரத்தினால் மன்றாடிய சிலரது அனுபவங்கள் கீழே.

- இஸ்ரவேலர் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தபோது அவர் அதை மோசேயோடு பகிர்ந்துகொள்ளுகையில் மோசே தேவனின் இருதயத்தை அறிந்து கெஞ்சி மன்றாடுகிறார்... (யாத்.32:10)
- யாரை நான் அனுப்புவேன் என்கிற தேவனுடைய அங்கலாப்பின் சத்தத்தைக் கேட்ட ஏசாயாவுக்குள் அவரின் பாரம் கடந்துவருகிறது... (ஏசா.6:8)
- நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்று தேவன் சொல்லவே அவருடைய வேதனையை அறிந்த சாமுவேலுக்குள் பாரம் உண்டாகி தேவனை நோக்கி துக்கித்துக்கொண்டு இருந்தார்... (1சாமு.15:11)
- எருசலேமின் அருவருப்பான காரியங்கள் எவ்வளவாய் துக்கத்தை ஏற்படுத்தி விட்டது என்று தேவன் எசேக்கியேலோடு சொல்லிய போது அவருக்குள் உண்டானது ஜெபபாரம்... (எசே.8:5)

''தேசத்தின் மேன்மையான இரட்சிப்பு நம்முடைய முழங்காலில் தான் இருக்கிறது!''

தேசத்தைக் குறித்து கேள்விப்படும்பொழுது...

"என் சகோதரரில் ஒருவனாகிய ஆனானியும், வேறே சில மனுஷரும் யூதாவிலிருந்து வந்தார்கள்; அவர்களிடத்தில் நான் சிறையிருப்பில் மீந்துதப்பின யூதரின் செய்தியையும், எருசலேமின் செய்தியையும் விசாரித்தேன். இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது, சிலநாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி" (நெகே.1:4)

தன் சகோதரனான ஆனானியும், யூதாவிலிருந்து வந்த வேறே சிலரும்; சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்தத் தேசத்திலே மகாதீங்கையும் நிந்தையையும் அநுபவிக்கிறார்கள்; எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப் பட்டதுமாய்க் கிடக்கிறது என்று சொல்லப்பட்ட அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டவுடன்தானே நெகேமியா செய்வதறியாது உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து பரலோகத்தின் தேவனை நோக்கி... பிரார்த்திக்கிறதை நெகேமியா 1:2-11 வசனங்கள் கூறுகிறது.

தான் கேள்விப்பட்ட காரியத்தின் மூலம் நெகேமியாவுக்குள் ஏற்பட்ட தேவனுடைய பாரம் அவரைச் சில நாட்களாகத் துக்கித்து மன்றாட வைத்ததுபோல இக்கடைசி நாட்களில் செய்தித்தாள், தொலைக்காட்சி மற்றும் பிற ஊடகங்கள் வழியாக நம்மை வந்தடையும் கொடூரமான செய்திகள் மூலம் தேவன் நம்மை பாரப்படுத்துகிறார் என உணர்ந்து கொண்டோமென்றால் ஜெபபாரம் நமக்குள் அதிகமாகும். அந்த பாரம் பல மணி நேரங்கள் தேவனுடைய பாதத்தில் பாரத்தோடு ஜெபிக்க நம்மை ஊக்குவிப்பதாக இருக்கும்.

"எவரும் தொட முடியாத ஜெபத்தின் ஆழத்தை தொட்டவரும்; ஜெபத்திற்கு முகவரி தந்தவரும் இயேசுவே!"

சம்பவங்களைப் பார்க்கும்பொழுது...

"அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, நீ சுவரிலே துவாரமிடு என்றார்; நான் சுவரிலே துவாரமிட்டபோது, இதோ, ஒரு வாசல் இருந்தது. அவர் என்னைப் பார்த்து: நீ உள்ளேபோய், அவர்கள் இங்கே செய்கிற கொடிய அருவருப்புகளைப் பார் என்றார்" (எசே.8:8,9)

சம்பவத்தை அப்படியே எடுத்துரைக்கிறார் தீர்க்கதரிசி. அவர் உள்ளேபோய், சகலவித அருவருப்பான ஊரும் பிராணிகள், மிருக சுரூபங்கள் மற்றும் நரகலான சகல விக்கிரகங்கள் சுவரில் சித்திரந் தீர்க்கப்பட்டிருக்கிறதையும், மூப்பர்கள் அவைகளுக்கு முன்பாகத் தூபகலசத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறதையும், வாசல் நடையிலே தம்மூசுக்காக ஸ்திரீகள் அழுதுகொண்டிருக்கிறதையும், கிழக்கே புருஷர் சூரியனை நமஸ்கரிக்கிறதையும் காண்கிறார். இவ்விதம் யூதா வம்சத்தார் செய்து வந்த சகலவித அருவருப்புகளையும், அவர்கள் தேசத்தைக் கொடுமையினால் நிரப்பி அடிக்கடி தேவனைக் கோபமூட்டியதையும் பார்த்த எசேக்கியேலுக்குள் தேவனுடைய பாரம் ஜெபபாரமாக உருவெடுத்தது. அப்பொழுது அவர் ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் எருசலேமின்மேல் உமது உக்கிரத்தை ஊற்றுகையில் இஸ்ரவேலின் மீதியானவர்களை அழிப்பீரோ என்று தேவனை நோக்கி மன்றாடி ஜெபிக்கிறார். இப்படி நிகழும் சம்பவங்களை நேரிலோ, தரிசனத்திலோ பார்ப்பதன் மூலம் நம் இதயம் பாரமடைகிறது.

தேவதூதர்கள் மூலமாக...

"அப்படி நான் ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கும்போதே, முதல் தரிசனத்திலே நான் கண்ட புருஷனாகிய காபிரியேல், வேகமாய்ப் பறந்துவந்து, அந்திப்பலியின் நேரமாகிய வேளையிலே என்னைத் தொட்டான். அவன் எனக்குத் தெளிவுண்டாக்கி, என்னோடே பேசி: தானியேலே, உனக்கு அறிவை உணர்த்தும்படி இப்போது புறப்பட்டுவந்தேன்..." (தானி.9:21,22)

சிலவேளைகளில் தேவன் சில காரியங்களைத் தம்முடைய தூதர்கள் மூலமாக நம்மிடத்துக்கு அனுப்புகிறார். தேசத்தில் தாம் செய்ய இருக்கும் நியாயத்தீர்ப்பைத் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட மன்றாட்டு வீரர்களுக்குள் ஜெபபாரமாக வைக்கும்படி தூதர்களுக்குக் கட்டளையிடுகிறார். அதுபோலவே, திருச்சபைக்கு கொடுத்தனுப்ப வேண்டிய செய்தியையும், பாரத்தையும் அவரே தெரியப்படுத்துகிறார்.

+ பாபிலோன் தேசத்தில் அடிமைப்பட்டிருந்த இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்கப்படுவதைக் குறித்து... (தானி.9:10)

+ கடைசிகாலத்தில் சம்பவிக்க வேண்டியவைகளை யோவான் தூதன் மூலமாக வெளிப்படுத்தினார்... (வெளி.1)

ஆவியானவர் மூலமாக...

"நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்" (1கொரி.2:10)

தேசத்திற்காக தேவன் கொண்டிருக்கிற அவருடைய இதயத் துடிப்பையும், மனவேதனையையும், துக்கத்தையும் தம்முடைய ஆவியானவர் மூலமாக நமக்கு ஜெபபாரமாக கொடுக்கப்படுகிறது.

பரலோகம் செய்ய நினைக்கும் மகிமையான காரியத்தையும், திட்டங்களையும் பரிசுத்த ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்துகிறார். பாதாளத்தின் சதிமோசங்களையும், அதன் தந்திரங்களையும் வெளிப்படுத்தி அதற்காகப் போராடி ஜெயிக்க நம்மைத் தூண்டுகிறார்.

வேதத்தின் மூலமாக...

"தானியேலாகிய நான் எருசலேமின் பாழ்க்கடிப்புகள் நிறைவேறித்தீர எழுபதுவருஷம் செல்லுமென்று கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியோடே சொல்லிய வருஷங்களின் தொகையைப் புஸ்தகங்களால் அறிந்துகொண்டேன்" (தானி.9:2)

பரிசுத்த வேதாகமத்தில் வெவ்வேறு மனிதர்கள் பல்வேறு வித்தியாசமான சூழல்களில் ஜெபித்ததை நாம் வாசித்திருக்கிறோம். அவர்களில் ஒவ்வொருவர் செய்த ஜெபமும் வெவ்வேறு விதமான தனித்தன்மை கொண்டது. தேசத்திற்காகத் திறப்பிலே நின்று மன்றாடி ஜெபிப்பதில் தானியேல் ஒரு தலைச்சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். அவர் பாவம் எதுவும் செய்யவில்லை. எனினும் தனது தேசத்தின் பாவங்களைத் தேவனிடத்தில் அறிக்கையிடும்போதோ தன் பாவங்களையும் அறிக்கையிட்டு தேவஇரக்கத்திற்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் மன்றாடினார்.

தானியேலோவென்றால், எருசலேமின் பாழ்க்கடிப்புகள் நிறைவேறித் தீர எழுபது வருஷம் செல்லுமென்று கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியோடே சொல்லிய வருஷங்களின் தொகையைப் புஸ்தங்களால் அறிந்து கொண்டதிலிருந்து பாபிலோனியர்கள், பெர்சியர்கள் மற்றும் மேதியர்களிடமிருந்து தன் ஜென்ம தேசமாகிய இஸ்ரவேல் விடுதலையடைய வேண்டும் என்கிற பாரம் அவரை அழுத்தத் தொடங்கியது. தானியேல் வேதத்தை வாசித்ததின் மூலமாக தன் தேசத்திற்காகத் திறப்பிலே நின்று மன்றாட வேண்டியதின் அவசியத்தை அறிந்துகொண்டார். நான் உபவாசம் பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி, என் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணி, பாவ அறிக்கைசெய்து: ஆ, ஆண்டவரே, உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள் ளுகிறவர்களுக்கு உடன்படிக்கையையும், கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே என்று அவர் ஜெபிக்கத் துவங்கினதாக தானியேல் 9:3,4-ல் வாசிக்கிறோம்.

அதுபோல, பல சமயங்களில் வேதத்தை ஆழ்ந்து வாசிக்கிற பொழுது தேவன் தம் இதயத்தைத் திறந்து தம்முடைய பாரத்தை வெளிப்படுத்துகிறார். அதனைச் சரியாகப் புரிந்துகொண்டு மன்றாட அர்ப்பணிப்பது நம்மேல் விழுந்த பொறுப்பாகும்.

ஜெபத்தின் மூலமாக...

"இஸ்ரவேலின்மேல் சவுலை ராஜாவாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டதினிமித்தம், சாமுவேல் சவுலுக்காகத் துக்கித்துக் கொண்டிருந்தான். கர்த்தர் சாமுவேலை நோக்கி: இஸ்ரவேலின் ராஜாவாயிராதபடிக்கு, நான் புறக்கணித்துத் தள்ளின சவுலுக்காக நீ எந்தமட்டும் துக்கித்துக்கொண்டிருப்பாய்..." (1சாமு.15:35; 16:1)

ஜெபம் தேவனுடைய சமுகத்தைக் கிட்டிச்சேர வைக்கிறது. தேவனுடைய இருதயத்திற்கு அருகில் கொண்டு செல்கிறது. அவருடைய ஏக்கத்தையும், பாரத்தையும், அங்கலாய்ப்பையும் உணர்ந்துகொள்ள வைக்கிறது. தேவமனிதர் ஒருவர் இவ்விதம் கூறினார். நான் ஜெபிக்கச் சென்றால் அவருடைய இதயத்தில் உள்ளதை அறியுமட்டும் ஜெபத்தைவிட்டு எழுந்திருப்பதில்லை என. ஜெபம் என்பது நம்முடைய தேவையைத் தேவனிடம் திணிப்பதல்ல. அவருடைய உள்ளத்தில் இருப்பதை அறிவது. ஆகவே, ஜெபம் ஒன்றே சர்வவல்லவரோடே தொடர்பையும், நல்ல ஐக்கியத்தையும் உண்டாக்கும் என்பதை மறந்து விடக்கூடாது. அவர் நம்மோடு பேசுவதற்கான வழியும் அதுவே.

மேலும் சில காரியங்கள் மூலமாக...

தேசத்தில் ஒவ்வொருநாளும் நடைபெறுகிற காரியங்களைக் கூர்ந்து கவனித்தால் அதின் மூலம் நாம் ஜெபிக்க வேண்டிய ஜெபபாரத்தைத் தேவன் நமக்குத் தரக்கூடும்.

- பார்கின்ற மற்றும் கேட்கிற காரியங்கள் மூலம்...
- ஆவியில் உணரும் காரியங்கள் மூலம்...
- பாதிக்கப்படும் ஜனங்களைப் பார்ப்பதின் மூலம்...
- அனுதின நிகழ்வுகள் மூலம்...
- செய்திதாள், செய்தி சேனல்கள் மூலம்...
- தேவச்செய்தியைக் கேட்பதின் மூலம்...

பாரமில்லாமல் ஜெபிக்கின்ற ஜெபம்
தேவனின் பார்வையில் விலையேறப்
பெற்றதாக இருக்காது!

– புத்தக ஆசிரியர்

ஜெப பாரமின்மை

பாரம் இல்லையென்றால்...

+ நம்முடைய ஜெபம் தேவன் விரும்பாத ஜெபமாகவும், தேவன் எதிர்ப்பார்க்காத விண்ணப்பமாகவும்தான் இருக்கும்.
+ பாரம் இல்லாமல் ஜெபிப்பது ஜனத்திற்கும், தேசத்திற்கும் விரோதமாகச் செய்யும் மிகப்பெரிய பாவமாகும்.
+ பாரம் இல்லாமல் ஜெபிக்கிறவன் நரகத்தின் கதவுகளைத் திறக்கிறவனாகவும், பரலோகத்தின் வாசல்களைப் பூட்டு கிறவனாகவும் இருக்கிறான்.
+ பாரம் இல்லாமல் ஜெபிக்கிற கரிசனையற்றவனை நம்பி தேவன் எதையும் தருவதில்லை.

- பாரம் இல்லாமல் ஜெபிக்கிறவனிடத்தில் தேவன் தேசத்தில் செய்யும் எந்தக் காரியத்தைக் குறித்தும் பேசமாட்டார். அவனைக் கொண்டு எதையும் செய்யமாட்டார்.

- பாரம் இல்லாதவனின் ஜெபவாழ்வு சுயநலம் கொண்டதாகவும், உலகத்திற்கேற்றவைகளை தேடுகிறதாகவும் இருக்கும்.

- பாரம் இல்லாதவன் பாவங்களினிமித்தம் தேசத்தில் ஏற்படும் திறப்பைக் குறித்த, சத்துரு ஏற்படுத்தும் பாதிப்பைக் குறித்த கவலையற்றவன்.

- பாரம் இல்லாதவனின் ஜெபம் ஆத்துமாக்கள்மேல் கரிசனை யற்ற தன்மையையும், உத்தரவாதமற்ற நிலையையும் காட்டுவதாகும்.

- பாரம் இல்லாதவனின் ஜெபத்தில் எந்தவொரு தீவிரமும் இருக்காது; பரலோக அக்கினியும் இருக்காது.

- பாரம் இல்லாதவனின் ஜெபத்தில் சத்தம் இருக்கும். ஆனால். ஆவிக்குரிய தாக்கம் இருக்காது.

- பாரம் இல்லாதவனின் ஜெபம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வராதபடியினால் அது தேவனுடைய சமுகத்திற்குச் செல்வதற்கு வாய்ப்பில்லை.

- பாரம் இல்லாதவனின் ஜெபம் தேவனுடைய இருதயத்திற்குத் துக்கத்தையும், வெறுப்பையும் உண்டாக்கும். சாத்தானுக்கோ சந்தோஷத்தை ஏற்படுத்தும்.

- பாரம் இல்லாதவனின் ஜெபம் நீண்டநேர ஜெபமாக இருந்தாலும் தேவனிடம் அங்கீகாரம் பெறாது. அது நேரத்தை வீணாக்கும்.

- பாரம் இல்லாதவனின் ஜெபம் நரகம் நோக்கி விரைந்தோடும் ஜனங்களின் இரட்சிப்பிற்காகக் கிரியைச் செய்யமாட்டாத ஜெபமாகவே இருக்கும்.

+ பாரம் இல்லாதவனின் ஜெபம் பற்றியெரிகின்ற அக்கினியாக இராமல் ஈரமான கரிக்கட்டையாக இருக்கும்.

+ பாரம் இல்லாதவனின் ஜெபம் அனலுமின்றி, குளிருமின்றி இருப்பதால் தேவனால் வாந்திபண்ணப்படும் குப்பையாக இருக்கும்.

+ பாரம் இல்லாதவனின் ஜெபத்தையோ, அவனையோ பரலோகம் அங்கீகரிப்பதில்லை; ஏற்றுக்கொள்ளுவதும் இல்லை.

+ பாரம் இல்லாதவனின் ஜெபம் படைத்தவருக்கு முன்பாக மாய்மாலமான ஜெபமாக எழும்புவதால் அது அவனுடைய மடிக்கே திரும்ப வந்துவிடும்.

+ பாரம் இல்லாதவன் வரப்போகும் மகிமையான எழுப்புதலைக் குறித்த, பரலோகத்தின் திட்டத்தைக் குறித்த அக்கறையற்றவன்.

+ பாரம் இல்லாதவனின் ஜெபம் உட்பிரவேசியாதபடி தேவன் அதனுடைய வழியை அடைத்துப்போடுவார்.

+ பாரம் இல்லாதவனின் ஜெப சத்தமானது தேவனுடைய சமுகத்தில் அலறுகிறவனின் சத்தமாகவே இருக்கும்.

+ பாரம் இல்லாதவனின் ஜெபம் சர்வவல்லமையுடைய தேவனை நோக்கி பலவந்தம் செய்யாது, பதிலும் பெறாது.

+ பாரம் இல்லாதவன் தேவனுக்கேற்ற துக்கமில்லாதவனாகவும், அவருடைய பாரத்தை அறியாதவனாகவுமே இருப்பான்.

+ பாரம் இல்லாதவன் ஜெபிக்கத் தகுதியற்றவன். அவன் தேவனுக்கு முன்பாக நிற்கவும், விண்ணப்பஞ்செய்யவும் தகுதியில்லாதவனாக மதிப்பிடப்படுவான்.

தேவனிடத்திலிருந்து புதிதாகப்
பெற்றுக்கொள்ளுவதைவிட,
ஏற்கனவே பெற்றுக்கொண்டதைக்
காத்துக்கொள்ளுவதே கடினம்!

– புத்தக ஆசிரியர்

ஜெப பாரத்தைக் காத்துக்கொள்ளுவது எப்படி?

நான் தாவீதின் குடும்பத்தாரின்மேலும்,

எருசலேம் குடிகளின்மேலும்

கிருபையின் ஆவியையும்,

விண்ணப்பங்களின் ஆவியையும்

ஊற்றுவேன் (சக.12:10)

உன்னத தேவனை நோக்கி கதறும்போது ஜெபபாரத்தை தந்திடுவார்; ஆனால், அதைக் காத்துக்கொள்ளுவதுதான் கடினம்.

உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக் கொள் என்று 2தீமோ.1:14 சொல்கிறது. தேவன் நம்மை அனுதினமும் அற்புதமாகப் பாதுகாப்பராக இருப்பினும், நம்மிடம் விலைமதிக்க இயலாத அவருடைய பாரத்தைத் தந்திருக்கிறார். அதை மிகுந்த கவனத்துடனும், பொறுப்புடனும் காத்துக்கொள்ள வேண்டியது நம் பொறுப்பு. ஆதி தகப்பன் ஆதாம் தேவன் தன்னிடம் தந்த நற்பொருளைக் காத்துக்கொள்ளத் தவறினார் (ஆதி.2:15). விளைவு ஆதாமுக்கும் அவர் வழித்தோன்றலான மனிதகுலம் அனைத்திற்கும் மாபெரும் இழப்பு ஏற்பட்டது. எனவே, நமக்குள் அருளப்பட்ட ஜெபபாரத்தை எப்பாடுபட்டாகிலும் காத்துக்கொள்ள அதற்காகப் பிரயாசப்பட்டே ஆக வேண்டும்.

சிம்சோனைப்போல காத்துக்கொள்ளாமல் இழந்துபோனோர் ஏராளம் உண்டு. பெற்றுக்கொள்வதைவிட காத்துக்கொள்வது தான் கடினம். தங்களுக்குள் இருக்கும் ஜெபபாரத்தை அலட்சியம் செய்து, அற்பமாய் எண்ணி, சத்துருவினால் வஞ்சிக்கப்பட்டு போனவர்கள் ஏராளம் ஏராளம்.

ஜெபபாரத்தைப் பெற்றவர்கள் அநேகர். அதில் என்னால் முடியாது என்று விட்டுச் சென்றவர்கள் சிலர்; திருப்தியடைந்து பாதியில் நின்று விட்டவர்கள் பலர். அதன் மத்தியில் போராடி பிரயாசப்பட்டு காத்துக்கொண்டவர்கள் வெகு சிலரே.

காத்துக்கொள்ள...

+ ஜெபபாரம் என்பது தேவனுடைய இதயபாரம் நமக்குள் வைக்கப்படுவது. எனவே, உத்தரவாதத்தோடும், கரிசனை யோடும் எப்போதும் ஜெபிக்க நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.
+ தேவன் தருகின்ற ஜெபபாரத்திற்கு உண்மையாக ஜெபிக்க வேண்டும். உண்மையுள்ள அவன் பரிபூரண ஆசீர்வாதத்தை மட்டுமல்ல, தேவன் சகலத்தையும் அவனுக்கு வெளிப்படுத்துவார்.

+ தேவன் தம்முடைய இருதய வேதனையையே ஜெபபாரமாக அருளுவதால் அதற்கு மதிப்பளித்து, அதிக முக்கியவத்தையும், முதலிடத்தையும் தர வேண்டும்.

+ ஜெபபாரத்தைக் காத்துக்கொள்ள எந்த கிரயத்தையும் செலுத்த ஆயத்தமாக இருக்க வேண்டும். அது ஒருவேளை நேரமாக இருக்கலாம் (அ) தூக்கமாக இருக்கலாம்.

+ ஜெபபாரத்திற்காகச் சில வேளை உபவாசமிருந்து ஜெபிக்க வேண்டிய தருணம் ஏற்படலாம். அதற்கு மனப்பூர்வமாக இருக்க வேண்டும். அது சில மணிநேரம், ஒரு வேளை, இரண்டு வேளை, ஒரு நாள், ஏன்? அதற்கு அதிகமாகவும் இருக்க வாய்ப்புண்டு.

+ ஜெபபாரத்திற்காகத் தேவன் கிரியைச்செய்யும் வரை காத்திருந்து ஜெபிக்க வேண்டும். அவரே அந்த பாரத்தை எடுத்துப்போடும் வரை அவருடைய பாதத்தில் காத்திருக்க வேண்டும்.

+ ஜெபபாரத்திற்காகப் பரிசுத்த ஆவியானவரோடு இணைந்து ஜெபிக்க ஒப்புக்கொடுக்க வேண்டும். அவரே முழுமையாக ஆளுகை செய்யவும் விட்டுக்கொடுக்க வேண்டும்.

+ ஜெபபாரத்திற்காகத் தேவனுடைய இருதயத்திற்கு அருகில் வாழவும், அவரோடிணைந்து அனுதினமும் நடக்கவும் வாழ்வை மாற்றிக்கொள்ள வேண்டும்.

+ ஜெபபாரத்திற்காக இயேசுவைப்போல கடினமான நேரத்திலும் ஜெபித்துப் பழக வேண்டும். அந்த கிருபைக்காகத் தேவனிடம் பெலனை கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

+ ஜெபபாரத்திற்காக ஜெபத்தில் எப்போதும் நம் தேவையைவிட தேவனின் விருப்பத்திற்கே முதலிடம் தந்து ஜெபிக்க நம்மை முழுமையாகத் அவருடைய கரத்தில் தந்துவிட வேண்டும்.

+ ஜெபபாரத்தைத் தேவன் நம்மை நம்பி தந்த பின்பு நம்பிக்கைக்கு பாத்திரவானாக நடந்துகொள்ள வேண்டும்.

+ ஜெபபாரம் பெற்றவர்கள் ஒருபோதும் தேவனுடைய மனதிற்கு துக்கத்தையோ, வருத்தத்தையோ, ஏமாற்றத்தையோ கொடுக்காதபடிக்கு கவனமாக இருக்க வேண்டும். அந்த கிருபையை அவரிடமே கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

+ ஜெபபாரம் எச்சூழலில் கொடுக்கப்பட்டாலும் உடன்தானே ஜெபிப்பதற்கு நம் மனதையும், உடலையும் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

+ ஜெபபாரத்தில் கடமைக்காக ஜெபிக்காமல் கருத்தோடும், கரிசனையோடும், கண்ணீரோடும், காலம் தாழ்த்தாமல் ஜெபிக்க வேண்டும்.

+ ஜெபப்பாரத்தில் ஜெபித்த பின்பு தேவன் என்ன செய்கிறார் என்பதைக் கவனித்துப் பார்த்தால் அது உற்சாகத்தையும், ஊக்கத்தையும், விசுவாசத்தையும், இன்னும் அதிகம் ஜெபிக்கும் ஆர்வத்தையும் உண்டாக்கும்.

+ ஜெபபாரத்திற்காகத் தேவனின் இருதயத்தையும், விருப்பத்தையும் அறிந்து ஜனங்களுக்காக அவருடைய முகத்துக்கு முன்பாக நிற்க எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

+ ஜெபஅழைப்பிற்காக நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட அவருடைய சிநேகிதர் மற்றும் ஜனங்களுக்காக அவருக்கு முன்பாக எப்போதும் நிற்க வேண்டியவர்கள் என்கிற தெளிவு இருக்க வேண்டும்.

+ தேவகோபம் தேசத்தின்மீதும், ஜனத்தின்மீதும் மூளாதபடிக்கு கெஞ்சி ஜெபிக்க வேண்டிய நேரத்தில் அதற்கேற்றார்போல ஜெபிக்க எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

+ ஜெபபாரத்திற்காக எந்தக் கிரயம் செலுத்தவும், அதற்காக வாழ்க்கையையே அர்ப்பணிக்கவும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

ஏன் ஜெப பாரத்தை இழக்கிறோம்?

+ ஜெபபாரத்தை அலட்சியம் செய்யும்போது...
+ ஜெபபாரத்தில் கரிசனையற்று இருக்கும்போது...
+ ஜெபபாரத்திற்காக உத்தரவாதம்பண்ணாதிருக்கும்போது...
+ பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தும்போது...
+ உலகபாரத்தால் நிரப்பப்படும்போது...
+ ஜெபபாரத்திற்கு வேண்டிய தேவையான அளவு கிரயம் கொடுத்து ஜெபிக்காமல் இருக்கும்போது...
+ ஜெபபாரத்தைக் கடினமாக எண்ணும்போது...
+ பாவத்தில் விழும்போது...
+ தேவையில்லாத காரியங்களில் ஈடுபடும்போது...
+ தேசத்தைக்குறித்த கரிசனையில்லாதிருக்கும்போது...
+ அழிகின்ற ஜனங்களைக் குறித்து அறியாதிருக்கும்போது...
+ ஆவிக்குரிய தெளிவு இல்லாதிருக்கும்போது...

ஜெபம்...
தேசத்தில் மகிமையான கிரியைகள்
வெளிப்பட வேண்டியது
அந்தரங்க ஜெபமே!

தேசத்திற்காகத் திறப்பிலே நிற்போம்!
மன்னவன் மனமிரங்கும்படி
மனதுருகி மன்றாடுவோம்!!

– புத்தக ஆசிரியர்

ஜெப பாரத்தோடு

தேசத்திற்காகத் திறப்பிலே நிற்போம்!

நம்முடைய தேசமானது பெரிய ஜனநாயக நாடாக உள்ளது. இன்றைய நாட்களில் நடைபெறும் சம்பவங்கள், பெருகிவரும் பாவங்கள், பொருளாதார வீழ்ச்சிகள், வேலை வாய்ப்பின்மை, விவசாயிகள் தற்கொலை, தீவிரவாதம், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிரான பாலியல் குற்றங்கள், அதிகரிக்கும் ஊழல்கள், விபத்துக்கள், வியாதிகள் மற்றும் தேவனுடைய சபைக்கு ஏற்படும் உபத்திரவங்கள் போன்றவை தேசத்திற்காகத் தேவ சமுகத்தில் மன்றாடி ஜெபிக்க வேண்டியதன் அவசியத்தை நமக்கு

உணர்த்துகிறது. தேவப்பிள்ளைகளாக நாம் வாழும் காலத்தை நிதானித்தறிந்து, நமது தேசத்தின் மீட்பிற்காக உபவாசத்தோடும், அழுகையோடும், புலம்பலோடும், முழு இருதயத்தோடும் தேவனிடத்தில் திரும்ப அழைக்கப்படுகிறோம். அப்படி நாம் தேவனிடத்தில் திரும்பி, நம்மைத் தாழ்த்தி தேவசமுகத்தில் திறப்பில் நின்று ஜெபிக்கும்போது கர்த்தர் நமது தேசத்திற்காக வைராக்கியம் கொண்டு தம்முடைய ஜனத்தைக் கடாட்சிப்பது நிச்சயம் நிச்சயமே (யோவேல் 2:12-18)

மன்றாடி ஜெபிப்போம்

+ தேசத்தை ஆளுகிறவர்கள், அதிகாரத்தில் உள்ளவர்கள் தேவனால் வழிநடத்தப்பட... (1தீமோ.2:1,2; ரோம.13:1)
+ வலதுகைக்கும், இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத ஜனங்களின் இரட்சிப்பிற்காக... (யோனா4:11)
+ தேசத்தில் தேவமகிமை வாசமாயிருக்க... (சங்.85:9)
+ உண்மையானவர்கள் இருக்க. (சங்.101:6)
+ தேசஜனங்கள் தேவனால் நிர்மூலமாக்காதிருக்க... (செப்.1:18)
+ தேசத்தின் பாவங்களுக்காக... (நீதி.28:2)
+ தேசத்திலுள்ள ஜனங்களின் சிறையிருப்பு மாற... (ஓசியா7:1)
+ தேசத்திலுள்ள ஏழைகள் ஒடுக்கப்படாமல் இருக்க... (பிர.5:8)
+ சிறுமையானவர்கள், எளிமையானவர்களுக்காக... (நீதி.30:14)
+ தேசத்திலுள்ள அக்கிரமக்காரருக்காக... (சங்.101:8)
+ தேசத்திலுள்ள விபச்சாரக்காரருக்காக... (ஏரே.23:10)
+ தேசத்திலுள்ள ஓரினச்சேர்க்கையாளர்களுக்காக... (1இரா.14:24)
+ தேசத்தில் முறைகேடுகள் நடைபெறாதிருக்க... (எசே.23:48)
+ தேசம் தீட்டுப்படாதிருக்க... (ஏசா.24:5)
+ தேசம் பாழாகாதிருக்க... (ஏசா.62:4)

- ✦ தேசத்தில் அழிவும் நாசமும் வராதிருக்க... (ஏசா.60:18)
- ✦ தேசத்தல் திடுக்கிடும் காரியங்கள் நடவாதிருக்க... (எரே.15:30)
- ✦ தேசம் அக்கினிக்கு இரையாகாதிருக்க... (ஏசா.9:19)
- ✦ தேசம் கர்த்தருடைய சினத்தால் அந்தகாரப்படாதிருக்க... (ஏசா.9:19)
- ✦ தேசத்திலிருந்து விக்கிரக ஆவிகள் வெளியேற... (ஏசா.2:8; எரே.50:38)
- ✦ தேசத்தைப் பாழக்கும் சத்துரு வெளியேற... (எரே.4:7; சங்.74:3)
- ✦ தேசத்திலுள்ள எல்லா மனுஷருக்காக... (1தீமோ.2:4)
- ✦ தேசத்திலுள்ள ஜனங்களைத் தேவன் தருவதற்கு... (சங்.3:8; ஏசா.59:1; ஆதி.14:21)
- ✦ தேசத்தைத் தேவன் அழிக்காதிருக்க... (2சாமு.21:14; எசே.22:30)
- ✦ தேசத்தில் வறட்சி ஏற்படாதிருக்க... (1இரா.8:37)
- ✦ தேசத்தில் மழையைத் தேவன் கட்டடையிட... (1இரா.8:36)
- ✦ தேசத்தில் பஞ்சம் ஏற்படாதிருக்க... (1இரா.8:37)
- ✦ தேசத்தில் வியாதிகள் வராதிருக்க... (1இரா.8:37)
- ✦ தேசத்தில் கொள்ளை நோய் உண்டாகாதிருக்க... (1இரா.8:37)
- ✦ தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக... (உபா.33:10-17)

இன்னும் இதுபோன்ற பல்வேறு காரியங்களுக்காக, அன்றாடம் செய்தித்தாள்களில் வெளிவரும் பல காரியங்களுக்காக மற்றும் தேவன் பாரப்படுத்துகிற, தரிசனங்களில், சொப்பனங்களில் காண்பிக்கிற ஜெபக்குறிப்புகளுக்காகக் கருத்தாய் திறப்பிலே நிற்போம்! தேசம் நம் கையில்!! ஆமென்!!!

அர்ப்பணிப்போருக்காக

எழுப்புதலைக்

காணும்வரை

கண்ணீர் வற்றாது !

இந்திய தேசத்தைத் தேவன் மாபெரும் எழுப்புதலுக்கு நேராக நடத்தி வருவதை நம்முடைய காலங்களில் காணமுடிகிறது. வரப்போகும் எழுப்புதலில் நம்முடைய கண்ணீரின் ஜெபமே பெரும் பங்கு வகிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதனை வாசிக்கிற உங்களை அன்பாய்க் கேட்கிறேன். தேவன் தரும் பாரத்தை உணர்ந்து கண்ணீரோடு ஜெபிக்க உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்.

ஒரு முறைதான் பிறந்தோம்...

ஒருமுறைதான் வாழ்கிறோம்...

ஒருமுறைதான் மரிக்கப்போகிறோம்...

நம் கையில் தரப்பட்டிருப்பது ஒரு வாய்ப்பு தான். அதனைச் சரியாகப் பயன்படுத்துவோமானால் அவருக்காகவும், அவருடைய இராஜ்ஜியத்திற்காகவும் பெரிய காரியங்களைச் செய்ய முடியும்! இந்த இல்வாழ்க்கையில் தான் உன்னத தேவனின் பாரங்களைச் சுமந்து கண்ணீரோடு ஜெபிக்க முடியும்! அடுத்த ஒரு வாழ்க்கை பூமியில் இல்லை. ஆகவே, ஆத்துமாக்களின் மீட்பிற்காக கண்ணீர் வடிப்போம்! மகத்தான எழுப்புதலைக் காண்போம்!! உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும் இப்புத்தகத்தை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்! அவர்களையும் கண்ணீரோடு ஜெபிக்கிறவர்களாக மாற்றுங்கள்!!

தேவஊழியன் **அகஸ்டின் S. சச்க்குமார்**

Prayer BURDEN

பரம தகப்பனின் இதயப் பாரத்தை அறிந்து திறப்பிலே நின்று ஜெபிக்கும்போதுதான் தேசத்தில் நாம் எதிர்ப்பார்த்திருக்கும் எழுப்புதலைக் காண முடியும். வலி இல்லாமல் ஏறெடுக்கப்படும் ஜெபங்களால் தேசத்தில் எந்தவொரு தாக்கத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது.

உயிருள்ள ஜெபங்களைத் தேவன் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார். அவைகள்தான் ஜீவனைப் பெற்றெடுக்க முடியும். இன்று மன்றாடாத அநேகர் கர்ப்பந்தரித்து காற்றை பெற்றெடுக்கிறதைப் போல் இருக்கிறார்கள். இது தேசத்தில் எந்தவொரு மறுரூபத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. தேவனின் பாரத்தை ஜெப பாரமாகப் பெற்ற ஜெபவீரன் தேசத்திற்காக கரிசனையோடும், கண்ணீரோடும் கதறி ஜெபிக்கும் போதுதான், நாம் எதிர்ப்பார்த்திருக்கும் எழுப்புதலை கண்களால் காணமுடியும் என்பதே மறுக்க முடியாத உண்மை!

Holy Jesus Prayer Ministries
INTERCESSORY PRAYER MINISTRIES
SY No: 152/1A, Jayalakshmi Complex,
Opp: to NTR Nagar, 4th Cross,
100ft Ring Road, Mookandapalli,
Hosur - 635 126, Tamilnadu, India
holyjesusprayerministry@gmail.com
Phone Nu: 04344 610973